# தமிழின் மறுமலர்ச்சி

3038

PRESENTED

எஸ். வையாபுரிப் பிள்ளை

# தமிழின் மறுமலர்ச்சி

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION,
PAGANERI.

# தமிழின் மறுமலர்ச்சி

★

எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.,

சென்னை ஸர்வகலாசாலைத் தமிழ் லெக்ஸிகன்பதிப்பாசிரியர் 1926-'36
சென்னைஸர்வகலாசாலைத் தமிழ்-ஆராய்ச்சித்துறைத் தலைவர் 1936-'46
திருவிதாங்கூர் ஸர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் 1951-'54.

★

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION, PAGANERI.

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு: செப்டெம்பர் 1947
இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி 1953
மூன்றும் பதிப்பு: ஏப்ரல் 1955

விலை ரூ. 2-8-0

சங்கர் பிரிண்டர்ஸ், 114, பிராட்வே சென்னை-1.

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1 | தமிழின் மறுமலர்ச்சி | ... | 1 |
| 2 | விடுதலை வேண்டும்! | ... | 16 |
| 3 | தமிழும் சுதந்திரமும் | ... | 22 |
| 4 | பாரதி யுகம் | ... | 33 |
| 5 | பாரதியும் தமிழும் | ... | 37 |
| 6 | நவீன கீதை | ... | 50 |
| 7 | தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி | ... | 54 |
| 8 | தமிழிற் சொல் வளர்ச்சி | ... | 66 |
| 9 | தமிழில் வசன நடை | ... | 81 |
| 10 | வளரும் மொழி: உரை நயம் | ... | 97 |
| 11 | தமிழ்ப் பாட்டும் இசையும் | ... | 109 |
| 12 | மறுமலர்ச்சியும் கவிமணியும் | ... | 118 |
| 13 | புதிய இலக்கியமுறை | ... | 129 |
| 14 | புதிய இலக்கணம் | ... | 141 |
| 15 | தமிழும் எதிர்காலமும் | ... | 151 |

# முதற்பதிப்பின் முன்னுரை

இந்நூலிலுள்ள கட்டுரைகள் பெரும்பாலும் தமிழின் மறுமலர்ச்சியைப் பற்றியன. எனவே இந்தப் பெயராலேயே இவை இப்போது வெளியாகின்றன.

குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஓர் இடத்தில், குறிப்பிட்ட ஒரு பெயரைச் சூட்டி ஒவ்வோர் இயக்கம் இப்போது தொடங்குவதை நாம் பார்க்கிறோம். இது போன்றதன்று மறுமலர்ச்சி. வெகுகாலமாக வெளியிற் புலப்படாதேயிருந்து அமைதியாய்ப் பரவி, சமுதாயத்தை உள்ளூர இயக்கிவரும் பல சக்திகள், சிற்சில காரணங்களால் திடீரென்று வேகங்கொண்டு எழுந்து, முழு வன்மையோடு சிலர் வாயிலாக வெளிப்பட்டு, சமுதாய முழுவதும் அதிர்ந்து எதிரொலிக்கச் செய்து, மேற்கதியில் விரைந்து பாயும் நிலைமையே மறுமலர்ச்சி.

தமிழுலகில் இந்த மறுமலர்ச்சி சென்றுள்ள நெறி கவனித்தற்குரியது. வெகுகாலமாக, பல நூற்றாண்டுகளாக, ஜீவநதியாய் ஓடிக்கொண்டிருந்த தமிழ் கம்பன் காலத்தில் பெருக்கெடுத்துப் பாய்ந்து தனது பூரண எல்லையை அடைந்தது. பின்னர் சிற்றாறுகவும், வாய்க்கால்களாகவும், ஓடி ஒருவாறு உயிர் வாழ்ந்து வந்தது. இதன் பின்னர், சேற்று நிலங்களில் இறங்கித் தேங்கி அங்கங்கே கட்டுக் கிடையாய் நின்றது. பௌராணிக சமயமே நான் இங்கே கருதிய சேற்று நிலம். இச்சமயமும், பிற்காலச் சமய நெறி நூல்களும், இவைபற்றி எழுந்த வாதப் பிரதிவாதங்களும், இலக்கணங்களும், உரைகளும், கண்டனங்களும், இவற்றிற்கு இடங்கொடுத்து வந்த மனப்பான்மையும் தமிழை நசித்துக்கொண்டிருந்தன. வடமொழியும் இந் நாசத்துக்குத் துணைபுரிந்தது. அறிவு சுதந்திரமாக இயங்க இடமில்லை. சுமார் 100 வருஷங்களுக்கு முன்வரை கட்டுக்கிடை வாழ்வில் நமது தமிழுலகு பிணிப்புண்டிருந்தது. இவ்வாறு அசைவின்றிக் கட்டுக் கிடையாய் நின்ற தமிழும் அறிவும் புத்துயிர் பெற்று, புதிய நெறிகளில் செல்வதற்கு நமது கலைப் பண்பாடு

களினின்றும் முற்றும் வேறுபட்ட ஒரு கலைப் பண்பாட்டின் தூண்டுதல் அவசியமாயிருந்தது. ஆங்கிலேயரது கூட்டுறவினால், இத் தூண்டுதல் நமக்குக் கிடைத்தது. புதிய விஞ்ஞான அறிவு சிறிது சிறிதாகப் புகுந்து, தமிழுலகை உள்ளும் புறமும் புதைத்திருந்த இருட்படலத்தைக் கீறி நீக்குவதாயிற்று. புதிய இலக்கிய முயற்சியும் தலைகாட்டத் தொடங்கிற்று. ஆனால் பழைய எமன் போய், புதிய எமன் வந்து தோன்றிய கதையாய் முடிந்தது. ஆங்கிலேயரது கூட்டுறவு வரவர நெருங்கி, முடிவில் அவர்கள் நமக்கு எஜமானராகவும், நாம் அவர்களுடைய அடிமைகளாகவும் ஆகிவிட்டோம். இந்த அடிமைத்தனம் எவ்வகையிலும் நம்மைக் கீழ் நிலையில் தள்ளி நமக்குக் கேடு தருவதாயிற்று. கல்வி போலிக் கல்வியாயிற்று; அறிவு போலியான பகட்டு அறிவாயிற்று ; கலைப்பண்பாடு போலிக் கலைப்பண்பாடு ஆயிற்று; தமிழும் போலியாயிற்று ; நமது வாழ்வே போலியாய் முடிந்தது! அடிமைத்தனம் ஒழிந்தாலன்றி நமக்கு உய்தியில்லை என்பது தெளிவாயிற்று. இவ் உணர்ச்சியின் விளைவாகத் தேசீயக் கிளர்ச்சி தோன்றிற்று. ராஜபக்தி, தெய்வபக்தி, குருபக்தி முதலியன எல்லாம் தேசபக்தியில் அடங்கிவிட்டன. 'வந்தே மாதரம்' என்பதே நமது தாரக மந்திரமாகக் கொள்ளப்பட்டது. இத் தேசீய மறுமலர்ச்சியில் ஈடுபட்டு, தேசீய ஸேவையில் பேரார்வம் கொண்டு பெரு முயற்சி செய்து வந்தவர்களுள் ஒருவர் பாரதி. ஆனால் வாய்ப்பூட்டு, கைப்பூட்டு முதலியன பூட்டி, அடக்குமுறை அமுலினால் நம் அடிமைத்தனத்தை நமக்கு அடிக்கடி உணர்த்தி, ஆங்கில அரசு நிகழ்ந்துவந்த காலம் அது. பாரதியின் முயற்சி தடைப்பட்டது; ஆனால் ஆர்வம் சிறிதும் தளரவில்லை. இந்த ஆர்வம் அவருடைய ஆத்மசக்தி முழுவதும் பெற்றுத் தமிழின் மீது சென்றது. தமிழ் புத்துயிர் பெற்றது. சங்க காலத்திற்குப் பின் இதுவரை யில்லாத தன்மதிப்போடும், ஆண்மையோடும், ஊக்கத்தோடும் தலை நிமிர்ந்து பெருமிதத்துடன் செல்வதாயிற்று. இப்பெருமிதம் அகங்காரத்தால் வந்த தன்று. நீண்டகாலமாய் 'ஏமப் பெருந்துயில் மந்திர'த்திற் பட்டுக் கிடந்த தமிழ் விழித்துக்கொண்டது; தன்னை உணர்ந்

தது. விஞ்ஞானப புத்தறிவினுல்தான் உரம் பெறுதல் வேண்டும் என்ற கடமையையும் உணர்ந்தது. தமிழின் மறுமலர்ச்சி வெளிப்படையாகத் தோன்றிற்று. தேசம் சுதந்திர சூரியனைக்கண்டு ஏற்றெழுந்த சமயத்தே, தமிழும் புதிதாக மலர்ந்து இனிய மணம் கமழ்வதாயிற்று.

இம் மறுமலர்ச்சியை விகசிக்கச் செய்த பாரதியைப் பற்றியவை இந்நூலில் மூன்று (4, 5, 6) கட்டுரைகள்.

ஆனுல் பூர்வ வாசனை எளிதில் நீங்குவதில்லை என்று கூறுவர் நமது தேசத்து ஞானியர்கள். இதற்கு ஓர் உவமானமும் கூறுவார்கள் :

**இங்குளி வாங்கும் கலம்போல ஞானி பால்**
**முன்செய் வினைமாயை மூண்டிடினும்**

என்று சிவஞானபோத வெண்பா கூறும். இங்கே 'இங்குளி' என்ற வட சொல்லுக்குக் காயம் என்று பொருள். காயம் வைத்திருந்த பாண்டத்தில், அக் காயத்தை எடுத்துவிட்ட போதிலும், அதன் மணம் இருப்பதுபோல் பூர்வ வாசனையும் ஞானியரிடத்து நிற்ப தாகுமாம். இதுபோல, தமிழின் பூர்வ வாசனை அதன் முற்போக்கிற்கு இடையூருய் அமைந்து மறுமலர்ச்சியின் மணத்தைத் தடைப்படுத்திவந்தது. இப் பூர்வவாசனை, இரண்டுவகை : ஒன்றுகொள்கை, பிறிதொன்று செயல். பழந்தமிழ் வாதம், இலக்கண வாதம், வடமொழி வாதம் முதலாகிய பல கொள்கைகள் தமிழுலகில் புகுந்து தமிழுக்குப் பிணியாயிருந்தன. இவ்வகைக் கொள்கைகள் ஒழிந்து நல்லறிவு உதயமாய்த் தமிழ்மக்கள் தங்கள் தாய் மொழியைப் போற்ற வேண்டும் என்பதுதான் முதற் கட்டுரையின் பொருள். இனி, கொள்கை யளவில் நில்லாது, செயலிலும் புகுந்து தமிழுக்குக் கேடுபயக்கும் சில முறைகளைக் கூறி, அவற்றினின்றும் தமிழ் விடுதலை பெறவேண்டும் என்று இரண்டாவது கட்டுரையில் வற்புறுத்தியிருக்கிறேன். பாரதியும் ஏனைய தேசபக்தர் களும் கனவு கண்டு கொண்டிருந்த சுதந்திரம் கிடைத் துள்ள நிலைமையில் தமிழுக்கு வேண்டும் சுதந்திரத்தைப்

பற்றியது மூன்ருவது கட்டுரை. இவை மூன்று கட்டுரைகளும், பாரதியின் மறுமலர்ச்சிக்குப் பூர்வாங்கமாக வைக்கப்பட்டுள்ளன.

இனி மறுமலர்ச்சியிலே உடனே செய்யவேண்டும் சில சீர்திருத்த முறைகளை மூன்று கட்டுரைகளில் (7, 8, 9,) விவரித்திருக்கிறேன். ஏழாவது கட்டுரை எழுத்துப் பற்றியது; எட்டாவது கட்டுரை சொல்பற்றியது. ஒன்பதாவது கட்டுரை வசனம் பற்றியது. இவற்றை அடுத்து மறுமலர்ச்சியின் ஒரு கூருகக் கொள்ளத்தக்க இசைக்கலை வளர்ச்சி தமிழ்ப் பாடலுக்கு உதவியுள்ள முறையை விளக்கியிருக்கிறேன்.

மறுமலர்ச்சியின் ஒரு பகுதி புத்தறிவும், சுதந்திர உணர்ச்சியும், அயல்நாடுகளுடன் தொடர்புகொண்டு உலகெங்கும் சமாதானம் நிலவ வேண்டும் என்ற பேரவாவுமாம்; காலம் இடம் முதலிய தொடர்பு யாதுமின்றி, மனிதனை மனிதன் என்ற நிலையிற்கொண்டு, அவனது நலத்தைப் பேணுதல் மறுமலர்ச்சியின் மற்ருெரு பகுதியாம். மக்கள்-நலம் பேணும் இக்கொள்கையைப் புத்த சரித்திர வாயிலாகவும், பிற நூல்களாலும் தமிழ் மக்களுக்கு அறிவுறுத்து, அதில் ஈடுபட்டுக் கனியும்படி கவிகள் இயற்றியவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. இவரைப் பற்றியது இந் நூலின் பதினென்ருவது கட்டுரை.

புத்தறிவின் வளர்ச்சிக்குக் கல்வி பரவுதல்வேண்டும். கல்வியைப் பரக்க விதைப்பதற்குச் சிறந்த கருவி நூல் நிலயங்கள். இந் நூல் நிலயப் பிரசாரத்தைப் பற்றியதே பன்னிரண்டாவது கட்டுரை. பதின்மூன்ருவது கட்டுரை மறுமலர்ச்சியிலே சொல்-ஆராய்ச்சி நிகழவேண்டும் முறையைச் சம்பாஷணை வாயிலாகக் காட்டியிருக்கிறேன். மொழி நூல் ஆராய்ச்சியைச் சிலர் இப்போது செய்துவரும் முறை இறுதிக்கட்டுரையால் விளங்கும்.

இக்கட்டுரைகள் பத்திரிகைகளில் ஏற்கெனவே வெளிவந்தவை. இவற்றின் தலைவர்களுக்கு எனது நன்றி.

எனது இலக்கிய முயற்சிகளில் பிரதி செய்தல் ஒப்பு நோக்குதல் முதலிய பல உதவிகள் செய்துவரும் வித்வான் திரு. எம். சண்முகம் பிள்ளை இக்கட்டுரைகளைப் பதிப்பித்தலிலும் ஒத்துழைத்தனர். அவருக்கு என் அன்பு நிறைந்த ஆசி.

இந்நூலை வெகு விரைவில் நன்றாக அச்சிட்டுதவிய கபீர் பிரஸ் அதிபருக்கு எனது நன்றி.

சென்னை
8-9-47

எஸ். வையாபுரிப் பிள்ளை

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

இந் நூலின் முதற்பதிப்பு 1947-ல் நெல்லை நவபாரதி பிரசுராலயத்தாரால் வெளியிடப் பட்டது. இப்பதிப்பு தீர்ந்து வெகு காலமாகி விட்டது. இந்நூலைப் பலரும் மிக மிக விரும்புவதால் இரண்டாம் பதிப்பு இப்பொழுது வெளிவருகிறது.

முதற்பதிப்பில் இறுதியில் சேர்த்துள்ள மூன்று கட்டுரைகளும் மறுமலர்ச்சியோடு நேரடியான தொடர்புடையன அல்ல என்று சிலர் கருதலாம். எனவே, அக் கட்டுரைகளை நீக்கி, இப்பொழுது வேறு நான்கு கட்டுரைகள் சேர்த்துள்ளேன். இவை, வளரும்மொழி: உரை நயம், புதிய இலக்கியமுறை, புதிய இலக்கணம், தமிழும் எதிர் காலமும் என்பன.

மறுமலர்ச்சித் தமிழில் வளரும் மொழி: உரை நயம் என்பது ஒன்பதாவது கட்டுரையாகிய வசன நடைக் கருத்தோடு பெரிதும் ஒத்திசைந்து செல்வது. புதிய இலக்கிய முறை, புதிய இலக்கணம் என்ற இரண்டு கட்டுரைகளும் மறுமலர்ச்சியில் தமிழறிஞர்கள் கைக்கொள்ளவேண்டும் இரண்டு பெரிய முயற்சிகளைக் குறித்து எழுந்தன. தமிழும் எதிர்காலமும் என்பது மறுமலர்ச்சியின் விளைவாகத் தமிழ் எதிர்காலத்தில் ஒழுகும் நெறிபற்றிக் கூறுவது. இவைகள் தமிழின் மறுமலர்ச்சியோடு மிக நெருங்கிய தொடர்புடையனவாதல் வெளிப்படை.

இக் கட்டுரைகளும் ஏற்கெனவே பத்திரிகைகளில் வெளி வந்தனவே. இப்பத்திரிகைகளின் தலைவர்களுக்கு எனது நன்றி.

இந் நூலில் அமைந்த கட்டுரைகளெல்லாம் பலவேறு காலங்களில் எழுதப்பட்டவை. இவற்றுள் சில கருத்துக் களும், செய்யுட்களும், மேற்கோள்களும் சிற்சில இடங் களில் மீண்டும் வருகின்றன. அவை வெவ்வேறு நோக்க மும் பயனும் கருதிக் கொடுக்கப் பட்டுள்ளன. ஆதலின், அவற்றை இங்கு மாற்றி அமைக்க வில்லை.

முதற்பதிப்பிற் போலவே இப்பதிப்பிலும் எனக்குப் பெரிதும் துணை புரிந்தவர் சென்னை ஆர்ட்ஸ் காலேஜ் தமிழாசிரியர் திரு. வித்வான் **எம். சண்முகம் பிள்ளை** ஆவர். அவருக்கு என் அன்பு நிறைந்த ஆசி.

இக் கட்டுரைத் தொகுதியையும் இன்னும் நான் எழுதியுள்ள கட்டுரைகள் முதலியவற்றையும் போற்றி மனமுவந்து வெளியிட்டு வரும் பாரி நிலயத்தாருக்கு எனது நன்றி.

திருவனந்தபுரம்
ஸர்வகலாசாலை
2—2—53

**எஸ். வையாபுரிப் பிள்ளை**

# மூன்றும் பதிப்பின் முன்னுரை

இரண்டாம் பதிப்புப் பிரதிகள் தீர்ந்து சிலமாதங்கள் ஆகிவிட்டன. இப்போது மூன்றும் பதிப்பு வெளிவருகிறது.

இது பெரும்பாலும் இரண்டாம் பதிப்பின் மறுபதிப்பே.

இதனை அச்சிடுங் காலத்து உதவி புரிந்தவர் எனது புத்திரி வித்வான் ஸ்ரீமதி ஸரோஜி அம்மை. அவருக்கும் வெளியிட்ட பாரி நிலயத்தாருக்கும் எனது நன்றி.

25-4-55
சென்னை

**எஸ். வையாபுரிப் பிள்ளை**

1

# தமிழின் மறுமலர்ச்சி

ஒவ்வொருவனும் தன் தாய் மொழியின் மீது பேரன்பு கொண்டிருத்தல் முற்றும் இயற்கையே. பேரன்பு கொள்ளுதல் என்பது மொழியின் பெருமையை மட்டும் கூறி அதனோடு அமைந்து விடுவதல்ல. உலகத்தில் வழங்கும் மொழிகளெல்லாம் இடைவிடாது மாறிக் கொண்டும் வளர்ந்து கொண்டும் வரும் இயல்புடையன. இவ் வளர்ச்சிக்குத் தடையாக மேற்குறித்த அன்பு இருக்குமானால், அவ்வகை அன்பு நெறிதவறிய அன்பு என்றுதான் நாம் சொல்லவேண்டும். குழந்தையை அதன் தாய் மிகவும் அன்போடுதான் போற்றி வருவாள். அதனோடு, அவளுக்குத் தன் குழந்தை மேன்மேலும் விருத்தியாக வேண்டும் என்ற ஆசையும் இருத்தல் இயல்பல்லவா?

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்**

என்ற திருக்குறள் இத் தாயன்பை உட்கொண்டதாகும். தனது குழந்தையைக் கெடுக்க வேண்டும் என்ற நோக்கமுள்ள தாய் அதனை அதன் முன்னிலையிலேயே அதற்கு மிஞ்சிய அழகும் அறிவுமுள்ள குழந்தை கிடையாது என்று புகழ்ந்து பாராட்டினால் போதும்; வேறு வினை வேண்டாம். இதுபோன்றதுதான், தாய்மொழி மீதுள்ள அன்பு காரணமாக, தமிழுக்கு முழுமுதல்—தன்மை கற்பித்து அதைப்போன்ற சிறந்த மொழி உலகத்திலேயே இல்லையென்று சொல்வதும். எல்லா வகையான அம்சங்களிலும் அது பரிபூரண நிலையை அடைந்து விட்டது என்று

சொல்வது நமது அருமைத் தாய்மொழிக்குக் கேடு விளைப் பதேயாகும்.

குழந்தைக்கு உணவு கொடுக்காமல், அதன் அழகைப் புகழ்ந்து கொண்டுமட்டும் இருந்தால், அதன் உடலும் அறிவும் வலிவுற்று வளர்ந்துவிட மாட்டா. இங்ஙனமே தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உதவுவனவற்றைச் செய்யாது, அதன் தொன்மையையும் பெருமையையும் பற்றியே நம்மவர்கள் பேசிக்கொண்டிருந்தால், அது முன்னேற்றம் அடைந்துவிட மாட்டாது. அதன் வளர்ச்சியைப் பேணுவதே நமது முதற்கடமையாகும்.

**எல்லாப் பொருளும் இதன்பாலுள, இதன்பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லையால்**

என்று வள்ளுவர் நூலுக்கு ஒரு புலவர் சிறப்புப்பாயிரம் கொடுத்துள்ளார். இது போன்ற சிறப்புப் பாயிரம் இக்காலத்து நகையினையே விளைக்க வல்லது ; வள்ளுவருடைய நூலின் பெருமையை எடுத்துக் காட்டுவதாகாது. இவ்வகை மனப்பாங்கே தமிழ் மக்களுக்கு இருத்தலாகாது என்பதே நான் முதன் முதலாகச் சொல்லவேண்டுவது. இம் மனப்பான்மையால் எழுங் கொள்கைக்கு **முழுமுதல்-தன்மை வாதம்** என்று பெயரிடலாம். இதனால் விளையும் தீங்குகள் பல. இக்கட்சியோடு போர்புரிந்து உண்மையான தமிழ் நிலையைத் தமிழ் மக்களுக்கு உணர்த்துதல் அவசியம்.

இம் முழுமுதல்—தன்மை வாதத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது **தூய—தமிழ் வாதம்**. தமிழ்ப் பேச்சிலே, தமிழ் நூல்களிலே, தூய தமிழ்ச்சொற்களையே வழங்குதல் வேண்டும் என்று இவ் வாதம் கூறும். ஒருவன் எழுதும்போது தன் கருத்துக்கும் தான் எழுதமுற்பட்ட நூலின் தன்மைக்கும் ஏற்ற சொற்களை எடுத்

தாளுதல்தான் முறையாகுமே யன்றி, 'இச் சொற்கள் தூய தமிழ்ச் சொற்களா? பிறமொழிச் சொற்களா?' என்ற ஆராய்ச்சியில் தலையிடுதல் எழுத்தாளனுக்குரிய முக்கியகடமை என்று சொல்லுதல் தகாது. இவ் ஆராய்ச்சி மொழிநூற் புலவன் (Philologist) மேற்கொள்ள வேண்டு வது. தூய தமிழ்ச் சொற்களை ஆளும் இடமும் உண்டு; பிற மொழிச் சொற்களை ஆளும் இடமும் உண்டு; தகுதி யறிந்து சொற்களை ஆளுவதுதான் சிறந்த முறையாகும். தூய—தமிழ் வாதம் பெரும்பாலும் வட மொழியை நோக்கி எழுந்தது. இதனை மேற்கொண்டவர்கள் வட மொழிச்சொற்கள் தவிர ஏனைய எல்லாம் தமிழ்ச் சொற் களே என்று கருதுகிறார்கள். மொழியாராய்ச்சியில் பயின் றவர்கள் அவ்வாறு சொல்லத் துணியமாட்டார்கள். தமிழ் மக்கள் வடநாட்டாரோடுமட்டுந்தான் தொடர்பு கொண்டி ருந்தார்கள் என்று சொல்லமுடியாது. பிறநாட்டாரோடும் தொடர்பு கொண்டிருந்தார்கள். இவ்வகைத் தொடர்பின் ஓர் அறிகுறியாக அப் பிறநாட்டுச் சொற்களும் தமிழில் புகுந்துதான் இருக்கவேண்டும். ஓர் உதாரணம் தருகி றேன்: தமிழிலுள்ள 'ஓரை' என்ற சொல் கிரேக்கச் சொல். இது தொல்காப்பியத்திலேயே காணப்படுகிறது.

**மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்**
**துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை**

என்பது தொல்காப்பியச் சூத்திரம். இதுபோன்ற பிற நாட்டுச் சொற்கள் பண்டைத் தமிழில் எத்தனையோ இருத்தல் வேண்டும்; அவற்றை வரையறுத்தற்கு இப் பொழுது இயலவில்லை. ஆராய்ச்சி மிகமிக, அவைகள் கால அடைவில் வெளியாகலாம். இவைகளெல்லாம் போக எஞ்சியுள்ள சொற்களைத்தான் தூய தமிழ்ச்சொற்கள் என்று கூறுதல் வேண்டும். அளவில் மிகச் சுருங்கின

வாகவே இவைகள் இருத்தல் கூடும். இத் தூய சொற்களைக்கொண்டு எவ்வகையான கருத்துக்களை வெளியிட முடியும்? இதனை நாம் ஊன்றி நோக்குமிடத்து, நாகரிகம் அடைந்த ஒருவன் மிருகப் பிராயமான நிலைக்குத் திரும்ப வேண்டும் என்று கூறியதாகவே முடியும். இக் கூற்றிற்கும் தூய தமிழ்க் கட்சிக்கும் வேறுபாடு இல்லை. இக் கட்சியினர் கையாளும் வாத முறைகளில் ஒன்று மிகவும் வியப்புக்கிடமாக உள்ளது. சில சமயங்களில் வடமொழிச் சொற்களையும் தமிழ்ச்சொல் என்று ஆவேசங்கொண்டு கூறுவர். இதற்கு அனுகூலமாக விநோதமான மொழியாராய்ச்சி முறைகளையும் கற்பித்துக்கொள்ளுகின்றனர். காப்பியம் என்ற சொல்லைக் காப்பு—இயம் எனப் பிரித்தும், நாடகம் என்பதனை நாடு—அகம் எனப் பிரித்தும் சொற்பொருள் கண்டு மகிழ்ந்து இவற்றைத் தமிழ்ச் சொற்களாக்கும் முயற்சி போன்றனவே நான் இங்குக் கருதுவன. இம் முறைகளை ஆதரித்து வருகிற தமிழ்க்கழகங்கள் சிலவற்றை நோக்கும்போது, மொழியாராய்ச்சி—உலகில் இக்கழகங்கள் எட்டிப் பார்த்தற்கும் உரிமையற்றவைகள் என்பது புலனும். இத்தூய தமிழ்க் கட்சியோடும் போர் புரிந்து எப்பொழுதும் வளர்ச்சியே குறித்து நிற்கும் தமிழின் பெருநலத்தைப் பேணுமாறு தமிழ் மக்கள் முயலுதல் வேண்டும்.

ஒரு சாரார், 'தூய தமிழ் என்பது வேண்டுவதன்று. ஆனால், பிற்காலத்திலே சேர்ந்துள்ள வடமொழிச் சொற்களும் பிறமொழிச் சொற்களும் தமிழைக் கெடுத்து விட்டன; இச் சொற்கள் வைசூரி நோயால் தோன்றிய வடுக்கள்போலத் தமிழின் மேனியழகைக் குலைத்து விட்டன; தமிழ் நடையும் தளர்ந்து வலிகுன்றிப் போய்விட்டது.

தமிழ்மொழியும் தன்னை மிக எளிமையாக்கிக் கொண்டது. ஆதலால் பழந்தமிழ் நடையிலேயே பழந்தமிழ்ச் சொற்களையே வழங்கி, அதன் பெருமையையும், செறிவு முதலிய நலன்களையும் காட்டுதல் வேண்டும்' என்று கூறுவர். இவர்கள் கூறுவனவற்றைப் **பழந்தமிழ்—வாதம்** என்று அழைக்கலாம். இவ்வாதத்தை ஒத்துக்கொள்வதானால், முதலில் பழந்தமிழ் என்று சொல்வது எது என்று தெரிதல் வேண்டும். சங்க நூல்கள் என்று சொல்லப்படும் நூல்களில் வழங்கும் தமிழ்மட்டுந்தானா? அல்லது நாயன்மார்கள் ஆழ்வார்கள் முதலியோர்களது அருளிச் செயல்களையும் பழந்தமிழ் என்பதில் உட்படுத்தலாமா? பின்னர்த் தோன்றிய காவியங்கள், பிரபந்தங்கள் முதலானவற்றையும் பழந்தமிழ் என்று கொள்ளலாமா?: இவை முதலாகிய பல கேள்விகள் தோன்றும். இக் கேள்விகளுக்குத் தக்க விடையளிப்பது அரிய செயலாகும். தற்காலத்திற்கு உரிய யாதேனும் ஒரு பொருள்பற்றி இறையனார் களவியல் உரையின் நடையில் எழுதுவது அருமையாயிருக்கும்; ஆனால், விநோதமாகவும் இருக்கும்! சிறு குழந்தையாயிருக்கிற காலத்தில் தைத்த உடுப்பு ஒன்றனை வளர்ந்து பெரியவனாகிய காலத்தில் அணிந்தால் அது அளிக்கும் நகைச் சுவையைத்தான் களவியல் உரைநடை இக்காலத்து விளைக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அன்றியும் ஒரு மொழியிலுள்ள சொற்கள் அம் மொழியைப் பேசும் மக்களுடைய அனுபவத்திற்கு அறிகுறியாக உள்ளன என்பதை மறந்துவிடலாகாது. ஏதேனும் ஒரு பழங்காலத் தமிழைக் குறித்தால், அதற்குப் பின் நிகழ்ந்த அனுபவங்களை உணர்த்தும் சொற்களை நாம் புறக்கணித்து விடுதல் கூடுமா? கூடாது. தமிழ்மொழியில் நிலைத்த வழக்காறாகப் புகுந்த பிறமொழிச் சொற்களெல்லாம் எக்காலத்தனவாயினும் தமிழ்ச் சொற்

கள் என்றே கொண்டு வழங்குதல்தான் தகுதியாகும். பழந்தமிழ்க் கட்சியினரது கொள்கை பரவுமாயின், தமிழ் மொழியும் வடமொழியைப்போல வழக்கொழிந்து போவதற்கும் இடமுண்டு. பழஞ் சொற்களில் வழக்கொழிந்தவற்றை நீக்கிவிட்டு, உயிருள்ள சொற்களோடு காலத்துக்கேற்ற புதுச் சொற்களும் கலந்து தமிழ் வளம் பெற்று விளங்க வேண்டும் என்பதுதான் நமது முன்னோர்களுடைய கருத்து. 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்ற தொல்காப்பியச் சூத்திரம் இதனையே வற்புறுத்துகிறது. சொற்களைப் போன்றே மொழி—நடையும் காலத்துக்குக் காலம் வேறுபட்டு வரும். இதனையும் அறிந்து தற்காலத்திற்கு உரிய நடையைக் கையாளுதலே தக்கதாகும். ஆகவே இப் பழந்தமிழ்க் கட்சியோடு போர்புரிந்து தமிழ்மொழி என்றும் தனது புதுநலத்தோடு விளங்குமாறு தமிழ் மக்கள் பணி புரிந்து வரல் வேண்டும்.

இப் பழந்தமிழ் வாதத்தோடு சேர்த்து ஒன்றாகக் கவனித்தற்குரியது **இலக்கண—வாதம்.** இவ் வாதத்தை மேற்கொண்டவர்கள் பல நூற்றாண்டுகட்கு முன்பு அமைந்த இலக்கண வரம்பை இன்றும் நாம் கைவிடுதல் கூடாது என்று மிகமிக வற்புறுத்துவர். சொல்லின் புணர்ச்சி—இலக்கணத்தை எடுத்துக் கொள்வோம். 'கடல் தாவு படலம்' என்பது 'கடற்றாவு படலம்' என்று புணர்ந்து வரும். இங்குக் காட்டியுள்ள சந்தி, இலக்கணத்திற்கும் பொருளுணர்ச்சிக்கும் அவசியம் என்று முற்காலத்துக் கருதப்பட்டது. 'சொல்லுதல் தவறு' என்பது 'சொல்லுதற்றவறு' என்று ஒரு சிலரால் எழுதப்பட்டுவருகிறது. 'கெடுத்தற்றிண்ணம்' முதலியன இப்பகுதியைச் சார்ந்தவையே. இவைகள் வேண்டா இடத்துச் சந்திரம்.

இவைகளை, அதாவது வேண்டா இடத்துச் சந்திகளையும் கடாருவு என்ற இடத்துள்ளது போன்ற கடின சந்திகளையும் கைவிடுதல் தகாது என்றுதான் இலக்கணவாதம் கூறும். அன்றியும், ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற உறுப்புக்கள் நிரம்பிச் செவ்வனே அமையவேண்டும் என்றும், அவ்வமைதியும் முற்காலத்து இலக்கணத்தோடு பொருந்தியிருத்தல் வேண்டும் என்றும் இவ்வாதம் வற்புறுத்தும். தொல்காப்பியரது பேரிலக்கணம் தோன்றி ஏறத்தாழ 1,500 ஆண்டுகள் ஆகிவிட்டன. நன்னூல் தோன்றி ஏறத்தாழ 600 ஆண்டுகள் ஆகிவிட்டன. தொல்காப்பியர் காலத்துக்குப் பின்பு புகுந்த வழக்குக்களில் பல நன்னூலில் இடம் பெறவில்லை. இங்ஙனமே நன்னூலுக்குப் பிற்பட்டெழுந்த வழக்குக்களும் பலவாதல் வேண்டும். அவற்றை ஆராய்ந்து தெளிந்து எழுதிய இலக்கண நூலே இல்லை. நாம் நன்னூலைத்தான் இப்போதும் கற்று வருகிறோம். 'உரையிற்கோடல்' முதலிய உத்திவகையாலும் 'மிகை' முதலிய அர்த்தமற்ற காரணங்களாலும் காட்டப்பட்ட வழக்குக்களையும் கடந்து எத்தனையோ புதிய வழக்குக்கள் உள்ளன.

இடத்திற்கு இடம் மாறுபடும் வழக்குக்களும் உள்ளன. உதாரணமாக யாழ்ப்பாணத்தில் வழங்குகிற வழக்குக்களில் பல இந்நாட்டினருக்கு விளங்கமாட்டா. தமிழ் நாட்டிலேயும் தஞ்சாவூர்ப் பிரதேசங்களில் வழங்கும் வழக்குக்களில் சில தென்பாண்டி நாட்டாருக்கு விளங்கமாட்டா. உதாரணமாக 'எண்பழத்தொன்று' என்பதனைக் கூறலாம். உலக வழக்கையும் நூல்வழக்கையும் புலப்படுத்தி அமைத்துக் கொள்வதல்லவா இலக்கணம்? 'முன்னையோர்கள் ஆண்ட வழக்குக்கள்தாம் வழக்குக்கள், பின்னர்த் தோன்றியன வழக்குக்கள் ஆகா' என்று கூறல் தகுதியாகுமா? ஆதலால்

தற்காலத் தமிழுக்குரிய இலக்கணம் செம்மையாக விளக்கி நன்கு எழுதப்படல் வேண்டும். இங்கே நுனித்து நோக்குதற்குரிய முக்கியமான பொருள் ஒன்று உள்ளது. எவ்வளவு சிறந்த இலக்கண நூலேயாயினும், பிற்காலம் முழுமைக்கும் பொருந்துமாறு அவ் இலக்கணம் அமைந்துள்ளதென்று கூறச் சிறிதும் இயலாது. மேற்கூறியவற்றை நாம் ஊன்றிக் கவனிப்போமானால், இக்கட்சி வலியற்றது என்பதைக்காணலாம். முற்காலத்து இலக்கணப்படி வாக்கியங்களைச் செவ்வையாக அமைத்து எழுதுவது ஒருவகையில் திருப்தியாகவே இருக்கும். ஆனால், அவற்றில் உயிர்த் தத்துவம் காணவேண்டுமானால், அவை உலகவழக்கையும் பேச்சு வழக்கையும் ஒட்டி அமையப் பெற்றனவாகவே இருத்தல்வேண்டும். இலக்கணத் தத்துவம்வேறு; உயிர்த் தத்துவம் வேறு. இலக்கணம் எலும்புச் சட்டகமே யாகும். உயிரிருந்தாலன்றி அதற்கு இயக்கமில்லை. இவ்வாறு கூறுவதனால் இலக்கண நியதியே இன்றி வாக்கியங்களை எழுதலாம் என்று கூறும் கொள்கைக்கு உடன்பட்டதாகாது. இலக்கண நியதியும் வேண்டும்; உயிர்த்தத்துவமும் வேண்டும். இலக்கண நியதியின் அளவு, எல்லை முதலியன அவ்வக்காலத்துள்ள வழக்கினைப் பொறுத்தன. ஆனால் வழக்குச் சொற்களும் பேச்சு நடையும் தமிழ் மொழியின் நடைக்கு இன்றியமையாதனவாம். தமிழ் ஓர் உயிருடைய மொழியாக நின்று நிலவுவது இவ் இரண்டின் வலியினாலுந்தான். இவ் வழக்குக்களினால் உரம் பெற்று இலக்கணக் கட்சியோடு போராடி, அதனையும் தனக்கு அனுகூல சக்தியாக மாற்றிக்கொள்ளத் தமிழ் முயலுதல் வேண்டும். எப்பொழுதும் காலத்தோடு ஒத்தியைந்து செல்லுமாறு தமிழ் மக்கள் தங்கள் தமிழ் மொழியை நன்கு பேணுதல் வேண்டும்.

இதுவரை, தமிழ்மொழி ஒன்றனையே பற்றித் தோன்றிய வாதங்களை நோக்கினோம். இனி, பிற மொழிகளின் சார்புபற்றித் தோன்றியுள்ள சில வாதங்களை நோக்குவோம்.

வடமொழி வாதம் இவ்வகையில் முதலாவதாகக் கூறத்தக்கது. தமிழைத் தாய் மொழியாக உடையவர்கள் இரண்டு பிரிவாக அமைந்துள்ளார்கள். ஒரு பிரிவினர் வடமொழிச் சொற்களை அறவே ஒழிக்க வேண்டுமென்றோ, அல்லது மிகச் சுருங்கிய அளவில்—தமிழ்ச் சொல் இல்லாத இடத்து—வழங்கவேண்டுமென்றோ கூறுவர். பிறிதொரு சாரார் வடமொழிச் சொற்களை வழங்குவதில் யாதொரு கட்டுப்பாடும் கூடாது என்பர். இவ்விரு பிரிவினர்களும் தத்தம் சார்பாகக் கூறுவனவற்றை **வடமொழி—வாதம்** என்ற பெயரால் அழைக்கலாம். இவ்வாதம் இரண்டு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியுள்ளது. ஒன்று வகுப்புத் துவேஷம்; மற்றொன்று அரசியல்-கட்சித் துவேஷம். இந்தத் துவேஷங்களை ஒதுக்கிவிட்டு, தமிழ்மொழியின் நலத்தை மட்டும் கருதி, இவ்வாதத்தைச் சீர் தூக்குதல் வேண்டும். வடமொழியை முற்றும் ஒழித்தல் என்பது இயலாத காரியம்; வேண்டற்பாலதும் அன்று. வேண்டுமளவு, தகுதியறிந்து, தமிழில் புகுந்துள்ள வடமொழிச் சொற்களை நாம் ஆளுவதில் எவ்விதமான தடையும் இருத்தல் கூடாது. வடமொழி அந்தண குலத்தார்களுக்கு மட்டும் உரியதென்று கருதுதற்குச் சிறிதும் நியாயமேயில்லை. அந்தண சகோதரர்களும் அவ்வாறு கருதுதல் கூடாது; அந்தண ரல்லாதாரும் அவ்வாறு கொள்ளுதல் கூடாது. இந்திய மக்களாய்ப் பிறந்துள்ள அனைவருக்கும் பொது உடைமையாக உள்ளது வடமொழி. வைதிக சமயத்

தாரே யன்றி வேறு சமயத்தினரும் அம்மொழியைப் போற்றி வளர்த்து வந்திருக்கின்றனர். அந்தணர்களே யன்றி ஏனைய வகுப்பினரும் அம் மொழியை வளர்த்துள் ளார்கள். எனவே, ஐரோப்பிய நாடுகளில் லத்தீன் மொழியைப்போல வடமொழியை நாம் கருதிக்கொள்ளு தல் வேண்டும். அது பரந்துபட்ட வழக்கு உடையது; நமது சமய முழுமுதல் நூலாகக் கொள்ளப்படும் வேதத் தைத் தன்பாற் கொண்டது; சமய சாஸ்திரங்களேயும் பிற சாஸ்திரங்களேயும் தன்கண் உடையது. அதனைத் 'தெய்வ மொழி' என்று நம்மவருள் ஒரு சாரார் சொல்லி வருகிறார்கள். லத்தீன் மொழியை ஆங்கில மொழி பயன்படுத்திக் கொண்டதுபோல, இம்மொழியையும் பிற மொழிகளேயும் தமிழ்மொழி பயன்படுத்திக்கொண்டு, உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் என்றும் நின்று நிலவிச் சிறந்தொளிர வேண்டுமென்பதே நம் அனைவரது நோக்கமாக இருத்தல் வேண்டும்.

மேற்குறித்த இரண்டு வகையான பிரிவினர்களேயும் தவிர, மூன்றுவது ஒரு பிரிவினர் இருக்கின்றனர். அவர் கள் தமிழ் மக்களாய்ப் பிறந்தும் தமிழ்மொழியைத் தாய் மொழியாக உடையவர்களாய் இருந்தும், தமிழை இகழ்ந்து, வடமொழி ஒன்றினேயுமே கற்று, தமது தாய் மொழிக்குக் கேடு தேடுகின்றனர். இவர்களால் வட மொழிக்குச் சிறிதும் பெருமை அதிகரிக்கப் போவதில்லை. அதற்கும் கேடு சூழ்கின்றார்கள் என்றுதான் இவர்களேச் சொல்லவேண்டும். பாரதமக்கள் அனைவர்க்கும் உரிய பொதுமொழியைத் தம் குலத்தினர்க்கு மட்டும் உரிய பிதிரார்ஜிதமாக இப்பிரிவினர் கருதுகிறார்கள்.

இவ்வகையான நினைப்பு இருக்கும்வரை தமிழகத் திற்கே—நமது பாரத தேசத்திற்கே—இவர்கள் கேடு

விளைப்பவர்கள் என்று தடையின்றிச் சொல்லலாம். எத்தனையோ வகைகளில் நம் முன்னோர்களது கருத்துத் துறைகளினின்று நாம் வேறுபட்டு விட்டோம். எத்தனையோ அறிவுத் துறைகளில் நாம் அபிவிருத்தியடைந்து விட்டோம். சுருங்கிய அளவில் இருந்த கல்வி பாரத தேசமெங்கும் பரவத் தொடங்கியிருக்கிறது. இவைகளை எல்லாம் நாம் ஒதுக்கிவிட்டு, நமது வடமொழி நூல்களின் கருத்துலகினும் அறிவுலகினும் மட்டும் சஞ்சரித்துக் கொண்டு வருவோமானால், நமது பாரத தேசத்திற்கு இனிமேல் உய்தியேயில்லை என்றுதான் சொல்லவேண்டும். இவ்வாறான கேட்டிற்கு இன்னோர்கள் காரணமாய் இருக்கக் கூடாது என்பதை இவர்கள் நன்கு உணர வேண்டும். சிற்சில இடங்களில் தாய்மொழியைக் காட்டிலும் வடமொழிக்குச் சிறப்புக் கொடுத்து வடமொழி யாட்சியின்கீழ் தமிழ் முதலிய தாய்மொழிகள் அடங்கியமைந்திருக்க வேண்டும் நிலை நேர்ந்திருக்கிறது. இது போன்ற நிலைகளே வடமொழி வாதத்திற்கு இடங் கொடுத்து நாட்டிற்கும் நமது மொழிக்கும் பலவகையான தீங்குகளை விளைத்து வருகின்றன. தமிழ்மொழி இக் கட்சியை நேர்முகமாக எதிர்த்து நின்று தாய்மொழி என்ற நிலையில் தனக்குரிய கௌரவத்தைப் போற்றிக் கொள்ளுதல் இன்றியமையாதது.

இவ்வடமொழி வாதம் நமது நாட்டுப் புராதன சரித்திரத்தின் விளைவு. நவீன சரித்திரத்தின் விளைவாக உள்ளது **ஆங்கில—வாதம்.** இவ்வாதத்தை மேற்கொண்டுள்ளவர்கள் இந்திய மக்கள் அனைவரும் தம் தாய்மொழிகளின் வளர்ச்சியைப் பேணுதபடி ஆங்கிலத்தையே பயின்று அதன் மூலமாகவே அறிவு வளர்ச்சி பெற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறுகிறார்கள். இவருள் ஒரு

சாரார் தங்களை ஆங்கிலேயராகவே பாவித்து அம்மொழியையே தங்கள் வீட்டிலுங்கூடப் புகுத்தி வருகிறார்கள். ஒருவனுக்கு இரண்டு ஆங்கில வார்த்தை தெரிந்துவிட்டால், அவன் நாகரிகத்தின் எல்லையையும் அறிவின் சிகரத்தையும் அடைந்துவிட்டதுபோல் நடிக்கிறான். ஆங்கில நடையுடை பாவனைகளைக் கைக்கொள்ளுகிறான். தான் ஓர் இந்தியன் என்பதை முற்றும் மறந்துவிடுகிறான். தாய்மொழியை வழங்குபவர்களையும் ஏளனத்துடன் நோக்குகிறான்.

ஆனால் ஆங்கிலம் கற்றவர்கள் எல்லாரும் இவனைப் போன்றவர்களல்லர். பெரும்பாலார் தாய் மொழியின் மூலமாகவே அறிவுத் துறைகள் பலவற்றையும் நமது மக்களுக்குப் பயிற்றிவரவேண்டுமென்னும் கொள்கையுடையவர்கள்; தாய்மொழியின் வளர்ச்சி அம்மொழியின் மூலமாகக் கல்வி பயில்வதனால்தான் ஏற்படக்கூடுமென்று நினைப்பவர்கள். என்றாலும் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள தடைகள் மிக அதிகமாக உள்ளன. *அரசாங்கம் இவ் விஷயத்தில் உதாசீனமாகத்தான் இருத்தல்கூடும். தற்காலத்துக் கல்வி ஸ்தாபனங்கள் முழுமையும் இவர்களோடு மாறுபட்ட நோக்கம் உடையனவே. இந்தத் தலைமுறையில் உள்ள கலாசாலை ஆசிரியர்கள் பலரும் தாய் மொழி மூலமாகக் கல்வி கற்பிப்பதை நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எதிர்ப்பவர்களே. பள்ளி மாணவர்களும் அவர்கள் பெற்றோர்களும்கூடத் தாய்மொழி மூலமாகக் கல்வி கற்பதற்கு முற்றும் இணங்கி விட்டார்கள் என்று சொல்ல முடியாது. ஆதலால் தற்காலத்துள்ள கல்விமுறை முழுவதும் மாறித்திருந்தி அமைக்கப்பட்டா

---

*** சுதந்திர தினத்திற்கு முன் நமது தேசத்தை ஆண்டுவந்த ஆங்கில அரசாங்கமே இங்கே கருதப்பட்டது. இம் மனப்பான்மை இப்பொழுது பெரிதும் மாறிவிட்டது.**

லன்றி, இவ் ஆங்கில வாதம் ஏதாவதொரு வடிவில் முளைத்துக்கொண்டே யிருக்கும் என்றுதான் தோன்று கிறது. இவ்வாதத்தை எதிர்ப்பதற்குத் தமிழ்மொழி தற்காலத்து மொழியாக முற்றும் மாறவேண்டும். தற்கால விஞ்ஞான அறிவு அனைத்தையும் அது உட்கொள்ள வேண்டும். அவ்வாறு உட்கொண்டு பழமையும் புதுமை யுந் தாங்கி நன்ருக வலிமையுற்று வளரவேண்டும். ஆங்கிலக் கட்சியை எதிர்ப்பதற்கு வழி இதுவே. இதனைக் கைக்கொள்ளுதலில் சிறிதும் காலம் நீடித்தலாகாது. ஒன்றுமாத்திரம் ஞாபகத்தில் வைத்தல் அவசியம். தமிழ் தற்கால மொழியாக மாறுதற்கும், காலஞ் செல்லச் செல்லக் காலத்தோடு இயைந்து சென்று நிலை தளராது நிற்பதற்கும் ஆங்கில அறிவு மிகப் பயன்படுவதாகும்.

ஆங்கில வாதத்தை எதிர்ப்பதற்கு நமது தேசாபிமானிகளில் சிலர் புதியதொரு வாதத்தை எழுப்பி விட்டனர். இவ்வாறு புதிதாகத் தோன்றியதுதான் **ஹிந்தி—வாதம்** எனப்படுவது. இவ்வாதத்தைத் தோற்றுவித்தவர்கள் அங்கங்கே வழங்கும் தாய்மொழிகள் தவிர, இந்தியா முழுமைக்கும் பொதுவான ஒரு மொழி வேண்டுமென்றும், அந்தப் பொதுமொழியின் நிலையில்தான் ஆங்கிலம் உள்ளதென்றும், முற்றும் அந்நிய தேசத்துக்குரியதான ஆங்கிலத்தைக் காட்டிலும் பாரத தேசத்தில் பெரும்பான்மையோர் வழங்குகின்ற ஹிந்திமொழி இங்ஙனம் பொதுமொழியாகக் கொள்ளத்தக்க உரிமையும் தகுதியும் உடையதென்றும் முற்போக்கு—நெறியில் கூறுகின்றனர். தமிழுக்கு இதனுல் கெடுதி சிறிதும் வருமென்று தோன்றவில்லை. உண்மையிலே கெடுதி விளைக்குமானுல் இவ்வாதத்தைத் தமிழ்மொழி எதிர்த்து நிற்க வேண்டியது அவசியமே. ஹிந்திமொழியினுலேயும் தமிழ்மொழி உரம் மிகுந்து வளரும் என்பதுதான் உண்மையெனத் தோன்று

கிறது. தமிழ் மக்கள் பாரத தேசம் முழுமையும் சென்று அனுபவம் பெருகினால், அவ் அனுபவத்தின் மூலயாகத் தமிழ் மொழியும் சிறப்பு எய்தும் என்றுதான் நாம் கொள்ளுதல்வேண்டும். நமது கல்வித்திட்டம் சீர்திருத்தம் எய்தி நன்கு அமைக்கப் படும்பொழுது இக்கட்சி தக்கவாறு தக்கவர்களால் நன்கு ஆராயப்படலாம். அதுவரை நாம் பொறுமையை மேற்கொண்டிருப்பதே நலம்.

இனி, இறுதியாக எடுத்துச்சொல்ல வேண்டுவது **சமய—வாத**மாகும். இப்பெயரைக் கேட்ட அளவில், சம்பந்தர் முதலியோர் காலத்திற்போல இக்காலத்திலும் சமயங்கள் போராடிக் கொண்டிருக்கின்றன என்று நினைத்தல் கூடும். அங்ஙனம் அன்று. சமயங்களும் இவற்றின் சார்பான புராணம் முதலிய நூல்களும் பொய் நிரம்பியன என்றும், மக்களுடைய வாழ்விற்குக் கேடுவிளைப்பன என்றும், ஆதலால் இவை இரண்டனையும் ஒழிக்க வேண்டுவது அவசியமென்றும், இக்கட்சி கூறும். முதற்படியாக, தமிழிலேயுள்ள இதிகாசங்களை ஒழிக்க வேண்டும் என்று இவ்வாதத்தை மேற்கொண்டோர் முயற்சி செய்து வருகின்றனர். சமயம் பற்றிய வாதத்தை இப்போது ஒதுக்கி வைத்துவிடுவோம். புராணம் முதலிய இலக்கியங்கள் பற்றிய வாதத்தைமட்டும் சிறிது நோக்குவோம். முதலாவது, ஒவ்வொரு காலத்துந் தோன்றிய இலக்கியங்கள் அவ்வக் காலத்துள்ள சமுதாய நிலையைப் பொறுத்தன. ஆகவே இவ் இலக்கியங்களை ஒழிப்பதாயின், நமக்கு மொழிபற்றிய சரித்திரமும், மக்களின் சரித்திரமும் இல்லாமற் போய்விடும். இரண்டாவதாக, இவ் இலக்கியங்களில் பழங் கதைகள், பழமையான கருத்துக்கள் காணப்படு மாதலால் இவற்றை நாம் ஒதுக்கிவிடுதல் கூடாது. கிரேக்கக் கதைகள் இருக்கின்றன. இக்கதைகள் கிரேக்க மொழியிலுள்ள இலக்கியங்களில மட்டுமேயன்றி ஐரோப்பியமொழிகள்பல

வற்றிலும் புகுந்திருக்கின்றன. இக்கதைகள் இருத்தல் பற்றி அவ் இலக்கியங்களை ஐரோப்பிய மக்கள் ஒதுக்கி விடவில்லை. இதுபோன்ற ஒரு மனப்பான்மைதான் நமக்கும் இருத்தல் வேண்டும். இராமாயணத்தில் மக்கள் எளிதில் நம்புதற்கியலாத பல செய்திகள் கூறப்பட்டுள்ளன என்பது உண்மையே. ஆனால் அவைகள் கதையின் அம்சங்கள் என்றும் காவியக் கலைக்குரிய பொருள்கள் என்றும் கொள்ளுதலே முறையாவது. மூன்றாவதாக, இக்கதைப் பொருள்கள் நமது கவிதைச் செல்வத்தை வளப்படுத்தி, அதன் நயத்தை வளர்த்துள்ளன. ஆதலால் நமது இலக்கியச் செல்வத்தை நாம் இழந்துவிடத் துணிந்தாலன்றி மேற்குறித்த வாதத்தை ஒப்புக்கொள்ள இயலாது. பெரும்பாலோர் இராமாயணம் முதலிய இலக்கியங்களைக் காவிய நயங்கருதியே கற்று வருகின்றனர். ஆனால் இக்கட்சி இக் காரணங்களைக் கவனிப்பதாயில்லை. இக் கட்சியோடும் போராடுவது தமிழ் மக்களின் கடமையென்றே தோன்றுகிறது.

தமிழின் மறுமலர்ச்சிக்குத் தடையாயிருப்பன ஒரு சிலவற்றை இங்கே ஆராய்ந்தோம். மொழியின் சிறப்பு அதனைப் பயில்வோர் சிறப்பு. ஆகையால் தமிழுக்கும் அதனைத் தாய்மொழியாக உடைய நம்மவர்களுக்கும் உள்ள மிக நெருங்கிய தொடர்பை நாம் நன்கு உணர்தல் வேண்டும். அதன் பாலுள்ள குறைகள் நமது குறைகளாகும்; அதன்பெருமை நமது பெருமையாகும்; அதற்கு வாழ்வில்லையேல், நமக்கும் வாழ்வில்லை. இப்பொது உண்மையினையும் இதனால் வரும் நலன்களையும் தீங்குகளையும் முற்ற உணர்ந்து, நமது தாய்மொழி மாறாத இளமையோடும் குறையாத வலிமையோடும் என்றென்றும் நிலவுமாறு நாம் அனைவரும் மனமியைந்து உழைத்து வரும்படி இறைவன் அருள்புரிக!

# 2

# விடுதலை வேண்டும்!

எத்தனையோ வகைகளில் விடுதலை வேண்டும் என்று பலரும் பாடுபடுகிறார்கள். தமிழுக்கு விடுதலை வேண்டும் என்ற கூக்குரல் இன்றும் உண்டாகவில்லை. இக் கூக்குரலை எழுப்பி அதற்காக உழைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

சிலர் இந்த அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் விடுதலைக்கு இவர்கள் கையாளும் வழி சரியல்ல, இவர்கள் இலக்கண விதிகளிலிருந்து தமிழ் விடுதலை பெறவேண்டும் என்று கூறி, அவ் இலக்கணத்தை ஏளனஞ் செய்வதே போதுமென்று நினைக்கிறார்கள். இலக்கணம் கற்றவர்கள் பொதுவாகக் கடினமாகத் தமிழ் எழுதுகிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் கடினமான தமிழ் வேறு; வழக்கொழிந்த தமிழ் வேறு. ஆங்கில உதாரணம் கொடுத்தால்தானே நம்மவர்களுக்கு விளங்கும்! 'வைட்' (Wight) என்று முற்காலத்து வழங்கிய சொல்லுக்கு 'ஆள்' என்று பொருள். இக்காலத்தில், 'பெர்ஸன்' (Person) என்ற சொல்லைத்தான் ஆங்கில மக்கள் வழங்கிவருகிறார்கள். இதுபோலவே, தமிழில், 'கமம்' என்பது வழக்கொழிந்த சொல்; இக்காலத்து 'நிறைவு' என்பதை வழங்குகிறார்கள். வழக்கொழிந்த சொற்களை ஆளுதல் தவறு.

சொல்லைப்போலவே சொல்லின் பொருளும் வழக்கொழிவது உண்டு. உதாரணமாக, 'மாண்ட' என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். அது முற்காலத்தில்

'மாட்சிமைப்பட்ட' என்ற பொருளைக் குறித்தது. தற்காலத்தில், 'இறந்துபோன' என்ற பொருளைத்தான் குறிக்கும். பழைய பொருளில் இச் சொல்லை வழங்குவது தவறு. இது வழக்கொழிந்த பொருளுக்கு ஓர் உதாரணமாம்.

கடினமான தமிழ் வேறு. எச். ஜி. வெல்ஸ் முதலியோர்கள் எழுதுகிற ஆங்கில நடை எல்லார்க்கும் விளங்கக்கூடிய நடையல்ல. ஆனால் ஒருவரும் அந்நடையில் அமைந்த மொழியை வழக்கொழிந்தது என்று சொல்ல மாட்டார்கள். இதுபோலவே திரு. மு. இராகவையங்கார் முதலியோர்கள் எழுதுகிற தமிழை ஒருவேளை கடினம் என்று சொல்லலாம்; ஆனால் வழக்கொழிந்த தமிழ் என்று அதைச்சொன்னால் அது பொருந்தாது.

வழக்கொழிந்த சொற்களையும் பொருள்களையும் ஆளுதல் தமிழுக்கு விலங்குபூட்டிச் சிறையிலிடுவது போலாகும். இப்படிப்பட்ட சொல்லாட்சி ஒரு கொடிய வல்லரசு. இதினின்றும் தமிழ் விடுதலை பெறவேண்டுவது அவசியம்.

மேலே சொன்னது ஒருகோடி; நேரே மறு கோடியிலுள்ளது தற்காலத்தில் சில தினப் பத்திரிகைகளில் வரும் தமிழ். சொற்களின் உண்மை வடிவம் தெரிந்துகொள்ளச் சிறிதும் முயற்சி செய்யாமலே, மனத்துக்குத் தோன்றியபடி எழுதுவது தவறென்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதாம். கொஞ்ச காலத்துக்குமுன் நமது நாட்டில் தாண்டவமாடிய சொற்களில் ஒன்று 'ஒற்றுழையாமை'. வடமொழி பேசத்தொடங்கி, 'ஆஷ்டுக் குஷ்டி வேஷ்டியைத் தின்கிறது; ஓஷ்டு, ஓஷ்டு' என்று ஒருவன் சொன்ன பழங்கதையைப் பலரும் கேட்டிருக்கலாம், இதைப் போலுள்ளதுதான் 'ஒற்றுழையாமை' என்பது.

இலக்கணத் தமிழ் பேசுவதாக எண்ணி 'வர்த்தை'யை 'வாற்றை' என்று சிலர் சொல்லுகிறார்கள். இப்படியே ஒத்துழையாமையை 'ஒற்றுழையாமை' என்று போலி இலக்கணமாக்கி எழுதலாயினர். கற்றவர்களுள் சிலர் அதிகமாகப் பழந்தமிழ் நூல்களிற் பழகியதனால் வழக்கொழிந்த சொற்களை உரைநடையில் வழங்கிவருதல் போல, தமிழிலக்கிய வாசனையே அறியாதவர்கள் 'ஒற்றுழையாமை' என எழுதத் தொடங்கினார்கள். இது போன்ற அறியா வழக்கு என்ற வல்விலங்கும் முறிபட்டுத் தமிழ் விடுதலை பெறவேண்டும்.

இவ்இரண்டு வகுப்பினர்க்கும் இடையிலே பல தரத்தினராய்த் தமிழை விலங்குபூட்டி வைப்பவர்கள் இருக்கிறார்கள். தமிழ்ச் சொற்களுக்குத் தமக்குத் தோன்றுவதெல்லாம் பொருள்தான் என்று கொண்டு ரசிகக் கட்டுரை எழுதுபவர்கள் ஒருசிலர் உண்டு. 'அலங்கலம்' என்பது ஒருவகை நடனம் என்று எண்ணிக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது! இப்படி ஒரு நடனம் உண்டென்று தமிழ்த் தெய்வத்திற்கே தெரிய மாட்டாது! அலங்கல் என்பது மாலை; அம் என்பது சாரியை. வேறு சிலர், அலங்காரஞ் செய்யக் கருதி எதுகை மோனைகளை மிகவும் கையாண்டு, தமிழன்னையைச் சேற்றில் அழுந்தக் கிடத்தி விடுகிறார்கள். 'வீரன் வெளியே சென்றிருந்த வேளைபார்த்துப் பர்ணசாலையிற் புகுந்து, பதறி நின்ற சீதையைப் பற்றியெடுத்துப் பறக்கலுற்றான்' என்ற அரிய வாக்கியத்தில் எத்தனை மோனைகள்! 'சீற்றத்தினால் ஊற்றமுற்றுக் கூற்றமுட்க ஏற்றெழுந்து ஆர்ப்பரித்தான்.' இதில் வரும் எதுகைத் துள்ளலைக் கண்டு யார்தான் நகையாதிருப்பார்கள்! இது உரைநடை செல்லும் முறை! அருவருக்கத் தக்க இப்படுகுழிச் சேற்றிலிருந்து தமிழ் விடுதலை பெறவேண்டும்.

தமிழ் நாட்டில் ஏதாவது ஒரு கிளர்ச்சி தோன்று மானால், அக் கிளர்ச்சி தமிழ் மொழியில் வந்து பாய்ந்து விடுகிறது. ஓர் இயக்கத்தால் வடமொழி வெறுப்பு நமது நாட்டில் களைபோல வளரத் தொடங்கியிருக்கிறது. வட மொழி அந்தணருக்கு மட்டும் உரியதல்ல. அந்தணரல் லாதாரும் பௌத்த ஜைன சமயத்தவர்களும் அதனைப் போஷித்து வளர்த்து வந்திருக்கின்றனர். அது பாரத தேசத்திற் பிறந்த ஒவ்வொருவனுக்கும் பொதுவுடைமை என்பதை முந்திய கட்டுரையிலும் கூறியுள்ளேன். இவ் வுண்மையை மறந்துவிட்டு அந்தணர்களுக்கு மட்டும் இம் மொழி உரியதாகச் சொல்லுகிறோம்; இதனோடு நிற்க வில்லை. மற்றவர்களுக்குப் போலவே அந்தணர்களுக்கும் தமிழ் தாய் மொழியாக இருந்தபோதிலும், அவர்களுக் கும் தமிழுக்கும் யாதொரு தொடர்பும் இல்லையென்று வாதாடுகிறோம். இவ்வாறு சொல்லுதற்கு அவர்களுள் ஒருசிலர் இடங்கொடுக்கவும் செய்கிறார்கள் ; தமிழ் தங்கள் தாய்மொழி யல்லாதது போல் ஒதுக்குகிறார்கள். தங்களை ஆரியரென்றும் மற்றையோர்கள் திராவிடரென்றும் பகுத் துக் கூறுகிறார்கள். ஆரிய திராவிட வாதம் அர்த்த மற் றது. தனிப்பட்ட தூய ஆரியரும் திராவிடரும் இல்லை யென்பது சரித்திரம் ஒப்பிய உண்மை. இந்தியா தேசத்த தவர்களெல்லோரும் ஒரே ஜாதி என்ற லட்சியத்தைக் கைக் கொள்ளவேண்டும் இந்த நாளில், இந்த வகுப்பு—வாதமும் மொழி—வாதமும் ஏற்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

இக் கிளர்ச்சியானது மொழி வாதத்தோடு அமைந்து விடவில்லை. தூய தமிழ் வாதத்தில் நம்மைச் செலுத்தி விட்டது. பேசும்போதும் எழுதும்போதும் வடமொழிப் பதங்களை நீக்கித் தக்க தமிழ்ச் சொற்களைப் பொறுக்கி யெடுத்து வழங்க வேண்டுமாம். இதனால் இம் முயற்சியில்

ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவனும் சொல்லாராய்ச்சியாள ஞக (Philologist) இருக்க வேண்டுமென்று இவ்வாதம் கூறு கிறது. இது நடை முறையில் வரக்கூடிய காரியமல்ல. வடமொழிச் சொற்களை மிகுதியாக எடுத்தாளுவதைக் கண்டிப்பதற்கு இவ்வாதம் ஒரு நெறியாகலாம். ஆனல் அறிவு வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் பெருந் தீங்கு இழைப்பதாய் முடியும். ஆங்கில மக்கள் தாங்கள் எழுதும் போது லத்தீன், கிரீக் முதலிய மொழிகளிலிருந்து வந் துள்ள சொற்களை விலக்குகிருர்களா? சொற்போராட்டம் அவர்களுடைய நோக்கமல்ல; அறிவு வளர்ச்சியே முக்கிய நோக்கமாயுள்ளது. நாமும் அந் நோக்கத்தைக் கைக் கொள்ள வேண்டுவது இன்றியமையாததல்லவா? மேலும் நமது வழக்கிற் புகுந்துவிட்ட சொற்களெல்லாம் தமிழ் மொழிச் சொற்களே. ஒரு கடலில் எத்தனையோ ஆறு களிலிருந்து நீர் வந்து பெருகலாம். ஏதாவது ஓர் ஆற்றிலிருந்து வந்து கலந்த நீரை நீக்கிவிட முடியுமா? மற்றைய நீர்கள் மட்டுந்தான் 'கடல்' ஆகும் என்று சொல் லுவது பொருத்தமாகுமா? தமிழ் மொழியும் ஒரு கடல் போன்றது என்பதை நாம் மறக்கலாகாது.

வேருேர் இயக்கம் வந்துள்ளது. அதுவும் தமிழ் செல் லும் நெறியில் குறுக்கிட்டிருக்கிறது. கிரேக்க மொழியி லுள்ள கதைகளை உண்மையென்று சொல்லுவாரில்லை. என்ருலும், அக்கதைகள் ஐரோப்பிய இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டு, அவைகளுக்கு அழகுதந்து நிற்கின்றன என்பது முன்னர்க்குறிப்பிடப்பட்டது. இக்கதைகளை அறி யாதவர்கள் ஐரோப்பிய இலக்கியங்களை அறிந்துகொள்ள முடியாது. அதுபோலவே தான் நமது புராண இதிகாசக் கதைகள். நமது வாழ்விலே இக்கதைகள் ஊறிவிட்டன, நமது இலக்கியங்களிலே இக்கதைகள் நிரம்பியுள்ளன.

எனவே, 'இவைகள் நம் அறிவுக்குப் பொருத்தமற்றன: ஆதலால் இவைகளை நமது மாணவர்கள் படிக்கக்கூடாது' என்று சொல்லுவது சிறிதும் பொருத்தமாக மாட்டாது.

மேலே விவரித்த வகுப்புவாதக் கொள்கைகளி லிருந்தும் தமிழ் விடுதலை பெறவேண்டும். இதற்குச் சுருக்க வழியொன்று தோன்றுகிறது. வள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பன், இராமலிங்க சுவாமி, பாரதி, தேசிக விநாயகம் பிள்ளை என்ற அறுவருடைய நூல்களையும் நமது மாணவர்கள் தினசரி படிக்க வேண்டும். படித்து வந்தால் தமிழ் மொழியின் விடுதலையை மாணவர்களே நிறைவேற்றி விடுவார்கள்.

# 3

# தமிழும் சுதந்திரமும்*

இன்று நமது தேசம் ஒருவாறு சுதந்திரம் அடைந்து விட்டது. ஆனால், அந்நியரது தொடர்பு முற்றும் நீங்க வில்லை. தேசம் முழுமையும் ஒரே ஆட்சிக்குள்ளும் அமைந்து விடவில்லை; பிளவு பட்டிருக்கிறது. எனவே பூர்ண சுதந்திரத்தை நாம் அடைந்து விட்டோமென்று எண்ணுவதற்கு இல்லை. காந்திஜியும் இவ்வாறுதான் கருதுகிறார். நாம் இத்தினத்தைக் கொண்டாடுவதற்குக் கூட நியாயமில்லை என்று சில காலத்திற்கு முன் அவர் எழுதி வெளியிட்டார். ஆனால், பல ஆண்டுகளாக நமது தலைவர்கள் முயற்சியெடுத்து வந்ததன் பலனை நாம் எதிர் பார்த்திருந்தோம். சிறிதளவேனும் அம்முயற்சி பயன் பட்டு விட்டது என்று மகிழ்ச்சி கொள்வது இயற்கை தானே? நாம் அடைந்துள்ள வெற்றி சிறிதளவு அன்று, பேரளவேயாம். இதனைப் பெரியதோர் வெற்றியென்றே சொல்லுதல் கூடும். அடிமை வாழ்விலிருந்து நமது தேசம் சுயாட்சி பெற்றுவிட்ட தென்பது சிறு வெற்றியா? அந்நியரது தொடர்பு பூர்வ சரித்திரத்தின் சின்ன மென்றே நாம் கருதல் வேண்டும். சுதந்திரத்தின் ஆரம்ப நிலையில் இத்தொடர்பு சில நன்மைகளை விளைவிப்பதுமாக லாம். எனினும், இந்த அளவோடு நில்லாதபடி, காந்திஜி யின் கருத்துப்படி பூரண வெற்றி அடைய அருள்புரிய

---

* 15—8—47 சுதந்திர தினத்தன்று வெளிவந்த கட்டுரை.

வேண்டுமென்று பாரத மக்களாகிய நாம் அனைவரும் இறைவனை இன்று பிரார்த்தித்துக் கொள்வோம்.

பூரண வெற்றி யடையாததற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. அது என்ன என்றால், சகோதரர்களாக வாழவேண்டிய ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அன்பு-உணர்ச்சியின்றிப் பகைமை-உணர்ச்சி கொண்டிருப்பதே யாகும். இதனாலேயே நமது தேசம் பிளவுபட்ட ஆட்சிக்குள்ளே இன்று அமைந்திருக்கிறது. தனிப்பட்ட சாதியாரின் நன்மையை முதலாவதாகக் கொண்டு, தேசத்தின் நன்மையை இரண்டாவதாகக் கருதி வருகிறோம். இதனால் ஏற்பட்டுள்ள கேடு சொல்லுந் தரத்ததன்று. முதலாவது, பிற தேசத்தவர்கள் நம் தேசத்தை நன்கு மதியாமல் போகிறார்கள். சில தேசத்தவர்கள் நம்மவர்களை அடிமைகள்போல் நடத்தி வருகிறார்கள். சில தேசத்தவர்கள் நம்மவர்களைத் தங்கள் தேசத்தில் இறங்கிச் சில தினங்கள் இருப்பதற்குங்கூட அனுமதிப்பதில்லை. அந்நிய தேசத்திலிருந்து இங்கே வருபவர்கள் நமக்கு எஜமானஸ்தானம் பூண்டு நம்மவர்களை இழிவு படுத்துகிறார்கள். இரண்டாவது, தனித்தனிச் சாதியார்களின் நன்மையுங்கூட நன்றாக முற்றுப் பெறுவதில்லை. மூன்றாவது, அந்நியர் ஆட்சித் தொடர்பு நமது தேசத்தில் நீடித்திருப்பதற்கு இது ஒரு காரணமாகிறது. இப்படியாகப் பல வகையான கேடுகள் உளவாகின்றன. இவற்றை யெல்லாம் எண்ணி நாம் ஒற்றுமைப்பட்டு வாழ வேண்டுமென இன்று உறுதி பூணவேண்டுவது அவசியம்.

**ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே**

என்ற பாரதியார் வாக்கு எப்பொழுதும் நம்முடைய மனத்திலே குடிகொண்டிருக்க வேண்டும். பலன் விளைவைக் கருதாதபடியே, நிஷ்காமியமாக அன்பு பூண்டு, சகோத

ரத்வம் பேணி நாம் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்று காந்தியடிகள் கூறுகிறார். இந்த அன்பு நெறி, காரணங் காட்டி ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்று சொல்வதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு மேலானதாகும். இந்த அன்பு நெறியைப் பேணுதற்குப் பாரத மக்களாகிய நாம் அனைவரும் இன்றுமுதற்கொண்டாவது முற்படுதல் வேண்டும்.

தமிழ் நாட்டிலுள்ள நம்மவரில் ஒருபெரும் பகுதியார், அன்பு நெறியையும் கவனியாது, பலா பலன்களையும் கருதாது, ஒற்றுமைப்பட்டு வாழ்தலில் மனம் கொள்ளாமல் தனிப்பட வாழ்தலையே விரும்புகின்றனர். இவ்வகையான தனிப்பட்ட வாழ்வை ஒரு சில தலைவர்கள், நிரம்பிய ஆலோசனையின்றி, ஊக்கி வருகிறார்கள். ஒரு சிலர் தங்கள் சுய நன்மையின் பொருட்டு இதனை ஆதரிக்கின்றனர். வட நாட்டிற்கும் நமது தமிழ் நாட்டிற்கும் யாதொரு தொடர்பும் எப்பொழுதும் இருந்ததில்லை என்ற கருத்தை விஷம்போல் பரப்பி வருகிறார்கள். ஆனால், உண்மை எது என்பதை எளிதில் நாம் அறிந்து கொள்ளலாம். நமது சமயங்களை எடுத்துக் கொள்வோம். நமது தெய்வங்கள் வடநாட்டிறகும் உரிய தெய்வங்களே. புறநானூற்றில் கடவுள் வணக்கச்செய்யுளில் சிவபெருமானது நீலகண்டம்,

**மறை நவில் அந்தணர் நுவலவும் படுமே**

என்று குறிக்கப்படுகிறது.

**நீல மணிமிடற் றொருவன் போல**

எனப் பிற இடங்களிலும் வந்துள்ளது. நற்றிணையில்,

**வேத முதல்வன் என்ப**
**தீதற விளங்கிய திகிரியோனே**

என்று திருமாலைக் குறித்து வணக்கம் கூறப்படுகிறது. இங்ஙனமே இந்திரன், வருணன் முதலிய தெய்வங்களும் தமிழ் நாட்டினர்க்கும் உரிய தெய்வங்களாகத் தொல்காப்

பியம் கூறுகிறது உயிர், மறுபிறப்பு, நல்வினை, தீவினை, பந்தம், வீடுபேறு முதலிய நமது சமயக் கொள்கைகள் வடநாட்டினருக்கும் உரியவையே யாகும். பஞ்ச பூதங்கள், அவை தோன்றிய வரலாறு முதலிய பௌதிக சாஸ்திரக் கொள்கைகளும், கிரஹண வரலாறு பற்றிய கொள்கைகளும், நால்வகை வருணம், எண்வகை மணம் முதலிய சமூகக் கொள்கைகளும், இந்திரவிழா முதலிய உற்சவங்களும், இன்னும் கலைப் பண்பிற்குரிய பல அம்சங்களும் சங்க காலந்தொட்டே வட நாட்டிலும் தென்னாட்டிலும் ஒன்றுயிருந்தமை சங்க இலக்கியங்களால் அறியலாம். அன்றியும், பாரத தேசம் முழுமையும் ஒன்று என்ற கொள்கையும் பண்டைப் பழங்காலந் தொட்டே இருந்து வந்திருக்கிறது. புறநானூற்றில் 'பொற் கோட்டி மயமும் பொதியமும் போன்றே' என்று நமது தேசத்தின் வட கோடியையும் தென்கோடியையும் இணைத்துக் கூறுகிறார் ஒரு புலவர். இரு பேரெல்லைக்குள்ளும் அகப்பட்ட நிலம் முழுவதும் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர் ஒரு சிலர் உளரெனச் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது.

**குமரியொடு வட இமயத்து**
**ஒரு மொழி வைத்து உலகு ஆண்ட**
**சேரலாதற்கு...**

என்று வாழ்த்துக் காதையில் வருகின்றது. ஆகவே வடநாட்டினரும் தென்னாட்டினரும் வெவ்வேறு மனித வர்க்கத்தினர் என்ற (different races) கொள்கை பிற்காலத்ததே என்று அறியப்படும். இலக்கியங்களாலும் சரித்திரங்களாலும் எட்டமுடியாத பண்டைப் பழங்காலத்தில் இவ் இரு நாட்டினரும் வெவ்வேறு வர்க்கத்தினரா யிருந்திருக்கலாம். ஆனால் இரண்டு வர்க்கங்களும் ஒன்றாய்க் கலந்து பல நூற்றாண்டுகளாகி விட்டன. இப்போ

துள்ளவர்கள் அனைவரும் கலப்பு வர்க்கத்தினரே. சிலர் தம்மை ஆரியரென்று கூறிக்கொள்வதும், சிலர் திராவிடரென்று கூறிக்கொள்வதும் பொருளற்ற வெறுங்கூற்றுக்களே. இங்ஙனம் கூறிக்கொண்டு, தென்னாட்டினர்க்குத் தனிப்பட்ட ஒரு ஸ்தானம் வேண்டுமென்று வாதிப்பது சரித்திர விரோதமும், மனித வர்க்க சாஸ்திர விரோதமுமாம்; எல்லையற்ற கேடும் பயப்பதாகும். ஆனால் மொழி பற்றிய மாகாணப் பிரிவினை அவசியமேயாகும். அது வேறு விஷயம்.

பிரிவினை மனப்பான்மை நமது தாய் மொழியாகிய தமிழ் விஷயத்திலும் புகுந்து விட்டது. நம்மவருள் ஒரு சாரார் தேசப் பிரிவினைக்கு இணங்கவில்லை. ஆனால் வடமொழிக் கலப்பின்றித் தமிழ் தூய நிலையில் வழங்க வேண்டுமென்று இவர்கள் வற்புறுத்துகிறார்கள். சிலர் இயன்றவரை தமிழ்ச் சொற்களை வழங்கவேண்டும் என்று கூறிக்கொண்டே வடமொழியை வெறுக்கிறார்கள். இவ் வெறுப்பு பலதரத்திலுமுள்ளது; பல காரணங்களாலும் அதிகரிக்கின்றது; வலிமை யுறுகின்றது. இந்தக் காரணங்களை யெல்லாம் ஊன்றி நோக்கவேண்டிய அவசியமில்லை. பன்னூறு ஆண்டுகளாகத் தமிழ் சென்று கொண்டிருந்த நெறியைக் கட்டுப்படுத்தும் இம் முயற்சி நமது தாய் மொழியின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாகும். இதைமட்டும் நாம் கருத்தில் வைத்திருக்க வேண்டும். வட சொற்கள் தொடக்கத்தில் சிறிய அளவில் தமிழில் புகுந்து காலஞ் செல்லச் செல்ல மிகுந்துகொண்டே வந்திருக்கின்றன. இச் சொற்கள் மேற் குலத்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களிடையிலும், கற்று வல்லவர்களிடையிலும், நூல்களிலும் மட்டும்தான் வழங்கி வந்திருக்கின்றன என்று எண்ணுதல் தவறு. நம் மக்களில் எல்லாப் பகுதி

யினரிடையிலும் பல வடசொற்கள் வழங்கி வந்து, இன்றும் நிலைத்துள்ளன. சில உதாரணங்கள் தருகின்றேன்: அச்சு, அதிகாரம், அதிட்டம், அன்னம், ஆதி, இட்டம், இயக்கி, இந்திரன், ஈயம், ஈனசாதி, உத்தரவு, உருவம், உட்டணம், ஊசி, எசமான், எமன், எந்திரம், ஏலம், ஒட்டகம், கலியாணம், காரியம், குடும்பம், சந்திரன், சனி, சாதி, சூரியன், தண்டம், தந்திரம், நகம், நாயன், பக்கம், பாவம், புதன், மந்திரம், மாசம், முகம், முக்கியம், முழுத்தம், யமன், ரத்தம், ராசா, லச்சை, லாபம், வசியம், வஞ்சனை முதலிய சொற்கள் இழிந்தசாதியினரென்று கருதப்படுவோர்களிடையிலும் காணப்படுகின்றன. இவைகள் தமிழோடு தமிழாய் ஊறி வளர்ந்து பரவி விட்டன. இப்படியே சமயம், தத்துவம், சாஸ்திரம், கலை, சரித்திரம் முதலிய பல துறைகள் பற்றியும் வடசொற்கள் தமிழில் புகுந்து விட்டன. இச்சொற்கள் கற்றறிந்த மேற்குலத்தவரிடையே மிகவாய்ப் பரந்துள்ளன. இவற்றையெல்லாம் தமிழினின்றும் நீக்கிவிடுதல் இயலாது. வடமொழிச் சாஸ்திரம் கலை முதலியவற்றை அந்தண குலத்தவர் மாத்திரம் இயற்றினரென்று கருதுவதும் பிழை. பிற சமயத்தினரும், அந்தணரல்லாதாரும், இந்திய தேசத்தில் தமிழ்நாட்டினர் உள்படப் பலநாட்டினரும் வடமொழிச் சாஸ்திரங்களையும் கலைகளையும் இயற்றியுள்ளார்கள். வடமொழி அந்தணர்க்குமட்டும் உரிமையுள்ள மொழியன்று. எனவே, அந்தணர் மீது கொண்டுள்ள வெறுப்பை வடமொழியின் மீது செலுத்துதல் தவறும். இம்மொழி இந்தியப் பொது மொழியாகும். இதனைத் தமிழ் மக்கள் இழப்பது தங்கள் பூர்வார்ஜிதத்தை இழப்பது போலாம். சமுதாய உலகத்தில் தமிழ் மக்களாகிய நாம் எப்படித் தனித்து வாழ்தல் இயலாதோ, அப்படியே மொழியுலகில் தமிழ் தனித்து

வாழ்தல் இயலாது. வடமொழியை நன்றாகப் பயன்படுத்து வதற்குத் தமிழுக்குப் பூரண சுதந்திரம் உண்டு.

இவ்வாறு கூறிய அளவில் வடமொழிக்கு நாமும் நமது தமிழும் அடிமையாக வேண்டுமென்பது எனது கருத்தன்று. உயிர்த் தத்துவத்தோடு வழங்கி வரும் நமது தமிழ்தான் நமது தென்னாட்டில் தலைமை வகிக்க வேண்டும். வடமொழி தலைமை பூணுதல் தகாது. ஏனெனின், முதலாவது, அது இயற்கைக்கு முற்றும் விரோதம். வடமொழி வழக்கொழிந்த மொழி. அதன் வாழ்வு முடிந்து பல நூற்றாண்டுகள் ஆகி விட்டன. இவ் வழக்கொழிந்த மொழியை வழக்கத்தில் நின்று உயிர்த் தத்துவத்தோடு இருக்கும் தமிழ்மொழியைக் காட்டிலும் முதன்மையுடைய தாகக் கொள்வது இயற்கையோடு சிறிதும் பொருந்தா தல்லவா?

இரண்டாவது, பிற நாடுகளை நோக்குவோம். ஆங்கில நாட்டில் ஆங்கிலந்தான் முதன்மை பெறுகின்றதேயன்றி லத்தீனும் கிரேக்க மொழியும் அல்ல. இங்ஙனமே பிறநாடு கள் அனைத்திலும் அவ்வத் தேசத்து வழங்கும் மொழியே முதன்மை பெறுவதாயுள்ளது. தமிழும் இம்முறையைத் தான் மேற்கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, வடமொழியை மட்டும் கற்பதனால், புராணக் கதைகளையும், தற்கால விஞ்ஞான சாஸ்திரத் திற்கு முரணான கருத்துக்களையும் கொள்கைகளையும் மட் டுமே நாம் அறிதல் கூடும். இவற்றால் அஞ்ஞான இருள் அதிகரிக்குமேயன்றி உண்மை யறிவு வளர்ச்சியுற மாட் டாது. ஆதலால் உண்மையறிவு வளர்வதற்கு அது உதவ மாட்டாது. எனவே அதற்கு முதலிடம்கொடுப்பதும் தகாது.

நான்காவதாக, வடமொழியை மாத்திரம் கற்றவர்கள் அதன் பேரழகில் மயங்கி அதற்கு அடிமையாகி, அம் மொழியிலுள்ள அபத்தக்கொள்கைகளையும் கருத்துக்களை

யும் உண்மை என்று நம்பியவர்களாய், அறிவின் எல்லைப் பரப்பு முழுவதும் அம்மொழியிலுள்ள சாஸ்திரங்களாலும் பிற நூல்களாலும் அறிந்து அளவிடப்பட்டுப் போயின என்னும் கருத்துடையவர்களாய், அறிவு வளர்ச்சியே இனி இல்லை என்னும் கொள்கையினராய், இருப்பதைக் காண்கிறோம். அவர்கள் தமிழ் மக்களாயிருந்தும் இவ்வாறு கருதுவது பெரிதும் இரங்கத் தக்கது. கேடு விளைக்கும் இப் பொய்யுணர்ச்சியை மக்கள் மனத்தில் விதைக்கும் மொழி தலைமையிடம் வகித்தல் கூடாது.

ஐந்தாவது, வடமொழியை அதன் கலைப்பண்பிற்காகவே இப்பொழுது நாம் பெரிதும் போற்றிவருகிறோம். தற்காலத்திற்குரிய உண்மையறிவு வளர்ச்சியின்பொருட்டு அதனைப் பேணுவாரில்லை. தற்கால அறிவை உதவுதற்குரிய மொழி உயிருடன் இருக்கும் தமிழ்மொழியேயாகும். அதுவே முதன்மை பெறத்தக்கது.

ஆறுவதாக, நாம் அறிவில் முன்னேற்றமடைய வேண்டுமாயின், அது வழக்கில் நிலைத்து நின்று நமது உயிரோடு உயிராய்க்கலந்து ஒன்றிவிட்ட தமிழ்மொழியின் மூலமாகத்தான் அடைய இயலும்.

இவைபோன்ற காரணங்களால் தமிழ்மொழியே நமது நாட்டில் தலைமை பெறுதற்கு உரியதாகும் என்பது தெளிவாய் விளங்கும். இவ் இரு மொழிகளுக்குமுள்ள வேறுபாடு வாழ்வு முடிந்து உயிர் நீங்கிய ஒருவனுக்கும், உயிருடன் வாழ்ந்துவரும் ஒருவனுக்குமுள்ள வேறுபாடு என்பதை நாம் நன்றாய் உணர்தல் வேண்டும்.

ஆகவே, நமது முதற்கடமை தாய்மொழி பற்றியதே. எனினும், அதனையடுத்து நாம் அன்பு பூண்டு பேண வேண்டுவது வடமொழியாகும். இம்மொழி பன்னூறு ஆண்டுகளாக நமது மொழியோடு உறவு பூண்டு உதவி வந்திருக்

கிறது. நமது வாழ்க்கையையும் நமது மொழியின் வாழ்க்கையையும் இது நெறிப்படுத்தி வந்துள்ளது. நமது நாட்டின் பூர்வ சரித்திரத்தை உணர்வதற்கும் இது பெரிதும் உதவுகிறது. இதனால் விளங்கும் கலைப் பண்பாடு என்றும் நம்மாற் போற்றற்குரியது. இதிலுள்ள இலக்கியங்கள் கற்கக் கற்கப் பேரின்பம் தரவல்லன. இதன் சொல்லினம் நமது மொழிக்குப் பல துறைகளிலும் பயன்படுவது. இவற்றையெல்லாம் மனத்துக் கொண்டு வடமொழியை, வெறுப்பின்றி, உவப்போடு நாம் கற்றுப் போற்றுதல் வேண்டும். இதுவும் நமது கடமையாம் என்பதை வற்புறுத்துகிறேன்.

எனவே, சுதந்திர உலகில், தமிழ் சுதந்திரமாய் இயங்கும் நிலையில், வடமொழிக்கு அடிமை என்னும் நிலையில்லாது உண்மையான அறிவு வளர்ச்சி, கலைப்பண்பின் மேம்பாடு என்பனவற்றையே முக்கியமாகக்கொண்டு, வடமொழியின் உதவியும்பெற்று, தமிழ்மொழி நன்கு இயங்குதற்குரிய ஆற்றல் பெறுதல்வேண்டும். இனி நமது தமிழ் மேற்கூறிய ஆற்றல் பெறுதற்குரிய நெறிகளில் மிகவும் முக்கியமானவற்றைச் சிறிது நோக்குவோம்.

தமிழ்ப் பேரிலக்கியங்கள் நிலைத்த மதிப்புடையன. அவை ஒழிந்துள்ள பிறநூல்கள் பெரும்பாலும் வடமொழியைப் பின்பற்றியனவே. ஆதலால் விஞ்ஞான அறிவு பரவுவதற்கு இவை பயன்பட மாட்டா. இது உறுதியே. இக்காரணத்தால்தான் ஸர் ஸி. வி. ராமன் நமது இந்திய தேசத்து நூல் நிலயங்களிலுள்ள நூல்களில் பெரும்பாலனவற்றை எரித்து அழித்துவிட வேண்டும் என்று ஒரு சமயத்தில் கூறினர். அவர் கூறியபடி நாம் செய்வதானல், அது பிழையாகும். ஆனல் அவரது உட்கருத்து போற்றத்தக்கதாகும். விஞ்ஞான அறிவுதான் சிறந்த அறிவு, அதுதான் அறிவு என்று சொல்லுதற்குரிய

தகுதி வாய்ந்தது. அவ் அறிவைத் தமிழ் மக்களிடையே பரப்புதற்கும் அதனை மேன்மேலும் வளர்ப்பதற்கும் நமது தமிழ்மொழி வல்லதாதல் வேண்டும், அறிவுத் துறைகள் அனைத்திலும் தமிழில் நூல்கள் பிறத்தல் வேண்டும். நமது தமிழ் மக்களுக்கு விஞ்ஞான நோக்கு (Scientific-outLook) ஏற்படத் தமிழ் உதவுதல்வேண்டும். மேன்மேலும் அறிவை வளர்ப்பதற்குத் தக்க கருவியாக நமது மொழி அமைதல் வேண்டும். அறிவுத் துறைகள் பல வற்றிலும் தினம் தினம் உலகு முன்னேறி வருவதை அப்போதைக்கப்போது நாம் அறிந்துகொள்ளுதல் வேண்டும். அறிவுத்துறை வளர்ச்சியில் நாமும் முயன்று பங்கு கொள்ளுதல் வேண்டும். இவற்றிற்கு எல்லாம் மேலை நாட்டு மொழிகளின் துணை இன்றியமையாதது. இலக்கிய வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்குங்கூட இவற்றின் துணை வேண்டியதாகும். இத்துணையை முற்றும் பெறுவதற்கும் இனி எக்காலத்தும் பெற்று வருவதற்கும் பூரணமான சுதந்திரம் நமது தமிழ்மொழிக்கு வேண்டும். நமது தேசத்தைப் பெருமையுறச் செய்வதற்குச் சுதந்திரம் உதவுவதுபோல, அறிவு நூல்கள் நிரம்பி, தமிழ் மொழி பெருமை பெறுவதற்கு இவ்வகைப் பூரண சுதந்திரம் என்றும் அதற்குரியதாதல் வேண்டும்.

ஆங்கில மொழியின் துணையை விரும்பாது, நமது தமிழ்மொழி தெய்வத்தன்மை யுடையதென்றும், இம்மொழியில் எல்லாவகையான அறிவு நூல்களும் நிரம்பி யுள்ளன என்றும், இதற்கு இனி வளர்ச்சியே வேண்டுவதில்லை என்றும், இது பூரணத்தின் எல்லையை அடைந்து விட்டதென்றும் தமிழர்களுள் ஒரு சாரார் கூறிவருகின்றனர். இக்கொள்கையைப் போலக் கேடு விளைப்பது வேறு ஒன்றும் இல்லை. இதை எத்தனை முறை வற்புறுத்திக் கூறினாலும் தகும். என்று நமது மொழி பரிபூரண நிலையை

அடைகிறதோ அன்று அதனுடைய இறப்புத் திண்ணம். ஆனால் பரிபூரண நிலையை அது என்றும் அடைய முடியாது. மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு எல்லையில்லை. அது போன்றதே மொழியின் வளர்ச்சியும். அறிவை வளர்த்தும், அறிவினால் வளர்க்கப்பட்டும் செல்வது மொழி. இந்த உண்மையை மனத்திற் கொண்டு நமது தமிழ்மொழியைச் சுதந்திர நெறியிற் செல்லவிடுவதே அறிவுடையோர்கள் தம் கடமையாகும். மொழியின் இயற்கை மாறிக்கொண்டே செல்வதாகும். அதனை ஓடிக் கொண்டேயிருக்கும் ஒரு ஜீவநதிக்கு ஒப்பிடுதல் தகும். ஜீவநதியை அணையிட்டுத் தடுக்கலாமா? நதியின் இயற்கை ஓடிக்கொண்டேயிருப்பதல்லவா? பரிபூரண நிலையை நமது தமிழ்மொழி அடைந்துவிட்டது என்று கூறுவது அவ்வாறு அணையிட்டுத் தடுப்பதாகும். அதன் இயற்கையான சுதந்திர வாழ்க்கையைத் தடுத்து விலங்கிட்டுச் சிறையிலடைத்து, உண்டியும் உதவாது அதனைக்கொல்ல முயல்வதே இந்தப் பரிபூரண நிலைக் கொள்கை.

நமது தேசத்தின் சுதந்திரத்தைப் புறத்தே வெளியுலகில் காணப்படும் ஆட்சி முறைகளால் எளிதில் அறியலாம். ஆனால் நம் மொழியின் சுதந்திரம் அப்படி எளிதில் அறியப்படுவதன்று. அதற்கு உரியதான ஆற்றலைக் கொண்டுதான் அதன் சுதந்திரத்தை நாம் ஊகித்துணர்தல் கூடும். அவ் ஆற்றல் அறிவுவளர்ச்சியிலே புலப்படுவது. யாதோர் இடையூறுமின்றி, நேரிடும் இடையூறுகளையும் பொருட்படுத்தாது, அறிவு வளர்ச்சிக்கு உரிய நெறிகளையெல்லாம் கையாளுதற்குத் தக்க சுதந்திரமே நமது தமிழ்மொழிக்கு வேண்டுவது. தேசம் சுதந்திரம் அடைந்தது போலவே, நமது மொழியும் சுதந்திர நெறியிற் செல்வதற்குத் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒத்துழைப்போமாக!

# 4

# பாரதி யுகம்

நமது தமிழ் நாட்டிலே தேசாபிமானத்தை விதைத்துச் செழித்து வளரச் செய்தவர்களுள் ஒருவர் திரு. சுப்பிரமணிய பாரதியார். பல பெரியோர்கள் இத்துறையில் உழைத்து வந்தார்கள். ஒரு சிலர் அங்கங்கே அதன் அவசியத்தைப் பிரசங்க வாயிலாக நமது மக்களுக்கு அறிவுறுத்தி வந்தனர். சிலர் தேச சேவையில் ஈடுபட்டு, அதன் மூலமாக அவ்வுணர்ச்சியை வளர்த்தனர். சிலர் பத்திரிகை வாயிலாக நாட்டுப்பற்றுத் ததும்பும் அரிய கட்டுரையை எழுதி, அதன் வழியாக நம்மவருக்குப் புது நெறியைக் கற்பித்து வந்தனர். சிலர் சமுதாய சேவையில் ஈடுபட்டு நின்று, அதன் மூலமாகத் தேசாபிமானத்தைப் பரவச் செய்தனர். பாரதி தமக்கென ஒரு தனி வழியை வகுத்துக் கொண்டார். உணர்ச்சி ததும்பும் செய்யுளைப் போல அனைவரையும்—கற்றூர் கல்லாதவர், செல்வர் வறிஞர், முதியர் இளைஞர், ஆண் பெண் முதலிய அனைவரையும்—வசீகரிக்கத் தக்கது வேறு யாதும் இல்லை. இவ்வகைச் செய்யுள்கள் மூலமாக நம்மவர்களுக்குத் தேசாபிமானத்தைப் புகட்டியவர் பாரதி. ஆகவே இவரைத் தேசீய கவியென நம்மவர் முடிசூட்டியது மிகப்பொருத்தம் என்றே கருதுகிறேன்.

தேசீய கவியின் கனவுகள் சில கை கூடுங் காலம் வந்து விட்டது. நமது நாட்டவர்களே ராஜ்யபாரம் ஏற்று நடத்தத் தொடங்கிவிட்டார்கள். நாட்டைப் பீடித்திருக்கும் வறுமையைப் போக்க வழிதேட முயலுகிறுர்கள். கல்வி செழித்தோங்க வேண்டுமென்று கங்கணம் கட்டி, வேலை செய்து

வருகிறார்கள். பொது மக்களது நன்மை ஒன்றே அரசாங்கம் போற்ற வேண்டியது என்ற கொள்கை வேரூன்றி விட்டது.

வையம் மன்னுயி
ராக அவ் வையகம்
உய்யத் தாங்கும்
உடலன்ன மன்னவன்

என்ற கம்பன் வாக்கு உண்மையாய்ப் பலித்துவிட்டது.

அரசியல் - உலகில் மட்டுமன்றி, இலக்கிய - உலகிலும் பாரதியின் கனவு நனவாகி வருகிறது. முன்பெல்லாம் பெரும்பாலும் தெய்வத்தின் மீதும், அரசர், சிற்றரசர்கள், பிரபுக்கள் முதலானோர் மீதும் கவிதைகள் புனைந்து வந்தனர். சொற்கள் பொருளற்று, கவிதைகள் உயிரற்றுக் கிடந்தன. சம்மானம் பெறுதலொன்றையே கவிஞர்கள் தமது முதற்பெரு நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். கலையுணர்ச்சி, கவிதையுணர்ச்சி முதலியன இரண்டாம் நோக்கமாகவே புறக்கணிக்கப்பட்டன. இந்தக் குறைகள் நீங்குவதற்குப் பாரதி மிகப்பெரிதும் முயன்றார். முயற்சியில் வெற்றியும் அடைந்து விட்டார். யாசகத்தின் பொருட்டுப் பாடும் கவிஞர்கள் இக் காலத்துப் பெரும்பாலும் இல்லை.

கவிதைக்குரிய பொருளாகப் புதுவிஷயங்களைப் பாரதி கொண்டனர். பழம் பொருள்களைக் கூறுமிடத்தும், புதிய முறையில் கலைநயம் தோன்ற, கவித்துவ ஆற்றலோடும் உணர்ச்சி வேகத்தோடும் பாடியுள்ளார். ஸரஸ்வதி ஸ்தோத்திரத்தை எடுத்துக் கொள்வோம். இவ்வகையான ஸ்தோத்திரத்துக்குப் பழம் பெருமையும் உண்டு:

சொல்லின் கிழத்தி
மெல்லியல் இணையடி
சிந்தை வைத்து இயம்புவல்
செய்யுட்கு அணியே

என்று தண்டியலங்காரம் தொடங்குகிறது.

தவளத் தாமரை
தாதார் கோயில்
அவளைப் போற்றுதும்
அருந்தமிழ் குறித்தே

எனச் சேனாவரையர் தம் உரையைத் தொடங்குகின்றனர். கம்ப ராமாயணத் தனியன்களில் 'பொத்தகம் படிக மாலை' என்று தொடங்குஞ் செய்யுளொன்று உளது. கம்பர் ஸரஸ்வதியந்தாதி யொன்று பாடினரென்றும் கட்டுரைப் பர். அதில்,

ஆய கலைகள்
அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும்
என்னம்மை—தூய
உருப் பளிங்கு போல்வாள் என்
உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு
வாராது இடர்

என்பதும் உள்ளது. குமரகுருபர சுவாமிகளும் சகலகலா வல்லி மாலை ஒன்று பாடினர். இத் தேவியைக் குறித்துப் பல தனிப்பாடல்களும் உள்ளன. அவற்றுள் ஒன்று:

கடிமலர்கள் கொய்திட்டுக் கையிரண்டும் கூப்பி
அடிபணிய வேண்டிற் றளிக்கும்-நொடிவரையின்
வண்டார் கருங் கூந்தல் வஞ்சியிடைக் கிஞ்சுகவாய்
வெண்டா மரைமேல் விளக்கு

இவற்றில் உயிரும் ஆற்றலும் காண்பது அரிது.

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்:
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்:
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்:
உள்ள தாம்பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள் நின்று ஒளிர்வாள்:
கள்ளம் அற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்து உட்பொருள் ஆவாள்

என்ற பாரதி பாட்டின் இனிமையும், புதுமையும், கருத்து நயமும், உண்மை உணர்ச்சியும், கவித்துவப் பெருமையும், முற்காலத்து ஸரஸ்வதி ஸ்தோத்திரங்களில் சிறிதும் இல்லை. இத் தேவியின் மனம் இதுபோன்ற கவிதைகளாலன்றிக் கனியுமா ?

இவ்வகைப் பாடல்களைப் பாடிய பாரதி கவிதை-உலகில் ஒரு நூதன யுகத்தைத் தொடங்கி விட்டனர். 'பாரதி யுகம்' என்று இதனை வழங்கலாம். அவர் கனவும் கவிதையும் கவிஞர்கள் உள்ளத்தில் தூண்டா விளக்காக நின்று ஒளிர்க !

# 5

# பாரதியும் தமிழும்

பாரதி நாட்டு-விடுதலைப் பாடல்களைப் பாடினார்; விடுதலை உணர்ச்சியை நமது தமிழ் மக்கள் உள்ளத்தில் ஊன்றிச் செழித்து வளரச் செய்தனர். பெண்களின் விடுதலைக் கும்மி பாடினார்; நமது பெண்கள் உள்ளத்திலும் கல்வி விருப்பத்தையும், சுதந்திர உணர்ச்சியையும் சமத்துவ உணர்ச்சியையும் தழைத்தோங்கச் செய்தனர். இக்காலத்துப் பெண்கள்,

> **காத லொருவனைக் கைப்பிடித்தே—அவன்**
> **காரியம் யாவினும் கைகொடுத்து**
> **மாதர் - அறங்கள் பழமையைக் காட்டிலும்**
> **மாட்சி பெறச் செய்து வாழ்வம் அடி**

என்று எக்களிப்போடு பாடி மகிழ்கிறார்கள். இவ் இரண்டு வகை விடுதலையோடு பாரதியின் முயற்சி நின்று விடவில்லை. மூன்றாவதொரு விடுதலைக்காகவும் அவர் முயன்று உழைத்து வந்திருக்கிறார். அதுதான் 'தமிழ்க்கு விடுதலை' யாகும். இவ் விடுதலையைப் பற்றி அவர் பாடவில்லை என்பது உண்மை. ஆனால் அவர் பாடல்கள் எல்லாவற்றிலும் இவ்வகை விடுதலையை நாம் எளிதிற் காணலாம்.

பல நூற்றாண்டுகளாய் வளர்ந்து பெருகிக் கொண்டே வந்த தமிழ்மொழி கம்பன் காலத்தில் அதன் உச்ச நிலையை அடைந்தது. சங்க காலத்தும் அதன் பிற்காலத்தும் தோன்றிய இலக்கியங்களினின்றும் எவ்வளவு வளம்பெற முடியுமோ அவ்வளவு வளமும் தமிழ்மொழி பெற்றது. அன்றியும் மிகப் பூர்வகாலந் தொட்டு அகில பாரத மொழியாய் வழங்கிய வட மொழியின் இலக்கியங்களாலும் தமிழ்

வளம்பெற்றுச் செழித்தது. ஆரிய நாகரிகமும், தமிழ நாகரிகமும் ஒன்றுகூடித் தென்னாட்டில் பரவிய கலப்பு நாகரிகத்தின் பேரெல்லையை அறிவுறுத்துவதாக, நமது தமிழும் செழிப்புற்றோங்கியது. காவிரிப் பேராறு இரு கரையும் நிரம்பிப் பெருக்கெடுத்து ஓடி ஜீவராசிகளை ஊட்டிச் செல்வது போல, தமிழ்மொழி என்னும் ஜீவநதியும் பெருகிப் பரந்து தமிழ் மக்களுக்கு அறிவுவளம் ஊட்டிச் சென்றது. ஆனால் கம்பன் காலத்திற்குப் பின்பு, இத் தமிழ்ப் பேராறு பல கால்வாய்களாகப் பிரிந்து விட்டது. சிற்றரசர்களைப் பற்றிய புகழ்ச்சிப் பாடல்களும், காதற் பிரபந்தங்களும், புராணங்களும், பலவகைப் பிரபந்தங்களும் தமிழில் நிரம்பலாயின. இவற்றால் தமிழின் வன்மையும் வேகமும் சிறிது சிறிதாகக் குறைவுபடலாயின. இவ் வகை இலக்கியங்களுங்கூட நாளடைவிற் குறைந்து விட்டன. தமிழ் மக்களது அறிவு வளர்ச்சியும், அனுபவ வளர்ச்சியும் தடையுற்று நின்றன. தமிழும் தனதுஇயற்கை வலிமையையும், ஜீவவேகத்தையும் இழந்து விட்டது. பேராறாகவும், சிற்றாறுகளாகவும் கால்வாய்களாகவும் நாடு செழிக்கப் பரந்தோடிவந்த நீரோட்டம் முடிவில் சேற்றுப் பள்ளங்களில் ஆழ்ந்து தேங்கிக் கட்டுக் கிடையாய் நிற்பது போல, தமிழும் கட்டுக்கிடையாய் நின்று விட்டது. தமிழுக்கு விமோசனம் இல்லை யென்றுகூடச் சிற்சிலர் கருதத் தொடங்கி விட்டனர். இந் நிலையைத்தான்,

**புத்தம் புதிய கலைகள்—பஞ்ச**
**பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;**
**மெத்த வளருது மேற்கே—அந்த**
**மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.**
**சொல்லவுங் கூடுவதில்லை—அவை**
**சொல்லுந் திறமை தமிழ் மொழிக் கில்லை;**
**மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த**
**மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்**

என்று ஒரு 'பேதை' கூறியதாகப் பாரதியார் பாடியுள்ளார்.

இவ்வாறு கட்டுக்கிடையாகக் கிடந்த தமிழ்மொழியை விடுதலை செய்து அதற்குரிய இயற்கை வலிமையோடு மீண்டும் ஜீவநதியாகப் பெருகிப் பாயும்படி செய்தவர் கவி பாரதியாரே, அவர் பாடல்களிலும் வசனங்களிலும் குற்றுயிராய் மரணவஸ்தையிலிருந்த தமிழ் புத்துயிர் பெற்று ஜீவவேகத்துடன் நடனமிட்டுக் களித்தாடுகிறது.

இச் செயற்கரிய காரியத்தைப் பாரதியார் எவ்வாறு செய்து முடித்தனர்? இதற்கு விடை தமிழ்ச் சொற்கள், தமிழ் நடை, நூற் பொருள் என்ற மூவகையிலும் தமிழ் இருந்த நிலையை நோக்கினுல் எளிதில் அறியலாம்.

புலவர்கள் தங்கள் நூல்களில் வழங்கி வந்த சொற்களில் செம்பாதி வழக்கொழிந்தவையா யிருந்தன. தற்கால வழக்கிலுள்ள சொற்களைக் கூடியவரை நீக்கி விடுதலே தங்கள் கடமையெனக் கருதினுர்கள். வழக்கற்ற, கரடு முரடான, அருஞ்சொற்களைக் கையாளுவதில் மிக்க ஊக்கங் காட்டி வந்தனர். சில, பொருள் கருகலான சொற்களா யிருந்தன. சில, ஆடம்பரமிக்க சொற்களாயிருந்தன. கீழ் வருகின்ற உதாரணத்தை நோக்குங்கள்:

> **ஆயிடைச் செல்வோர், உடுத்தன வெள்ளுடையாய், உரு நிறம் வெண்ணிறமாய்த் திகழ்தலின், பானிறக் கலிங்கம் உடுத்து மாலைக் காலத்திற் கூலத்தில் உலாவரும் வெண்ணிற மக்களை நிகர்த்தனர். அம் மறுகையடுத்துக் கொடிகள் துயல் வரப் பன்னிறக் கண்ணடிச் சாளரம் அமைத்து நாற்றிசையுங் காண்வர ஏற்றிய விளக்கொடு நின்ற மாடங்கள், கலங் கரை விளக்கமென இலங்குற்றன.**

இதில் எத்தனை அருஞ் சொற்களும் வழக்கொழிந்து மாண்டுவிட்ட சொற்களும் உள்ளன என்று பாருங்கள்! இவ்வகை நூல்களைக் கற்பது என்பது கையில் அகராதியை வைத்துக்கொண்டுதான் முடியும்.

ஆடம்பரச் சொற்களைக் கையாளுவோர் உயிரற்ற பிணத்தை அலங்கரிப்பதுபோல், பொருளற்ற தம் வாக்கியத்தைப் பகட்டு மொழிகளால் நிரப்பி விடுகின்றனர். மேலே காட்டிய வாக்கியங்களில் தமிழ்ப் பகட்டு மொழிகளும் நிரம்பியுள்ளன. வடமொழிப் பகட்டு மொழிகளை வழங்குவதிலும் நம் தமிழ்மக்கள் ஊக்கங் காட்டியுள்ளார்கள் :

> மஹாராஜாவே, நின்னுடைய ஆஜ்ஞாலங்கன பயத்தால் அவர்களைக் கொண்டு வனம்புக்கு, கிரிதுர்க்கா த்வாரத்துள் உறையும் முநீவரன் என நிர்ப்பய விவிக்த விஹாரியாகி நிர்மலமாகிய லேச்யை யுடையதொரு மஹாபல கேஸரி ஸந்நிஹித மாயினவாறே அதன்முன் அவரை உய்த்தேன்.

இனி இப்புலவர்கள் கையாண்ட தமிழ் நடையை நோக்குவோம். நாம் கற்ற பண்டை நூல்களிலிருந்து பல தொடர்களையும், செய்யுட்களையும் வசனமாக அமைத்து விடுதலே 'உயரிய' செந்தமிழ் நடையெனக் கொள்ளப்பட்டது. இதுவே வழக்கமாகவும் முடிந்தது. இன்றும் அவ்வாறே ஒரு சிலர் எழுதி வருகின்றனர் ;

> கல்வியுடையவரே கண்ணுடையவர். கல்லாதார் முகத்திரண்டு புண்ணுடையவரே. கல்லாதார் மக்கள் உடம்பிற் பிறந்திருந்தும் விலங்கினை ஒப்பாவார் ; அன்றியும், மக்களுட் பதடியுமாவார். கேடில் விழுச்செல்வமாகிய கல்வியைப் பெற்றவர் நீரால், நெருப்பால், கள்வரால், தாயத்தாரால், பிறரால் அழிவுறும் ஏனைச் செல்வத்தைச் செல்வமென மனங் கொள்ளார்...கற்றவர் குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகையும் மதித்திடார்.

இதுபோன்ற தமிழ் வசன நடையினுல், ஆசிரியரது கல்விப் பெருக்கமும், ஞாபக சக்தியும் நமக்குப் புலனுகின்றன. இவற்றை நாம் வியக்கலாம். ஆனுல் இந்நடையை நாம் வியக்க முடியாது. பழஞ் சுண்டற்கறியை ஆசிரியர் வாசகர்களுக்கு விருந்து செய்ய முயன்றிருக்கிருர். நமது அறிவு வளர்ச்சிக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் இந்நடை

பெரியதொரு தடையாக உள்ளது. மேலும், சோலையை நினைத்த அளவில் 'நாண்மலர்ச்சோலை' என்றும், சந்திரனை நினைத்த அளவில் 'பன்மீன் நடுவட் பான்மதி' என்றும், உலகத்தை நினைத்த அளவில் 'கடல் புடைசூழ்ந்த மலர் தலையுலகம்' என்றும் இவ்வாறாக எழுதுவதில் கருத்தின் வளர்ச்சிக்குச் சிறிதும் இடமில்லை. இவைபோன்ற தொடர்களைக் கிளிப் பிள்ளைபோலத் திருப்பித் திருப்பிச் சொல்லுவதால், இவைகளுக்குப் பொருளே இல்லாமற் போய்விட்டது. இப் பரம்பரை—அடைமொழிகளால் வசன நடை அர்த்தமற்று, உயிரற்றுப் போய்விடுகிறது.

ஒரு சிலர் எதுகை நயங்களையும் மோனை நயங்களையும் எதுகை—மோனை நயங்களையும் வசன நடையில் அமைத்துத் தம்முள்ளே மகிழ்ந்து வாசகர்களுக்கு நகைப்பு ஊட்டி வந்தனர் :

> இடியொலி கேட்ட பாம்பெனத் துடிதுடித்து அடியற்ற மரமெனப் படிமிசைத் திடீரென வீழ்ந்து...
>
> ஆராயாமற் காரியஞ்செய்து அரும்பழி பூண்டமைக்கு நெஞ்சு அயர்ந்து, அரியணை மீது வீழ்ந்து அன்றே உயிர் அகற்றினன்.
>
> கண்ணைப் பறிக்கின்ற இவ்வுரு விண்ணினின்றும் இறங்கிய மின் கொடியோ! மின்னலெனின், விண்ணில் இயங்குவதல்லது மண்ணிடை இயங்காதே! வானிலும் கண்டபொழுதே மறைவதன்றே! கண்ணைவிட் டகலாத இவ்வுரு விண்ணுறை அணங்கோ! விஞ்சையர் மகளோ! வரைவளர் தெய்வமோ! நிரை மலர்த் தடத்துறை நீரர மகளோ!

இங்ஙனம் எழுதுபவர்களும் தங்கள் அறிவுச் சூன்யத்தைச் செய்யுட்குரிய இந் நயங்களால் மறைக்க முயலுகின்றனர்.

இன்னும் சிலர் 'மலை கல்லி எலி பிடிப்பவர்போல' சில அற்பக் கருத்துக்களை வெளியிடப் படாடோபமான பெரிய சொற்களை வழங்கி வந்தனர் :

***இழிதகவ! இஞ்ஞான்று ஈதென்னை? வறுமைக் காலத்தில் முதுமைத்துறவி உறழ ஸாஸா என்னக்கடையுயிர்ப் பெறுகின்றனை?***

இவ் வாக்கியத்தைக் கேட்டதும் சிரிக்காமல் யாராவது இருக்க முடியுமா? சிறு கைக்குழந்தைக்கு ராக்ஷஸன் அணியத்தக்க பெரிய உடுப்புக்களை அணிவதுபோல, இவர்கள் எழுதுகிறார்கள். கருத்துக்கேற்ற நடையில் எழுத வேண்டுமென்ற தகுதியுணர்ச்சியே இவர்களுக்கு இல்லை.

வேறு சிலர் பழைய நூல்களில் விளங்காத பகுதிகளைத் தமது வசனத்தில் அமைத்துத் தமது பெரும் புலமையை விளம்பரப்படுத்தி வந்தனர் :

***இன்னிசையாழை இடவயின் தழீஇக் கொண்டு மாடகந்திரித்து, வாரியும், வடித்தும், உந்தியும், உறழ்ந்தும் பாடிமகிழும் இளமகளிர் மலையிடமெல்லாம் ஆரவாரிக்கப் பாடி, முருகவேளை வழிபடும் வரையர மகளிரை ஒத்தனர்.***

இதனைப் போன்றதொரு பாண்டித்திய படாடோபமே கீழே தரப்படுவதும் :

***விழுச் சுடர்ச் செம்பொன் மேருமால் வரையைத் தலைப்படலுறுவாராய் நாவலந் தீவிற் பாரத வருடத்தினை யெய்தி, ஆண்டு நின்று நெறி வினாயினார்க்கு அஃதறிந்துள்ளார் ஆண்டுக் காட்டிய நெறியே செந்நெறியாயினும், அந்நெறி இமயத்தை இடையிட்டுக் கிம்புருட வருடத்திற் செலுத்த, அஃது ஏமகூடத்தை இடையிட்டு அரிவருடத்திற் கொண்டு செலுத்த, அது நிடதத்தை யிடையிட்டு இளாவிருத வருடத்திற் கொண்டு செலுத்த இவ்வாறு நாற்றிசையுள் யாண்டு நின்றெய்தினும் நாவலந்தீவினைத் தலைப்பட்டு இளாவிருத வருடத்திற்கொண்டு செலுத்துதலும், அஃது இடையீடின்றி மேருமால் வரைக்கே செலுத்துதலும் போல, புறச் சமய, அகச் சமயங்களினின்றும் மேற் சென்றுசென் றேறிச் சைவத்தை யெய்தப் பெற்றோர்.***

எத்தனை அருமையான பூமிசாஸ்திரம் இது! ஆசிரியர் கருதிய கருத்துத்தான் எத்தனை விளக்கமாக இப்பூமி சாஸ்திர உதாரணத்தால் தெரிவிக்கப்படுகிறது!

மேலே காட்டிய பூமிசாஸ்திரவிஷயங்கள் வடமொழிக் கட்டுக்கிடைச் சரக்குக்கள். தமிழை நசிப்பதற்குத் தமிழ்க் கட்டுக் கிடைகள் போதா என்று வடமொழியினின்றுங் கட்டுக்கிடைகளைத் தேடிக்கொண்டு வந்து, தமிழின் தலையிலேற்றி அதனை அழுத்திக் குறுகச்செய்து, தரை யோடு தரையாய்த் தேய்த்து விடுவதற்குச் சில புலவர் கள் முயன்றார்கள். எத்தனையோ அரிய இலக்கியச் செல் வம் படைத்தது வடமொழி. அதனை ஒதுக்கிவிட்டு ஒன்றுக்கும் உதவாத பொருள்களில் இப்புலவர்களின் கவனம் செல்வதற்குக் காரணம் தெரியவில்லை. வட மொழியின் கூட்டுறவினால் தமிழ் எத்தனையோ நன்மை களைப் பெற்றிருக்கிறது. இது உண்மை. இதுபோலவே, இக்கூட்டுறவைத் தக்கபடி பயன்படுத்தாமையால், எத் தனையோ தீங்குகளும் தமிழிற் புகுந்து விட்டன. அணி யிலக்கணம் என்ற பெயரால் தமிழிற்கு விளைந்த துன்பங் களைச் சொல்லி முடியாது. இவ் இலக்கணம்தான் தமிழ் நடையை இயல்பிற்கு மாறாக விலங்கிட்டுத் தடைசெய்து, முற்றும் கெடுத்துவிட்டது. வடமொழி ஆசிரியர்களைப் பின்பற்றி வசனமும், செய்யுளும் எழுதத் தொடங்கி, தாம் கையாளுவது தமிழ்தானோ என்று ஐயுறும்படியாகச் செய்துவிட்டது. மாறனலங்காரம், தண்டியலங்காரசாரம் முதலியவற்றில் வரும் உதாரணச் செய்யுட்களை நோக் கினால் மேற்கூறியதன் உண்மை புலப்படும்.

**கற்பகப் பாவடி வாரணம் பாற்கடந் தோன் செந்தமிழ்க்**
**கற்பகப் பாவடி வாரணங் கண்டவர் கோனருள்வி**
**கற்பகப் பாவடி வாரணங் கார்மலர்க் காமொய்தில்லைக்**
**கற்பகப் பாவடி வாரணம் யான்பெறக் காட்டிடுமே**

**வாயாயா நீகாவா யாதாமா தாமாதா**
**யாகாவா நீயாயா வா**

என்பன போன்ற செய்யுட்கள் தமிழணங்கு குற்றுயிராகக் கிடக்கிறாள் என்பதை நமக்குப் புலப்படுத்துகின்றன.

புலவர் தம் காவியங்களில் நகர் வருணனை, மலைவருணனை முதலியன செய்யவேண்டுமென்று அலங்கார நூல்கள் வற்புறுத்தின. அவ்வாறே செய்ய அப்புலவர்களும் முற்பட்டனர். ஆனால் பாவனாசக்தி வாய்ந்திருந்தால் தானே இவ்வருணனைகள் செய்ய இயலும்? சிறிது முயன்று சில வருணனைச் செய்யுட்களை இயற்றுவார்கள். இதற்குள் இவர்களது பாவனா சக்தி வறண்டு மாய்ந்து விடுகிறது. உடனே திரிபு, இரண்டடிப் பாடகமடக்கு, ஏகபாதம், ஓரெழுத்து விகற்பத்தான் வந்த மடக்கு, திரிபங்கி கோமூத்திரி, முரசபந்தம், அஷ்டநாயகபந்தம் முதலியவற்றில் இறங்கிப் பொருளற்ற கிருத்திரிம அலங்காரங்களில் தங்கள் அறிவாற்றலைப் பாழாக்குவர். இவ்வாறு வதையுண்ட தமிழுக்கு என்றேனும் விடுதலை ஏற்படுமா என்று யாவரும் கவலையுறுதல் இயல்புதானே?

இனி, தமிழ் நூல்களில் அமைந்துள்ள நூற்பொருள்களை நோக்குவோம். பொதுவாக, இவைகள் தெய்வங்களைக் குறித்த தோத்திரங்களாகவும், பிரபந்தங்களாகவும் புராணங்களாகவும் இருந்தன. தோத்திரங்களெல்லாம் பெரும்பாலும் ஒரே தன்மையன. தாயோ, பிறரோ, சொல்லியவற்றையே திரும்பத் திரும்பச் சொல்லுவதில் சுவை ஏதேனுங் காணமுடியுமா? முடியாது. இவற்றிலே ஆழ்ந்த தத்துவங்களை நாம் எதிர் பார்க்கலாம்; ஆனால் இவ்விஷயத்திலுங்கூட நாம் ஏமாறவேண்டியதுதான். நமது தத்துவ நூல்களிலுள்ள சங்கேதபதங்களைக் காணலாம். ஆனால், கருத்து வளர்ச்சி, உண்மையறிவு, கவிதை உணர்ச்சி, இவற்றிற்கு இப்பதங்களின் அடுக்குகளால் சிறிதும் பயனில்லை.

**நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப**
**நிர்விஷய கைவ்ல்யமா**
**நிஷ்கள வ்சங்கசஞ் சலரகித நிர்வசன**
**நிர்த்தொந்த நித்தமுத்த**

தற்பர விச்வாதீத வ்யோமபரி பூரண
சதானந்த ஞானபகவ
சம்புசிவ சங்கர சர்வேச வென்றுநான்
சர்வகாலமு நினைவனே
அற்புத வகோசர நிவர்த்திபெறு மன்பருக்
கானந்த பூர்த்தியான
அத்துவித நிச்சய சொரூபசா க்ஷாத்கார
அனுபூதி யனுகூதமுங்
கற்பனையறக்காண முக்கணுடன் வடநிழர்
கண்ணூடிருந்த குருவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணைகரக் கடவுளே

இத் தாயுமானர் பாடலில் வாய் நிரம்பிய சொற்கள் உள்ளன. தத்துவ-எலும்புச் சட்டகம் தோன்றுகிறது. ஆனல் ஆழ்ந்த தத்துவ உணர்ச்சியை எழுப்புதற்கு இது வன்மையுடையதல்ல. கவிதை உணர்ச்சியோ, இப் பாட்டினுள் தங்கி நிற்க மறுத்துப் பறந்தோடிவிட்டது. இதிலே வடமொழி யென்னும் நாகபாசத்தால் கட்டுண்டு, தமிழ்மொழி உயிர் குறைந்து மரணவஸ்தை யெய்தியுள்ளது.

தெய்வம் பற்றித் தோன்றியுள்ள பிரபந்த வகைகளும் வேறுபாடுகள் சிறிதும் இன்றி ஒரே அச்சில் வார்த்தன போல உள்ளன. உதாரணமாக, கோவை, உலா முதலிய பிரபந்தங்களைக் கூறலாம். இவைகளில், உலாப் பிரபந்த வகையிலாவது சில வேற்றுமைகள் உண்டு; கோவையில் அதுவும் இல்லை. கோவையிலே காட்சிமுதல் கார்ப்பருவம் கண்டு இரங்கல் வரையுள்ள பல துறைகளும் அழகு யாதுமின்றி, கவித்துவச் சிறப்பின்றிப் பாடப்பட்டுள்ளன. ஸ்தலம்பற்றியுள்ள சரித்திரக் குறிப்புக்கள் கூட இவற்றில் கிடைத்தல் அருமை. ஆகவே, இவற்றில் ஒரு சில தவிர, ஏனைய எல்லாம் ஒருவகைப் பயனும் தரத்தக்கன அல்ல. இவற்றில் காணும் தமிழும் ஒரு படித்தாய், சிறந்த நயம் யாதுமின்றி உள்ளது. ஏதேனும் ஒரு ஸ்தலத்தையோ

மூர்த்தியையோ எடுத்துக் கொண்டு எல்லா வகையான பிரபந்தங்களையும் பாடி முடிக்கவேண்டும் என்பதே வழக்கமாக ஏற்பட்டு விட்டது. இவ்வகைப் பிரபந்தங்களே நம் நாட்டில் மலிந்து விட்டன. தமிழ்க் கவிதைப் பயிரை வேரோடு அழித்துவிட்ட விஷப்பூண்டுகள் என்று இவற்றைச் சொல்லலாம்.

இனி, புராணங்களை நாம் எடுத்துக் கொண்டால் அவற்றாலும் தமிழும் தமிழ்நாட்டு மக்களும் சீர் கேடுற்ற நிலைமைதான் நமக்குத் தெரிகின்றது. வடமொழியிலுள்ள பதினெண் புராணங்களின் மொழிபெயர்ப்புக்கள் சில தமிழில் உள்ளன. இவை போதா என்று தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஸ்தலத்திற்கும் புராணம் எழுதத் தொடங்கி விட்டனர். இப்புராணங்களைக் காவிய லக்ஷணமுள்ளன போல இயற்றி இவற்றில் பல வகையான பொய் வரலாறுகளையும் புனைந்துரைத்து எழுதி வந்தனர். சூரியன், சந்திரன், இந்திரன், மஹரிஷிகள், பிரம விஷ்ணு ருத்ரர்கள், உமாதேவியார், அரசர்கள் முதலானவர்களுக்கெல்லாம் ஒரே கடமை ஏற்பட்டு விட்டது! அவர்கள் தினந்தோறும் பல தலங்களுக்கும் சென்று இறைவனைப் பூசித்து தங்களுக்கு முன்பு ஏற்பட்டுள்ள சாபத்தினின்றும் விமோசனம் பெறுதலே அவர்கள் வேலை. இவ்வகையான கதைகளை எழுதிவைத்துச் சமயத்தின் பேரிலேயே அருவருப்பு உண்டாகும்படியாகச் செய்து விட்டனர் இப்புராண ஆசிரியர்கள். இவர்கள் சில இடங்களிலுள்ள கட்டுக் கிடை நீரைத் தீர்த்தமெனக் கொண்டு, மோக்ஷதாயினி, பாபநாசினி என்பன முதலாகப் பேரிட்டு மகிழ்ந்து, தங்களுடைய பக்தியை வெளியிட்டிருக்கிறார்கள். இக் கட்டுக்கிடை நீர் நாற்றம் எடுப்பது போலுள்ளதுதான் இப்புலவர்களது தமிழும். உண்மையான தெய்வப்பற்றும், உண்மையான தமிழ்ப் பற்றும், உண்மையான நாட்டுப் பற்றும் நமக்கு

உண்டாகாதபடி செய்து விட்டது இவ்வகைப புராணம் என்றே சொல்லலாம். நேர்மாருக, இவர்கள் செய்துள்ள கட்டுக் கதைகளின் மீது அருவருப்பும், இவர்கள் எழுதி யுள்ள தமிழின்மீது அருவருப்பும், உண்டாகும்படி செய்து விட்டனர்.

இனி மக்களைக் குறித்துப் புலவர்களிற் சிலர் எழுதி யுள்ள பாடல்களை நோக்குவோம். புராணங்கள் தோன்று வதற்கு இங்கே இடமில்லை. ஆகவே, தோத்திரப் பாடல் களும், பிரபந்தங்களுமே மக்களைப்பற்றி யுள்ளன. பொய் யின் பேரெல்லையை இவ்வகை நூல்களிலே நாம் காண லாம். உண்மை என்பது மருந்துக்கும் இவற்றில் காணக் கிடையாது. உயர்வு நவிற்சியையே எப்பொழுதும் கை யாண்டு உண்மையின் இயல்பையே இவர்கள் மறந்து விட் டார்கள். கூறுவனவற்றை ஆத்ம சுத்தியோடு கூற வேண்டும் என்ற நினைப்பும் இவர்களுக்கு இல்லை. 'மனம் வேறு, சொல் வேறு, மன்னு தொழில் வேறு' என்று கூறியபடி இவர்களுடைய இயற்கை அமைந்து விட்டது. ஒரு புலவர்,

கல்லாத ஒருவனை நான் கற்ருய் என்றேன்
கற்றெறியும் மறவனை நாடாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனை நான் நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியேறு என்றேன்
மல்லாரும் புயம் என்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையனை நான் வள்ளல் என்றேன்
இல்லாது சொன்னேனுக்கு இல்லையென்ருன்
யானும் என்றன் குற்றத்தால் ஏகின்றேனே

என்று தாம் செய்த பாபத்திற்காக இரங்குகிருர். தமிழ் நாட்டுப் புலவர்களுள் இவர் ஒருவர்தான் தாம் செய்தது பாபம் என்று இரங்கிப் பாடியவர், இவர்போன்ற புலவர் கள் பாடிய புகழ்ச்சிகளால் தமிழிற்கே உண்மையை உணர்த்தும் ஆற்றல் இல்லையோ என்று சிலர் ஐயுறும் படியாக நேர்ந்து விட்டது.

இங்ஙனமாக, சொல், நடை, கருத்துப் பொருள், நூற்பொருள் முதலிய பல விஷயங்களிலும் தமிழ் மிகச் சீர்கேடுற்ற நிலையிலே இருந்தது. இதனை மீண்டும் நன்னிலைக்குக் கொண்டு வருவது, அறிவும் ஆற்றலும் கல்வியும் பெரிதும் நிரம்பிய ஒரு பெருங் கவிஞனால் அல்லது, இயலாததாய் முடிந்தது. இவனும் புத்துணர்ச்சிகள் பலவும் பொருந்தியவனாய், பிற நாட்டு இலக்கியங்களை உணர்ந்தவனாய், தன் நாடு மேம்படவேண்டும் என்ற நிலைத்த நோக்கம் உடையவனாய், உண்மை உரைப்பதிலே பெருநாட்டம் உடையவனாய், அஞ்சாமையே தனக்கு அரணாக உடையவனாய் இருக்கவேண்டுவது அவசியமாயிற்று.

இவ் இயல்புகளுக்கெல்லாம் இலட்சியமாகத் தோன்றியவர் நமது தேசியகவி பாரதியார். பொய்யாக மக்களைப் பாடும் பொய்வாழ்வின் பெரும் பகைவரென்று இவரைக் கூறலாம். அடிமை வாழ்வு அழிய வேண்டுமென்று இரவும் பகலும் சிந்தித்து முயன்று வந்தவர். அதற்குரிய ஆத்ம சக்தி தம் நாட்டினர்க்கு வேண்டுமென்று பராசக்தியை வணங்கிப் போற்றியவர். நாடு முழுவதிலும் ஒற்றுமை-மனப்பான்மை நிரம்ப வேண்டுமென்று சங்கநாதம் செய்தவர். சாதி வேற்றுமை அறவே ஒழியவேண்டும் என்றும், தீண்டாமைப்பேய் அணுகக்கூடாது என்றும் பறை முழக்கியவர். நாட்டுப்பற்று இவர் இதயத்திலே சுரந்து பொங்கி வழிந்தது. உண்மை ஒளியானது இவரது வாக்கினிலே சுடர்விட்டு இலங்கியது. இவருடைய பாடலிலேயும் இவ் உண்மையொளி காணப்படுகிறது.

**உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்**
**வாக்கினிலே ஒளியுண் டாகும்**

என்று அருமையாகப் பாடிய புலவர் இவரே. விடுதலை

பெற்ற தமிழில் தமது அரிய பாடல்களை இயற்றினர். இவருடைய தமிழ் கட்டுக்கிடை அன்று. தினந்தோறும் வழங்கிவரும் மொழி. பேச்சு—வழக்கிற்கு ஒத்தநடை. இது, வருணனைகள், அலங்காரங்கள் எல்லாவற்றையும் நீக்கி, தனக்கு இயல்பாகவுள்ள பேரழகோடு விளங்குவது; இயல்பாகவுள்ள ஆற்றலோடும் சிறப்போடும் செல்லுவது, இவரது தமிழ் இவருடைய கருத்துக்களை வெளிப்படாமல் மறைப்பதற்கு இட்ட திரை அல்ல. பாடல்களைப் பாடிய மாத்திரையில், பொருள் உணர்த்தவேண்டும், அவசியம் இன்றி, கருத்துக்கள் நம்மனத்தில் நேரே பாய்கின்றன. பாட்டிற்குரிய பொருள்கள் நம்முடைய அறிவை முற்றும் கவர்ந்துவிடுகின்றன. பாட்டினுடைய வடிவும் அழகும் நம்மைப் பரவசப் படுத்துகின்றன. இங்ஙனம் தமிழ்-விடுதலை செய்த இப் பெருங்கவிஞரைத் தமிழ்நாடு என்றும் மறவாது.

6

# நவீன கீதை

ஸ்ரீ பகவத் கீதையை அருளிச் செய்தவன் கண்ண பிரான். வேத உபநிஷதங்களுக்குச் சமமாகக் கருதப்படும் அக்கீதை நமது பாரத தேசத்து மக்கள் அனைவராலும் போற்றப்பட்டு வருகிறது. சமயசாஸ்திரமாகவும், தத்துவ சாஸ்திர மாகவும், அது பெரும்புகழ் பெற்று விளங்கு கிறது. தேசீய உணர்ச்சி நம் நாட்டில் பரவிவரும் இக் காலத்தில் அப்பெருநூல் தேசீய நூற் செல்வமாகவும் பாராட்டிக் கற்கப்படுகிறது. அதன் வரலாறு நம் நாட்டி னர் அனைவரும் அறிந்ததேயாகும்.

பாரத யுத்தம் தொடங்கி விட்டது. கௌரவரும் பாண்டவரும் தத்தம் சேனைகளை அணிவகுத்து நிறுத்தி யிருக்கின்றனர். இருதிறத்தாரது படைகளுக்கும் நடுவே, அருச்சுனன் தனது ரதத்தைச் செலுத்துவித்துப் படை களையும் படைத் தலைவர்களையும் நோக்குகிறான். இருபக்கத் திலும் தந்தைகள், பாட்டன்மார்கள், ஆசாரியர்கள், மாமன் மார்கள், சகோதரர்கள், புத்திரர்கள், பௌத்திரர்கள், நண்பர்கள் முதலியோர்கள் காணப்படுகிறார்கள். அருச் சுனன் அச்சங்கொள்ளுகிறான்; இவர்களைக் காப்பதன் பொருட்டுப் போர்புரிவது இயற்கையாயிருக்க, இவர் களையே கொல்வது பழியும் பாவமும் ஆமென்று கருது கிறான்; போர் புரிவதில் சிறிதும் கருத்தின்றிக் கோழை யாய் நிற்கின்றான். அவனது ரதத்தின் சாரதியாயிருந்த ருஷ்ணன் அவனைத் தேற்றித் தைரியம் ஊட்டிப் போர்

புரியச் சொல்கிறான். அத்தேற்ற வாசகமே நமது கீதை யாய்ப் பரிணமித்தது.

உலகவாழ்வே போர் மயமாக உள்ளது. இப்போர் பூண்டு நிற்கும் வேஷங்கள் பலபடியாக இருக்கும். அது நிகழ்வதற்குரிய காரணமும் பலவகையாயிருக்கும். அது நிகழும் களங்களும் பல்வேறு திறத்தவையா யிருக்கும். ஆனால் போர் நிகழாத காலமோ இடமோ கிடையாது. பகைமைக்காகப் போர்; நட்புக்காகப் போர்; பகைமையை ஒழித்துச் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காகப் போர்; பிறரை அடிமையாக்கப் போர்; அடிமை நிலையை ஒழிக்கப் போர்; ஒத்துழைப்பிற்குப் போர்; ஒத்துழையாமைக்குப் போர்; மண்ணுக்காகப் போர்; பொன்னுக்காகப் போர்; உணவுக்காகப் போர் ; உண்வின்மைக்காகப் போர்; லாபத்திற்காகப் போர்; நஷ்டத்திற்காகப் போர்; ஸாத்விகப் போர்; அஸாத்விகப் போர்—ஏதாவது ஒரு வடிவில், ஏதாவது காரணம்பற்றிப் போர் நிகழ்ந்த வண்ணமாகவே இருக்கிறது. வாழ்க்கைப்போராட்டம் என்பது பரம்பொருளைப் போல் நித்தியத்துவம் பெற்றுள்ளது. இதனை ஒழிப்பதற்கு அணுகுண்டுப் பிரயோகத்தாலும் இயலாது.

இந்நிலையில் நாம் யாது செய்தல் வேண்டும்? போர் புரிந்து நமது கடமையை நிறைவேற்றுதலே தக்கது. இதனைத்தான் அருச்சுனனுக்கு உபதேசஞ் செய்யு முறையால், கண்ணபிரான் நமக்கு உணர்த்தியிருக்கிறார். ஆனால் இங்கே கடமையென்பது க்ஷத்திரிய தருமமாகும். வருணாச்சிரம தர்மங்களின் மீது கட்டப்பட்டது. தற்காலத்தில், இது மிகவும் குறுகிய பொருள் அல்லவா?

பகவத்கீதை தோன்றியது சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன் என்பர் ஆராய்ச்சியாளர். அக்காலத்துள்ளாரது மனநிலையினின்றும் நமது மனநிலை எவ்வளவோ

மாறுபட்டுவிட்டது. அவர்களது சூழ்நிலையும் நமது சூழ்நிலையும் பெரிதும் வேற்றுமைப்பட்டன. அவர்கள் நோக்கமும், நமது நோக்கமும் ஒற்றுமைப் பட்டன அல்ல. இப்போதுள்ள நோக்கங்கள் யாவை? ஜாதி வேற்றுமை ஒழிய வேண்டும். தீண்டாமை ஒழிய வேண்டும். ஒற்றுமை பெருகவேண்டும். பாரத மக்கள் அனைவரும் ஒரு குலத்தினர் என்ற கருத்து உறுதியடைந்து, அது அனுபவத்தில் உண்மையாதல் வேண்டும். ஜாதி வாழ்க்கையென்பது தேசீய வாழ்க்கையில் ஒன்றி மறைந்துவிடுதல் வேண்டும். இவ்வொன்றிய தேசீய வாழ்க்கையினால் தான் அடிமை வாழ்வு ஒழிந்து சுதந்திர வாழ்வு பெறுதல் கூடும். இச் சுதந்திர வாழ்வு பெறுதலே நமது கடமையாகும். இக் கடமையை நிறைவேற்றுதற் பொருட்டு எவ்வகையான தியாகத்தையும் நாம் புரியத் தயாராயிருத்தல் வேண்டும், இப்புதிய உபதேசத்தை, தமிழ் மக்களுக்கு அறிவுறுத்திய பெரும் பேராசிரியர் யார்? நமது தேசீய கவி சுப்பிரமணிய பாரதிதான். தேசீய உணர்ச்சி நிரம்பிய இவரது பாடல்களைத் 'தேசீய கீதை' அல்லது 'நவீன கீதை' என்பதில் சிறிதும் தவறில்லை. பகவத் கீதை ஸமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டது. ஆதலால் சிலரே அதனை அறியக்கூடும், தத்துவ சாஸ்திர மாதலால் அவருள்ளும் மிகச் சிலரே அதன் கொள்கைகளை உணர்ந்து அனுபவத்தில் கையாள முடியும். ஆனால் நமது தேசீய கீதை தமிழ்ச் செய்யுளில் அமைந்துள்ளது. அதன் தமிழ் வழக்கொழிந்த பழந் தமிழ் அல்ல. ஆதலால் தமிழ் மக்கள் அனைவராலும் அது எளிதிலுணர்ந்து மேற்கொள்ளத் தக்கதாயுள்ளது.

**வந்தே மாதரம் என்போம்—எங்கள்**
**மாநிலத் தாயை வணங்குதும் என்போம் (வந்தே)**

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம் இத் தேசத்தில் எய்தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே (வந்தே)

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்? (வந்தே)

புல்லடிமைத் தொழில் பேணிப்—பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவன்று தள்ளி (வந்தே)

புதுமைத் தமிழில், ஆத்ம சக்தி முழுதும் வெளிப் படத் தோன்றுமாறு பாடிய இச் செய்யுட்கள் 'நவீன கீதை' என்பதை நாம் தெளிவுறக் காணலாம். இந் நவீன கீதையின் உபதேசங்கள் நமக்கு வழிகாட்டியாய் என்றும் நிலவுக!

# 7

# தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி

ஒரு வீடு கட்டவேண்டுமானால் செங்கற்களை அடுக்கி, சுவர்களை முறைப்பட எழுப்பி, அதை இயற்றிவிடுகிறோம். இதுபோலவே, எழுத்துக்களை அடுக்கிச் சொற்களை முறைப்பட நிறுத்தி, வாக்கியங்கள் அமைக்கிறோம். வீட்டிற்குச் செங்கல் எப்படியோ, அப்படியே வாக்கியத்திற்கு எழுத்துக்கள். ஆனால், இரண்டிற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. சுவர்களை இடித்துச் செங்கற்களை முதல் முதலில் நாம் அமைத்துக் கொள்ள வில்லை. இதற்கு மாறாக, வாக்கியங்களைத் துண்டித்து, சொற்களைத் தனித் தனி கண்டு, பின் ஒலிகளை நிர்ணயித்து, பின் எழுத்துக்களை முதன் முதலில் அமைத்திருக்கிறோம். இதுவே வரலாற்று முறை. பகுப்பு நெறி (analysis), தொகுப்பு நெறி (synthesis) என்று நெறிகள் இரண்டு. பகுப்பு நெறியால் வந்தது எழுத்து; பின் தொகுப்பு நெறிக்குப் பயன்பட்டது. பகுப்பு நெறியே யின்றி, தொகுப்பு நெறிக்குப் பயன்படுவது செங்கல், 'எழுத்துக்களால் ஆகியது சொல், சொற்களால் ஆகியது வாக்கியம்' என முறையை மாற்றி நீண்டகாலமாக நாம் மனப்பயிற்சி செய்து வந்திருப்பதால், உண்மை வரலாற்றை உணர்ந்து கொள்வது கூட நமக்கு அருமையாய்ப் போய்விட்டது.

இதைப்போலவே வேறோர் உண்மையும் நம்மனத்தை விட்டு நழுவி விட்டது. ஒவ்வோர் எழுத்தும் ஓர் ஒலியின் பிரதிநிதியே என்பதுதான் இவ் உண்மை. இதனை மறந்து விட்டதனால், பிற மொழிகளைப் போலத் தமிழ் மொழியை

யும் முற்றும் ஆட்சி கொள்ளும் ஒலியிலக்கணத்தை உணராது, தமிழின் ஜீவிய சரிதத்தையும், அதன் வளர்ச்சி நெறியையும், அதன் ரூபாந்தரங்களையும், அதன் கிளை மொழிகள் தோன்றிய வரலாற்றையும் தெரிந்து கொள்ளாமல் இன்றும் இருக்கிறோம். ஒலியானது ஆளுக்கு ஆள், இனத்திற்கு இனம், பிரதேசத்திற்குப் பிரதேசம், காலத்திற்குக் காலம் மாறி விடுவது. மாறிக்கொண்டே செல்வது தான் அதன் வாழ்க்கை நெறி. நிரந்தரமாக ஓடிக் கொண்டே இருக்கும் ஜீவ நதிக்கு ஒப்பாக இதனைக் கூறலாம். எழுத்து அங்ஙனமன்று. இது ஒலியை நோக்க நிலையாயுள்ளது. இக்காரணத்தால் அக்ஷரம் (அழிவில்லாதது) என்று அதற்குப் பெயர் வந்தது. எளிதில் பரவிச் செல்லத் தகுவது. இதனால் ஓரளவில் கால தேச நியதியின்றிப் பரந்து வழங்கும் தன்மை பெற்றுள்ளது. கண்ணால் பார்க்கத் தகுவது. இதனால் பேசுவோனின்றியும் கருத்துக்களை உணர்த்தும் தன்மை உடையது. நமது அறிவு வளர்வதற்கு இவ் எழுத்தே காரணமாயுள்ளது. 'எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்' என்பது மிக ஆழ்ந்ததோர் உண்மை.

தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்கள் அதிலுள்ள ஒலிகள் அனைத்தையும் முற்ற உணர்த்துவன அல்ல. மக்களது கண்டத்தினின்றும் தோன்றக் கூடிய தனியொலிகள் கணக்கிட்டு முடியா. வீணை முதலிய வாத்தியங்களில் எதனாலும், அத்தனை ஒலிகளையும் உண்டு பண்ண இயலாது. இத் தனியொலிகளில் சிலவே மொழிக்கு உரியனவாகும். இவ் ஒலிகளின் எண் மொழிதோறும் வேறுபடும். அதிகமாகப் போனால், அறுபது தனியொலிகளுக்கு மேல் ஒரு மொழியிலும் இல்லை; பெரும்பாலும் இதற்கு மிகக்குறைவுபட்டே மொழியொலிகள் காணப்படுகின்றன. இம்மொழியொலிகளைக் கூடத் தனித்தனி உணர்த்துவதற்கு எழுத்

துக்கள் அமைதல் இல்லை. ஆகவே ஒவ்வொரு மொழியிலும், அதிலுள்ள எழுத்துக்களைக் காட்டிலும், அதன் ஒலிகள் மிகுதியாகவே காணப்படும். தமிழ் மொழியிலும் இவ்வாறே. உதாரணமாக, 'ஏன்' என்ற சொல்லை எடுத்துக் கொள்ளுவோம். இதன் முதலாவதாகிய ஏகார ஒலியை 'man' என்ற ஆங்கிலச் சொல்லிலுள்ள உயிரொலியைப் போன்று நம்மிற் சிலர் உச்சரிக்கிறார்கள். இவ் ஒலியை உணர்த்துதற்குத் தமிழில் எழுத்தே இல்லை. மகன் என்ற சொல்லை 'மஹன்' என்றே பலரும் சொல்லுகிறார்கள். இடையிலுள்ள மெய் யொலிக்குத் தமிழில் எழுத்தே இல்லை. இங்ஙனம் பல.

இக்குறைபாடுகளை நீக்குவதற்கு மூன்று உபாயங்கள் கையாளப்பட்டன. **முதலாவது**, நெருங்கிய தொடர்புடைய பிற ஒலிகளின் எழுத்துக்களைக் கொண்டு, இடத்தின் ஆற்றலால் சில ஒலிகள் உணர்த்தப்பட்டன. உதாரணமாக பங்கு, பஞ்சு, பண்டு, பந்து பண்புஎன்பனவற்றைக் காட்டலாம். இச் சொற்களிலுள்ள பகரத்தைக் காட்டிலும், இவற்றிலுள்ள கு, சு, டு, து, பு என்பன மெலிந்து உச்சரிக்கப்படுதல் காண்க. தமிழறிஞர் வகுத்துள்ள மெல்லினங்களை நோக்க, இந்தக் கு, சு, டு, து, பு, வல்லினமாதல் எளிதில் அறியலாம். இதனால் 'king' என்ற ஆங்கிலச் சொல்லிலும், காவ்யம் என்ற வட சொல்லிலும் காணப்படும் ககர ஒலியே முற்காலத்தில் இருந்ததெனல் தவறாகும். 'go' என்ற ஆங்கிலச் சொல்லிலும் 'குரு' என்ற வட சொல்லிலும் உள்ள மிருதுவான ககர ஒலியும் முற்காலத்தில் இருந்தது. இது போன்றே பிற வல்லின எழுத்துக்களுக்கும் மிருதுவான ஒலிகள் உண்டு. **இரண்டாவது**, வடமொழியிலுள்ள சில ஒலிகள், அவற்றிற்கு இனமான தமிழொலிகளாக மாற்றி உணர்த்தப்பட்டன. உதாரணமாக, வேஷம்-வேடம் என்பதைக் காண்க. **மூன்**

ருவதாக, வடமொழி ஒலிகள் அம்மொழிக்கு உரிய எழுத்துக்களையே கையாண்டு உணர்த்தப்பட்டன. உதாரணமாக, 'வேஷம்' என்ற வடசொல்லை 'வேஷம்' எனவே தமிழில் ஷகரமிட்டு எழுதுதல் காணலாம். இம்முறை தான் இப்பொழுது பெரு வழக்கமாக உள்ளது. எனினும் மணிப்பிரவாள நடை தோன்றிய 9-ம் நூற்றாண்டு முதலே, இம் முறையும் கொள்ளப்பட்டதெனக் கூறலாம்.

இச் குறைபாடுகளே யன்றி, சில ஒலிகளைக் குறித்த தற்கு இரண்டு குறியீடுகள் வழங்கவும் இடம் இருந்தது. உதாரணமாக, ஐகாரத்தை அகரமும் யகரமும் இட்டு எழுதலாம்.

ஒவ்வொரு மொழியைப் பேசிவரும் ஒவ்வோர் இனத்தவரும் தனிப்பட்ட இயல்புகளையுடைய ஒலிக்கணத்தையே வழங்குவர். ஆரிய மக்கள் ஒலிக் கணம் வேறு; தமிழ் மக்கள் ஒலிக் கணம் வேறு; ஜெர்மானியர் ஒலிக் கணம் வேறு; பிரெஞ்சுக்காரர் ஒலிக்கணம் வேறு; ஆங்கில மக்கள் ஒலிக்கணம் வேறு. இக்கணத்தின் இயல்பு சொற்களில் ஒலி தொடர்ந்து வரும் முறையில் நன்கு புலப்படும். ஹார்ஸ் (horse) என்ற ஆங்கிலச் சொல்லின் ஒலிக்கணம் தமிழில் வருதலில்லை. இங்ஙனமே 'குதிரை' என்று பொருள்படும் ப்வெர்ட் (pferd) என்ற ஜெர்மானியச் சொல்லின் ஒலிக்கணம் ஆங்கிலம், பிரெஞ்ச் முதலிய மொழிகளிற் கூட வருதலில்லை, ஒலிக்கணத்தின் இயல்பு இவ் உதாரணங்களால் தெளிவாய் விளங்கும். தமிழிலுள்ள ஒலிக்கணத்தின் இயல்பு நமது மூதாதையரின் பேச்சு வழக்கத்தைப் (speech habit) பொறுத்துள்ளது. இங்ஙனமே பிற மொழிகளின் ஒலிக்கணங்களின் இயல்பு, அவ்வம்மொழிக்கு உரியாரின் பேச்சு வழக்கங்களைப் பொறுத்ததாம். இவ்வழக்கங்களை நுட்பமாய் ஆராய்ந்து இன்ன இன்ன ஒலிகள் சொற்களைத் தொடங்குவன, இன்ன

ஒலிகள் இறுதியில் வருவன. இன்ன ஒலிக்குப்பின் இன்ன ஒலிதான் வரும் என்ற நியதியை அறிந்து இலக்கணம் வகுத்த பெருமை முற்காலத்து ஆசிரியர்களுள் தொல்காப்பியனுர் ஒருவருக்கே உரியது. மொழி மரபு முதலிய இயல்களில் இவ் விஷயம் கூறப்படுகிறது. இலக்கண உலகில் சக்கரவர்த்தி என்று கூறத்தகும் பாணினியாசிரியர் கூட இங்ஙனம் ஆராய்ந்தாரில்லை.

ஒலிகள் பிறக்கும் வரலாறு தனியான ஒரு சாஸ்திரமாய் இப்பொழுது அமைந்து விட்டது. தமிழொலிகளின் பிறப்பைத் தொல்காப்பியர் பிறப்பியலில் கூறியுள்ளார். உந்தியிலிருந்து*வாயு புறப்பட்டெழும் என்றும், அது தலை, மிடறு, நெஞ்சு என்ற மூன்று இடங்களில் நின்று பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்ற உறுப்புக்கள் ஒன்றோடொன்று பொருந்தி அமைதியுற ஒலிகள் பிறக்குமென்றும் பொதுப்படக் கூறினர். இவ்வாறு வடமொழி நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. தொல்காப்பியர் இங்கே வடமொழிநூல்களையே பின்பற்றுகிறுரென்பது இப் பிறப்பியலின் கடைசிச் சூத்திரத்தில் உள்ள 'அந்தணர் மறைத்தே' என்பதனுல் விளங்கும். இங்ஙனம் பின் பற்றினுலும், தலையினின்றும் பிறந்த எழுத்து 'மூர்த்தன்யம்' என்பதுபோன்று அவர் விவரித்துக் கூறுமை பெரிதும் பாராட்டத் தக்கது. ஏனெனில் தற் (காலத்து ஒலிநூல் ஆராய்ச்சியின்படி, தலையினின்று பிறக்கும் எழுத்தொலியொன்று இல்லை என்பது சித்தாந்தம். (Elements of phonetics P. 14. Dent 1910.)

---

* இவ்வாறு உந்தியிற் பிறக்கும் வளியை மூலமாக முதன் முதற் கூறியவர் பூர்வமீமாம்சைக்குப் பாஷ்யம் இயற்றிய சபரர் (Linguistic Speculations of the Hindus. P- 87) இவர் காலத்திற்குப் பின்னெல்லை கி. பி. 300 என்பர் ஆசிரியர் காணே (P. V. Kane).

இவ் ஒலிகளை எழுத்துக்களாக அமைத்துள்ள முறை இனி நோக்கத் தக்கது. எழுத்துக்களைத் தனியொலி—எழுத்து என்றும், அசை—எழுத்து என்றும் பிரிக்கலாம். தனியொலி—எழுத்துக்கு உதாரணமாக ஆங்கிலமொழியின் எழுத்துக்களை இங்கே கூறலாம். 'J' என்ற எழுத்து 'ஜ்' என்ற ஓர் ஒலியைக் குறிக்கிறது. இங்ஙனமே பிற எழுத்துக்களும். அசை-எழுத்து (syllabic script)க்கு உதாரணமாக வடமொழி எழுத்துக்களைக் கூறலாம். ஜ என்ற எழுத்து ஜ்+அ என்ற ஈரொலிகளால் ஆகிய ஓர் அசையைக் குறிக்கிறது. பிற எழுத்துக்களும் இவ்வாறே. மெய்யெழுத்தைக் குறிக்க வேண்டின் அசையாகிய உயிர்மெய்யெழுத்தில் ஓர் அடையாளமிட்டுக் குறிப்பது வழக்கம். இவ் அடையாளத்தை உயிர்மெய் எழுத்தோடு சேர்த்துப் பிற்பட எழுதுதலினாலே, அவ் உயிர்மெய் எழுத்தே முதலில் தோன்றியது என்பது புலனும். இவ் இருவகை எழுத்துக்களுள் தமிழெழுத்துக்கள் அசை-எழுத்து வகையைச் சார்ந்தன என்று எளிதில் உணரலாம். எழுத்து வகையினும், வடமொழிக்கும் தமிழுக்கும் உள்ள ஒற்றுமை இங்கே கவனிக்கத் தக்கது.

தமிழெழுத்துக்கள் தாமும் அவை தோன்றிய காலந்தொட்டு ஒரே வடிவில் வழங்கி வந்துள்ளன அல்ல. இக்காலத்திலே ஈகாரத்தை இருவகையாக (ஈ, ஈ) எழுதுதல் காணலாம். அச்சிலுங்கூட, இருவகையும் காணப்படுகிறது. ஏகாரத்தையும் ஓகாரத்தையும் நாம் எழுதும் முறைவேறு பின்பு எகர ஒகரங்களே நெடில்களாகக் கருதப்பட்டன. அவற்றின்மேல் புள்ளி யிட்டுக் குறில்களை உணர்த்திவந்தனர். குற்றியலுகரம் முதலிய சிலஒலிகளையும் புள்ளியிட்டே எழுதி வந்தனர். இவை யெல்லாம் இப்பொழுது மறைந்து விட்டன. கி. பி. 5-ம் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றைக் கால முறையில் வரி

சைப்படுத்திநோக்கினுல், தற்காலத்து வழங்கும் எழுத்துக் களின் மூதாதைகளைத் தெளிவாய் அறிந்து கொள்ளலாம், எழுத்துக்களின் வடிவங்களைக்கொண்டே இன்னகாலத்து இந்தக் கல்வெட்டுத் தோன்றியிருத்தல் வேண்டும் என்று, அறுதி யிடுதல் கூடும். நாம் வழங்கும் எழுத்துக்களி னின்று பெரிதும் வேறுபட்டுக் காணுவது 'வட்டெழுத்து' எனப்படுவதாம்.

ஆனுல் இந்த எழுத்துக்களெல்லாம் அசோகன் லிபியை அடிப்படையாகக் கொண்டு பிறந்தன என்பர் ஆராய்ச்சியாளர். வடமொழியில் கேள்வி மூலமாக நெடுங் காலம் நூல்கள் வழங்கின. நூல்கள் எழுதப் பெறத் தொடங்கிய காலம் கி. மு. 5-ம் நூற்ருண்டாகலாம் என்பர் மக்டானல் ஆசிரியர். தமிழில் சிறிது பிற்பட்ட காலத்தில் நூல்கள் எழுதப்பெறத் தொடங்கியிருக்க லாம். இப்பொழுதுள்ள தமிழிலக்கியங்களிற் பழமை யானவை கி. பி. 2-ம் நூற்ருண்டில் தோன்றியன, இவை களெல்லாம் எழுத்து வழக்கு தமிழ்நாட்டிற் புகுந்த பின் னர் இயற்றப்பட்டனவே. இவற்றிற் காணும் தமிழ், சுவை முற்றிக் கனிந்த தமிழ்ப்பாடல்களும், இனிமையும் அழகும் நிரம்பியுள்ளன. எனவே பலநூற்ருண்டுகளாகப் பயின்று வந்த கவித்துவ முயற்சினுலே இம்முதிர்வும் கனிவும் ஏற் பட்டிருத்தல் வேண்டும். இம்முயற்சி நான்கு, ஐந்து நூற் ருண்டுகளேனும் நிகழ்ந்திருக்கலாம், ஆகவே செய்யுட்கள் எழுத்தில் எழுதப்பெற்ற காலம் கி. மு. 3 அல்லது 4-ம் நூற்ருண்டாக இருக்கலாம்.

தமிழ்மொழியில் உயிர் 12-ம், மெய் 18-ம், ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம் என்ற சார்பெழுத்துக்கள் மூன்றும் ஆக 33 எழுத்துக்கள் தொல்காப்பியர் காலத்

தில் இருந்தன. இவற்றுள் குற்றியலிகரமும் குற்றியலு கரமும் தற்காலத்து எழுத்து வழக்கில் இல்லை. ஆய்தமும் பண்டிதர் வழக்கில் மட்டும் காணப்படுகிறது; விரைவில் இது மறைந்து வருகிறதென்றே சொல்லலாம். ஆகவே முப்பது எழுத்துக்கள் தாம் உள்ளன. ஆனால் உயிர்மெய் 216 எழுத்துக்கள் உள்ளன. இவையே நமது அக்ஷர மாலை யைக்கடினமாக்குகின்றன. அச்சுக்கோப்பதற்கும், 'டைப்' அடிப்பதற்கும் வடிவங்கள் எளியனவாயும், நேரியனவா யும், எழுத்துக்கள் சுருங்கியனவாயும் இருத்தல் வேண்டும். இதற்கு ஏற்ற முறைகளைக் கையாள வேண்டியது அவசி யம். ஒரு சிலர் முயற்சி செய்து வருகிறார்கள். ஓர் உயிருக்கு ஓர் அடையாளமே இருத்தல்வேண்டும். இப்பொழுது உகரத்திற்கு மூன்று அடையாளங்கள் உள்ளன. உதாரண மாக ,க, ச, ண என்றவற்றோடு உகரம் சேர்ந்த கு, சு, ணு என்ற எழுத்துக்களைக் காண்க. இக் குறைபாடுகளும் ஒழி தல் வேண்டும்.

தமிழ் அக்ஷர மாலையில் தமிழுக்கே சிறப்பாக உள் ளவை என்று கருதப்படும் சில எழுத்துக்கள் இருக்கின் றன. இவை ற, ன, ழ, எ, ஒ என்பனவாம். வடமொழியி லுள்ள அக்ஷரத் தொகுதியை எடுத்துக்கொண்டு, அவற் றில் காணப் பெருமையால் இவற்றைச் சிறப்பெழுத்து என்பர். எ, ஒ என்ற இரண்டு உயிர்களும் பிராகிருத மொழிகளில் உள்ளன. குறிலின்றி நெடில் மாத்திரம் வட மொழியில் காணப்படுவது ஒரு வியப்பே. பிராகிருதத் தோடொப்ப, தமிழில் எ, ஒ காணப்படுதலால் இத்தமிழ் மொழி இயற்கையோடு ஒட்டியது என்பது புலனாம். இவற் றைப் புள்ளியிட்டு எழுதுதல் முற்காலவழக்கமென முன்பு கூறப்பட்டது. இது வடமொழி அக்ஷரங்களை யொட் டித் தமிழில் எ, ஒ என்ற எழுத்துக்களை அமைத்துப்

பின்னர் அவற்றின் குறில்களை உணர்த்துதற்குப் புள்ளி யிட்டனர் என்பதைத் தெளிவாய்ப் புலப்படுத்துகிறது. சிறப்பெழுத்தாகிய ழகரம் வடமொழியில் ஷகர, டகரங் களுக்குப் பதிலாக வருவது கூர்ந்து கவனிக்கத்தக்கது. சீர்ஷக என்பது சிகழிகை எனவும் கலுஷி என்பது கலுழி எனவும், விஷமம் என்பது விழுமம் எனவும் சேஷம் என்பது சேளம், சேடம் எனவும், மிருகசீர்ஷம் மார்கழி எனவும் வருதல் இதனை விளக்கும். மலையாளத்திலும் இத் திரிபு காணப்படுகிறது. அனுஷம் அனிழம் என வும், கஷாயம் கழாயம் எனவும் அம்மொழியில் வழங்குவர். பீடா என்பது பீழை; அமிர்தம் என்பது அமிழ்தம். இங்ஙனம் திரிதல் காரணமாக 'ழகரம்' ஒரு சொல்லில் வருமாயின், அது வட சொல் அல்லது பிற சொல் என் பது நிச்சயம் என்று ஒரு சாரார் கூறுவர். ஆனால் ஒலி நூலின் நியமங்களை அனுசரித்து இக் கருத்து இன்னும் துணியப்படவில்லை. ழகரத்தையும் ளகரத்தையும் பேத மின்றி உச்சரிப்பது வழக்கம். புதுக் கன்னடத்தில் ழகரம் மறைந்துவிட்டது. தமிழிலும் பிற்காலத்தில் இது மறைந்து விடலாம். னகாரமாகிய சிறப்பெழுத்து 'றன் னகரம்' என்று சாதாரணமாகக் கூறப்படும். ஒலியில் பெரிதும் வேற்றுமை இல்லாத 'தந்நகரம்' ஒன்றும் தமி ழில் உண்டு. இரண்டிற்கும் உரிய வேற்றுமையை நாம் கவனிப்பதில்லை! ஆனால் மலையாள மக்கள் போற்றி வரு கிறார்கள். எழுத்திலுங்கூட நாம் இவ் வேற்றுமையைப் பல இடங்களில் கொள்வதில்லை. அந்நம் என்ற வட சொல்லை 'அன்னம்' என்று றன்னகரம் இட்டு எழுது கிறோம். இவ்வாறே 'அநந்த' என்ற வடசொல்லை அனந் தன் என்று எழுதுவது வழக்கம். என்றாலும் சந்தி முதலியவற்றை நோக்கும்போது இருவகை எழுத்தும் அவசியம் என்றே தோன்றுகிறது. பந்து, மந்தி என்

பதை றன்னகரமிட்டு எழுதினுல் வேடிக்கையாக இருக்கும் ஒலியிலும், றன்னகரமும் தகரமும் இழைந்து செல்வ தில்லை. தந்நகரமிட்ட 'முந்நால்' என்பதற்கும், றன்னகர மிட்ட 'முன்னுல்' என்பதற்கும் பொருளில் வேறுபாடு உண்டு. முன்னது மூன்றினுல் பெருக்கிய நான்கு என்றும், பின்னது முற்பட்டு என்றும் பொருள்படும். சந்தியைச் சீர்திருத்தம் செய்தாலன்றி, இதுபோன்ற மயக்கங்களை நீக்குதல் முடியாது.

கடைசியாக வல்லின றகரமாகிய சிறப்பெழுத்தை நோக்குவோம். இடையின ரகர மொன்றும் தமிழில் உண்டு. இரண்டிற்கும் ஒலியினும் சிறிது வேற்றுமை உண்டு. வல்லினத்தை அழுத்தி உச்சரிக்க வேண்டும்; அவ்வளவே. முற்காலத்தில் வடமொழி ரகரத்தை வல் லின றகரமாகத் தமிழில் எழுதி வந்தனர். பர்வதம் என்பதைப் 'பறுவதம்' என்றும், கர்வம் என்பதைக் கறுவம் என்றும் எழுதினர். இவ்வழக்கம் இப்போது நின்று வருகிறது. இவ் வல்லின றகரமும் சந்தி முதலிய வற்றின் பொருட்டு அவசியமாகலாம். 'கர்ப்பம்' என்ப தற்கும் 'கற்பம்' என்பதற்கும் வேறுபாடு உண்டு. இங் ஙனமே செரு என்பதற்கும் செறு என்பதற்கும், மரு என்பதற்கும் மறு என்பதற்கும், பரி என்பதற்கும் பறி என்பதற்கும்.

எழுத்துச் சுருக்கம் பேணி முற்போக்கில் தமிழ்மக்கள் ஈடுபட்டாலன்றி, மேற்காட்டிய குறைபாடுகளை நீக்குதல் சிறிதும் ஏலாது. ஆங்கில எழுத்துக்களைக் (ரோமன் லிபி) கைக்கொண்டால், பல குறைபாடுகளும் நீங்கி விடலாம். ஆனுல் புதுக் குறைபாடுகள் ஏற்படலாம்; நமது மனப் பான்மையும் இடந்தரமாட்டாது.

அக்ஷரமாலை (Alphabet) களிற் பெரும்பாலன முன்னை யோர் மரபு என்ற ஒன்றைத் தவிர, வேறொரு காரணமு

மின்றி, ஏதாவதொரு முறையில் அமைந்துள்ளன. உதாரணமாக ஆங்கில நெடுங்கணக்கை எடுத்துக் கொள்வோம். இதில் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் ஒரு நெறியுமின்றி விரவிக் கிடக்கின்றன. மெய்யெழுத்துக்களுள் ஓரினத்தையே சார்ந்தவை பல இடங்களில் சிதறிக் கிடக்கின்றன, C ஓர் இடத்திலும், G வேருேர் இடத்திலும் உள்ளன. B ஓரிடத்திலும், P பிறிதோர் இடத்திலும் வைக்கப்பட்டுள்ளன. D ஓர் இடத்திலும், T மற்ருேர் இடத்திலும் அமைந்துள்ளன. தமிழ் நெடுங்கணக்கு அங்ஙனமன்று. ஒரு நெறிப்பட்டு அமைந்துள்ளது. ஆனல் அது வடமொழி அக்ஷர மாலையை ஒத்திருத்தல் காணலாம். வடமொழி அக்ஷர மாலையை அடிப்படையாகக் கொண்டே தமிழ் நெடுங் கணக்கு முறைப்படுத்தப்பட்டது என்பது மறுக்க முடியாததாயுள்ள ஓர் உண்மையாம்.

சில அக்ஷர மாலைகளில் ஒவ்வோர் எழுத்திற்கும் தனித் தனியான பெயர் உண்டு. கிரேக்க மொழியிலுள்ள alpha, beta, gamma முதலியவற்ருல் இதை அறியலாம். ஆங்கிலத்தின் அக்ஷர மாலையே ப்ரெஞ்சு மொழிக்கும் உரியது. ஆனல் பெயர்கள் வேறு. b என்பது bay என்றும், h என்பது ahsh என்றும், y என்பது ecgrek என்றும் இம்மொழியில் வழங்குவர். உருது மொழியில் அலிப் முதலியவாகப் பெயர்கள் சொல்லுவர். தமிழில் ஓர் எழுத்தைக் குறிக்க வேண்டும்பொழுது, அவ் எழுத்தைத் தனித்தே கூறலாம். 'அ, இ, உ அம் மூன்றுஞ் சுட்டு' என்பது உதாரணம். 'எகர ஒகரத்து இயற்கையும் அற்றே' என்பதில் கரம் என்ற ஒரு சாரியை சேர்க்கப் படுகிறது. காரம், கான் என்ற வேறிரண்டு எழுத்துச்

சாரியைகளும் உண்டு. எழுத்திற்குப் பெயர்* என்பது கிடையாது. ஆனால் எல்லா மொழிகளிலும் காணப்படுவதுபோல் சில எழுத்துக்களைத் தொகுத்து இவை வல்லினம், இவை மெல்லினம் என்று பெயரிடுதல் தமிழிலும் உள்ளதே.

ஆங்கிலம், ப்ரெஞ்சு முதலிய மேல்நாட்டு மொழிகளிலுள்ள எழுத்தொலிகளுக்கு மாத்திரை கற்பிக்கும் வழக்குக் கிடையாது. தமிழ் மொழியிலே அங்ஙனமன்று. குறில் எழுத்துக்கு ஒரு மாத்திரை என்றும், நெடிலுக்கு இரண்டு மாத்திரைகளென்றும், மெய்க்கு அரை மாத்திரை என்றும், இங்ஙனமாகக் கணக்கிட்டு உரைப்பர். ஆனால் இக்கணக்கு வடமொழியினின்றும் கொள்ளப்பட்டது. ஆதலால் இம்மாத்திரை தமிழ் மொழிக்கு வேண்டாததாம். செய்யுள் இயற்றுவதற்கு இது பயன்படலாம். ஒலியியல் நூல்கள் எழுதப் பெறும்போதும் இது பயன்படுவதாகலாம்.

இங்குக் கூறிய எழுத்து முதலியன சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இலக்கண சூத்திரங்களில் உள்ளன. தற்காலத்துத் தமிழை அறிதற்கு இவை போதியவை அல்ல. நம்மில் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவது தற்காலத்து வழங்கும் தமிழ். அதனையே முற்பட நாம் கற்றல் வேண்டும். அதற்குரிய எழுத்திலக்கணம் முதலியன இயற்றுவதற்கு நாம் முயலுதல் வேண்டும். அதனை விளக்கும் எழுத்து, சொல் முதலிய இலக்கணப் பகுதிகளைக் கற்பிக்கும் முறையும் முற்றும் மாற வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்களும் பொதுமக்களும் சுவையோடு தமிழைக்கற்பார்கள்.

---

* தற்காலத்தார் 'அ ன ஆவென்ன' என்று அக்ஷர மாலையைச் சொல்லி வருகிறார்கள். ஆய்த எழுத்தை 'அஃகேனம்' என அவிநயர் என்ற ஆசிரியர் வழங்கியுள்ளார் (யாப்பருங்கல விருத்தி பக். 28): தற்காலத்தில் 'அஃகென்ன' என்பர்.

# 8

# தமிழிற் சொல் வளர்ச்சி

நாம் சுதந்திரம் அடைந்ததோடு, நமது தாய்மொழியாகிய தமிழைத் தமிழ் மக்கள் அனைவரும் கட்டாயமாகக் கற்றுத் தீரவேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டு விட்டது. சில ஆண்டுகளுக்கு முன்வரை, தமிழ் மக்களுள் ஒருசிலர்தான் தமிழைக் கற்று வந்தார்கள். கல்வி கற்பதற்கு வேண்டும் வசதி வாய்த்தவர்களில் பெரும்பாலாரும், தமிழ் வாசக புஸ்தகங்களை வாசிக்கும் அளவு கற்று, தமது கல்விக் காலம் முழுவதையும் ஆங்கிலத்தின் பொருட்டே செலவு செய்து வந்தார்கள். சில தமிழர்கள் தமிழ் எழுத்துக் களையே அறியாதவர்களாயும் இருந்தார்கள். ஆங்கிலங் கற்ற ஒருசில தமிழ் மக்கள் 'தமிழ்' என்று கேட்டவுட னேயே வெறுப்புக் கொண்டு தமிழ் நூல்களைத் தொடுவது கூடத் தமது கௌரவத்திற்கு இழிவு என்று கருதி வந் தார்கள். ஏகதேசமாய்த் தமிழ்ப்புஸ்தகங்களை வாசிக்கவோ அல்லது தமிழில் பேசவோ நேர்ந்து விட்டால், தமிழ்ச் சொற்களை ஆங்கில தோரணையில் உச்சரித்துத் தம்மை ஆங்கிலேயன் என்று பிறர் கருதுமாறு நடித்துவந்தனர். சில தமிழ்ப் பேராசிரியர்களும் தமிழை 'டாமில்' என்று உச்சரிப்பதைப் பலரும் கேட்டிருக்கலாம்.

ஆனல், இம்மனப்பான்மை இப்பொழுது அடியோடு மாறிவிட்டது. இதற்கு முக்கிய காரணங்கள் தேசாபி மானமும் சுதந்திர வுணர்ச்சியுமே யாகும். நம் நாட்டில் இவ் வுணர்ச்சிபற்றி யெழுந்த கிளர்ச்சி அதிவேகத்தில் எங்கும் பரந்து யாவராலும் தடுக்க முடியாதபடி முற்றி

விட்டது. அன்றியும், நமது கல்வித்துறையில் சீர்திருத்த முறைகளைக் கையாளவேண்டும் என்ற அபிவிருத்தி நோக்கமும் மேற்கூறிய கிளர்ச்சியோடு கலந்து விட்டது. பிற நாடுகளில் கையாண்டு வரும் முறைகளை நம்மவர்கள் கற்று வரலாயினர். மேலை நாடுகளிலே அந்த அந்த நாட்டுக்குரிய மொழிகளிலே கல்வி பயிற்றி வருவதைக் கண்டார்கள். நமது நாட்டில் தாய் மொழியைக் கைவிட்டு, அந்நிய மொழியாகிய ஆங்கில மொழியிற் கல்வி போதித்துவரும் மடமையும் நன்ருகப் புலப்பட்டது. இவ்வகையிற் சீர் திருத்தம் அவசியம் என்பதைக் கல்வித் துறையிலுள்ள அறிஞர்களும், பொதுமக்களும் தெளிவாய் உணர்ந்தார்கள். தாய்மொழி மூலமாகத்தான் எல்லா வகைக் கல்வியையும் போதிக்கவேண்டும் என்ற மனவுறுதி நம்மவர்களிடையே பிறந்தது. கல்வித் துறையில் நமது தமிழ்மொழி தனக்கு இயல்பாகவுரிய நிலையை அடையும் சமயம் வந்தது. தமிழ் அதன் அடிமை வாழ்வு நீங்கிச் சுதந்திரமாகிய தலைமை வாழ்வை அடைவதாயிற்று.

ஆனல், சுதந்திர வாழ்வு என்பது வறுமையில் துன்புறும் வாழ்வு அல்ல. தற்கால அறிவுத் துறைகள் எல்லாவற்றிலும் நூல்கள் நிரம்பி நமது மொழி சிறந்தோங்க வேண்டும். நமது மொழிச் செல்வம் பெருகுதல் வேண்டும்; அதன் செல்வாக்கும் மிகுதல் வேண்டும். அப்பொழுது தான் நம் நாட்டில் அறிவு வளர்ந்தோங்குவதாகும். எல்லாவற்றிலும் முற்பட்டு, விஞ்ஞான உணர்ச்சி நமக்கு வேண்டியதாயுள்ளது. இதற்கு ஆங்கில மொழியைக் கற்பது இன்றியமையாதது. ஆங்கில மொழியைத் துணை மொழியாக நமது கலாசாலைகளில் போற்றுவதும் அவசியமே. மேனுட்டு விஞ்ஞான சாஸ்திர பதங்கள் பலவற்றிற்குத் தக்க தமிழ்ச் சொற்கள் காணுதல் அருமை. வேண்டும்

இடங்களில் ஆங்கிலச் சொற்களை எடுத்துக் கொள்ளுதல் பொருத்தமேயாம். இவ்வாறு செய்வது நமக்கு நன்மை தரும் என்றே நான் கருதுகிறேன். ஆனால் வேறு சிலர் இவ்வாறு கருதாது ஆங்கிலமே தலைமை பூணவேண்டு மென்று விவாதிக்கிறார்கள். தமிழின் தலைமைக்கு இவர்கள் இடையூறாக நிற்பவர்கள். இவர்கள் கருத்துக்குத் தமிழ் மக்களாகிய நாம் ஒருபோதும் இணங்குதல் கூடாது.

வேறு சிலர் ஆங்கிலப் வடமொழி முதலிய எந்த அந்நிய மொழிச் சொல்லும் தமிழில் கலத்தல் கூடாது என்பர். இவர்கள் தாம் தூயதமிழ் வாதிகள். இவர்கள் நமது தமிழுன்னைக்கு உணவளியாது கைகால்களைக் கட்டிச் சிறைச் சாலையிலிட்டு வதைக்க முயலுகின்றனர். சாதி வெறுப்பை யும் அரசியல் வெறுப்பையும் கருவிகளாகக் கொண்டு தமது பகைமையைச் சாதித்து, மொழி வளர்ச்சியைத் தடுத்து, நம் தாய் மொழியைத் துன்புறுத்துகின்றனர். உலகில் ஒரு மொழியேனும் தூய மொழியா யிருப்ப துண்டோ? ஒவ்வொரு மொழியிலும் எத்தனை எத்தனையோ வேற்று மொழிகளிலிருந்து சொற்கள் கலந்துள் ளன. அவ்வக் காலத்திலுள்ள அவசியத்திற் கேற்ப, பிற மொழிச் சொற்கள் ஒவ்வொரு மொழியிலும் கலப்பது இயல்பே. இவ்வாறு கலப்பதற்கு இடங் கொடாமற் போனால், அறிவு வளர்ச்சிக்கே தடை ஏற்பட்டு விடும். இன்னும் ஒன்று; பிறமொழிச் சொற்களின் கலவையை எவராலும் தடுக்கவும் முடியாது.

தமிழ் மொழியின் சரிதத்தை எடுத்துக் கொண்டால், பிறமொழிக் கலப்பு பண்டைக் காலந்தொட்டு இன்று வரை நிகழ்ந்து வந்துள்ளது என்பது நன்றாகப் புலப் படும்.

ஆசிரியர் தொல்காப்பியர்,

> **இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று**
> **அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே. (சொல்-397)**

என்றனர். அவர் காலத்துக்கு முன்புதானே இந் நால் வகைச் சொற்களும் செய்யுளில் கலந்து விட்டமையால் இவ்வாறு சூத்திரம் செய்து இவை எக்காலத்தும் செய் யுட்கு உரியன என்றும் கருத்துக்கொண்டனர். அவரது பேரிலணக்கத்திலே பல வடசொற்களையும் எடுத்தாண்டனர். உதாரணமாக, அந்தம், மாத்திரை, காயம், கருமம், ஏது, அம்போதரங்கம், குஞ்சரம், வைசியன், வாணிகம் என்பனவற்றைப் பிரயோக விவேக நூலார் காட்டினர். இவற்றோடு காலம், உலகம், பூதம் (சொல்.58), மண்டிலம் (பொருள் 421), சூத்திரம் (640), படலம் (474), பிண்டம் 475 முதலியவும் காட்டலாம். மேலும் சுண்ணம், வண்ணம், படிமை, பண்ணத்தி முதலிய பிராகிருதச் சொற்களையும் அவர் வழங்கியுள்ளார். இங்ஙனமே சங்க நூல்களிலும் வடசொற்களும் பிராகிருதச் சொற்களும் தமிழோடு கலந் துள்ளன. ஆனல், கலித்தொகையிலும் பரிபாடலிலும் வடசொற்கள் மிகுதியாகவுள்ளன. பிற சங்க நூல்களில் அத்துணையளவாகக் காணப்படவில்லை. இவற்றின் பின் தோன்றிய கீழ்க்கணக்கு நூல்களிலும் தேவாரம் முதலிய அருளிச் செயல்களிலும் வடசொற்கள் பரிபாடலின் அள விலேனும் வழங்கியுள்ளன.

---

*** தெய்வம் (9), வெதிரம் (62), வஞ்சம் (150) என நற்றிணையிலும், காமம் (2), திலகம் (48), மணி (239), யாமம் (302) எனக் குறுந்தொகையிலும், இந்திரன் (62), முண்டகம் (108), நகர் (247), குரவம் (357) என ஐங்குறு நூற்றிலும், மறலம் (11), ஆனியம் (69), உவமம் (73), பருதி (74), சந்தம் (87) எனப் பதிற்றுப் பத்திலும், புங்கவம், ஆதிரை, நாதர் என 8-ம் பரிபாடலிலும், கடிகை, வல்லிகை, சாமரை, மத்திகை, உத்தரியம், கண்டிகை, தமனிய-மேகலை, நூபுரம், சுதை, கிண்கிணி, வியமம், வாதம் என 90-ம் கலித் தொகைச் செய்யுளிலும், நிதி (66), அரணம் (158,) அமர்**

திருக்குறளிற்கூட நூற்றுக்கு மேற்பட்ட சொற்கள் வடமொழிக்கு உரியன. இவைகளுக்குப் பின்பு பிறந்த சிலப்பதிகாரம் முதலிய காவியங்களில் வட சொற் கலப்பு

---

(214), பலி (282), மதி (400), (நேமி 400), கோவலர் (299), சாத்து (167), முரசம் (251), தூது (251), அரவம் (188), மதம் (295), அரமியம் (124) என அகத்திலும், யூபம் (15), வேதம் (2), கண்டம் (10), நாகம் (367) எனப் புறத்திலும், வாரணம் (முருகு. 219), தாயம் (பொருந. 132)கோவம் (சிறுபாண். 71), சாபம் (பெரும்பாண். 121), மிலேச்சர் (முல்லை. 66), பதாகை (மதுரை. 373). தசம், உரோகிணி (நெடுநல். 115, 163), குடசம், வகுளம், தகரம், மாயம் (குறிஞ்சி. 67, 70, 108, 246). அமரர், ஆவுதி (பட்டினப். 200), அமயம் (மலைபடு. 375) எனப் பத்துப் பாட்டிலும் வருகின்றன.

அகரம் (1), அங்கணம் (720), அச்சு (475), அதி (636), அந்தம் (563), அமர் (814), அமரர் (121), அமிழ்தம் (11), அமைச்சு (381), அரங்கு (401), அரசர் (381), அரண் (331), அவம் (266), அவலம் (1072), அவி (259), அவை (332), ஆகுலம் (34),ஆசாரம் (1075), ஆசை (266), ஆணி (667), ஆதி (1), ஆயிரம் (259), இசை (231), இந்திரன் (25), இமை (775), இரா (1168), இலக்கம் (627), உரு (261), உருவு (667), உலகம் (11), உலகு (1), உல்கு (756), உவமை (7), உறு (498), ஏமம் (306), ஏர் (14), கழிசு (1037), கணம் (29), கணிச்சி (1251), கதம் (130), கந்து (507), கலுழும் (1173), கவரி (969), கவுள் (678), கழகம் (935), களம் (1224), களன் (730), கனம் (1081), காமம் (360), காமன் (1197) காரணம் (270), காரிகை (571), காலம் (102), கானம் (772), குடங்கர் (890), குடி (171), குடும்பம் (1029), குணம் (29), குலம் (956, குவளை (1114), கூர் (599), கொக்கு (490), கோடி (337), கோட்டம் (119), கோட்டி (401), சமன் (118), சலம் (660), சிவிகை (37), சுதை (714), சூதர் (932), சூது (931), தகர் (486). தவம் (16), தாமரை (1103), திண்மை (54), திரு (168), துகில் (1087), துலை (986), தூது (681), தெய்வம் (43), தேயம் (753), தேவர் (1073), தொடி (911), தோட்டி (24), தோணி (1068), தோள் (149) நத்தம் (235), நயம் (860), நாகம் (763), நாகரிகம் (580), நாமம், (360), நாவாய் (496), நிச்சம் (532), நீர் (3), நுதுப்பேம் (1148), பக்கம் (620), பகுதி (111), படர்ம் (1087) ,படிவத்தர் (586), பண்டம் (475), பதம் (548), பயன் (2), பரத்தன் (1311), பளிங்கு (706), பள்ளி, (840), பாகம் (1092), பாக்கியம் (1141), பாவம் (146), பீழிக்கும் (843), பீழை (658), புருவம் (1086), பூசனை (18), பூதங்கள் (271), பேடி (614), பேய் (565),

சங்கநூல்கள், திருக்குறள் முதலியவற்றிற் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிக மென்றே சொல்லவேண்டும். குங்குமம், அலத்தகம் என்பவற்றைக் காவியச் சொற்க ளென்றே கூறலாம்.

பின்னர், சமயசாஸ்திரங்களும் இவற்றின் வியாக்கியானங்களும் தோன்றின. இவற்றில் வடசொற்கள் எல்லைகடந்து வழங்கப்பட்டன. வடமொழியிலக்கணமும் தமிழிலக்கணமும் ஒன்றே யென்னும் கொள்கைகூடப் பிறந்துவிட்டது. வீரசோழியம் இதற்குச் சான்று. வடமொழிச் சொற்களை வடமொழியுருவோடும் உச்சரிப்போடும் மிகுதியாய்க் கலந்த மணிப்பிரவாள நடையும் புகுந்தது. ஆனல் இந்நடையை விரும்பாது, தமிழை வடமொழி விழுங்கி விடாதபடி பாதுகாத்து, தமிழின் சுதந்திரத்தைத் தமிழ்மக்கள் பேணினார்கள். எனினும், வடமொழிக்கலப்பு காலஞ் செல்லச் செல்ல மிகுந்துகொண்டே வந்தது. மொழி—நூலின் உணர்ச்சி தோன்ருத காலத்து வாழ்ந்த சுவாமிநாத தேசிகர் தமிழுக்குச் சிறப்பாகவுரிய எ, ஒ, ழ, ற, ன என்ற எழுத்துக்களால் ஒரு மொழி இருக்க முடியுமா என்று கேள்வி கேட்கவும் துணிந்தனர்.

> **ஐந்தெழுத் தால் ஒரு பாடையும் உண்டென்று**
> **அறையவும் நாணுவர் அறிவுடை யோரே**

என்று கூறி நமக்கு வியப்பையும் வருத்தத்தையும் உண்டு பண்ணுகிறார். பிரயோகவிவேகம் இயற்றிய சுப்பிரமணிய

---

**மங்கலம் (60), மடமை (89), மதலை (449), மதி (636), மந்திரி (639), மயிர் (964), மயில் (1081), மனம் 7), மணி (1273), மா (68), மாடு (400), மானம் (384), (மீன் (931), முகம் (90), யாமம் (1136), வஞ்சம் (271), வண்ணம் (561), வளை (1157) வள்ளி (1304) வித்தகர் (235), வேலை (1221).**

தீட்சிதர். 'வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் பேதம் கோடி கூறிட்டு ஒருகூறுண்டோ?' என வினவுவாராயினர். இலக்கண ஆசிரியர்கள் இவ்வாருக. யாழ்ப்பாண அகராதி, மதுரைத் தமிழ்ச்சங்க அகராதி முதலியன இயற்றியவர்கள் வடமொழி அகராதிச் சொற்களெல்லாம் தமிழிற்கும் உரியன என்ற கருத்துக்கொண்டு நூல்வழக்கு உலகவழக்கு முதலியவற்றை நோக்காது வடமொழிச்சொற்களை வரம்பின்றித் தம் அகராதிகளிற் புகுத்தி விட்டனர். இவையெல்லாம் தமிழ்மொழியுலகில் வடமொழி கொடுங்கோலாட்சி புரிந்துவந்தது என்பதற்குத் தக்க சான்ருகும். இக்கொடுங்கோலாட்சியை எதிர்க்க, தூய தமிழ்க் கிளர்ச்சி தோன்றியதாயின் அது நியாயமே. ஆனல், இது அன்று அதன் நோக்கம்; வடமொழி முதலிய எம்மொழிச் சொல்லும் தமிழில் வருதல் கூடாது என எதிர்த்தற்கே தலைப்பட்டது. வடசொற்களை எடுத்துக் கொள்வோம். அவற்றை நீக்கி விட்டால், தனித் தமிழ்ச் சொற்கள் நமது தினசரி வாழ்க்கைக்குக்கூடப் போதியன அல்ல; நீக்குதலும் இயலாத காரியம். தூய தமிழ்க் கிளர்ச்சியில் அபிமானமுள்ள ஒரு நண்பர் அதுபற்றியெழுந்த ஒரு விவாதத்தில், 'இரண்டாயிரம் ஆண்டுகளாக இத் தமிழ்—வடமொழிப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இன்று அப்போராட்டத்திற்கு முடிவு காணப் போகிருேம். வடமொழிச் சொற்களை நிர்த்தாட்சண்யமாய் ஒழித்து விட்டுத்தான் மறுவேலை' என்றனர். அவர் கூறுவதிலிருந்தே எவ்வளவு தூரம் வட சொற்களை ஒழிக்க முடியும் என்பது விளங்குகிறதல்லவா? நமது சமுதாய வாழ்க்கையோடும், கல்வியோடும், சமயங்களோடும், சாஸ்திர உணர்ச்சியோடும், நாகரிகத்தோடும் வடமொழிச்சொற்கள் பின்னிக் கலந்துவிட்டன. நம்முடைய வாழ்க்கையோடு இச்சொற்கள் ஒன்றித்து விட்டன. ஆதலால்,

இவற்றை நீக்குதல் யாவராலும் இயலக்கூடிய காரியம் அன்று. மேலும் இவற்றை நீக்கும் முயற்சி பெருங் கேட்டையும் விளைக்கும். நமது கல்வி வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், நமது பொது அபிவிருத்திக்கும் சொல்வளம் நிரம்ப வேண்டும். இலக்கிய வளர்ச்சிக்கு இச் சொல்வளம் பெரிதும் வேண்டப்படும். 'சிறந்த எழுத் தாளன் எவனும் சொற்களின் உற்பத்தி நோக்கிச் சொற் களைத் தெரிந்தெடுத்து ஆளமாட்டான்' என்றனர் ஹெர் பட் ரீட் (Herbet Read: English Prose Style. pp. 5-6). தூய தனித் தமிழ்ச் சொல்லடியாக இச் சொல்வளத்தை நாம் பெருக்கிக்கொள்ளுதல் முடியாது. எனவே, வட சொற்களை நாம் கையாளாமற் போனால், அறிவு வளர்ச்சி யின்றி, மக்களினத்தாரிற் கடைப்பட்டவர்களாய், கிணற் றுத் தவளையை ஒத்தவர்களாய், நம்மினத்தவர் ஒதுங்கி விடுவார்கள் என்பதை நாம் நன்றாக மனத்திற் பதியவைத் தல் வேண்டும். எனவே. தூய தமிழ்க் கிளர்ச்சியென்பது அறிவின் பகை ; கல்வியின் பகை ; ஒற்றுமையின் பகை; நாகரிகத்தின் பகை ; தேசிய முன்னேற்றத்தின் பகை. இதனை அறிவுடையோர் ஆதரித்தல் சிறிதும் தகாது; அன்றியும், சங்கப் புலவர்கள், வள்ளுவர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், இளங்கோவடிகள், கூலவாணிகன் சாத்த னார், கம்பன், சேக்கிழார் முதலியோர்கள் வழங்கிய சொற் கருவூலங்கள் நமக்குப் பிதிரார்ஜிதமல்லவா? அவர்களெல் லாரும் தமிழுக்குக் கேடுவிளைவித்தவர்கள் என்று நாம் கருதுதல் தகுதியாகுமா? நமது தமிழில் வந்து கலந்து, நூலாட்சியிலும் பேச்சு வழக்கிலும் புகுந்த வடசொற்க ளெல்லாம் தமிழ்தானே? தமிழ்மகன் ஒவ்வொருவனும் இதனை ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்

முற்காலத்தில் வடமொழி எவ்வாறு நமது மொழிக்கு உதவி வந்ததோ, அதுவே போல, ஆங்கிலமொழி தற்

காலத்தில் உதவிவருகிறது. ஆதலால் இன்றியமையாது வேண்டும் ஆங்கிலமொழிச் சொற்களைத் தமிழிற் கொள்ளத்தான் வேண்டும். அவற்றிற்குத் தடையுத்தரவு விதித்தல் கூடாது.

இன்னும் சிலர் 'ஆங்கிலமொழி நமது தேசத்து மொழியன்று. அந்த அந்நிய மொழியினின்றும் சொற்களை கொள்ளுதல் அடிமை வாழ்வின் சின்னமாகும். ஆகவே கொள்ளக்கூடாது' என்பர். இன்னோர்கள் பெரும்பாலும் வடமொழி யொன்றையே கற்கும் வடமொழி வாதிகள். இந்தியப் பொதுமொழியாக இம்மொழியை ஆக்கவேண்டுமென்றும் இவர்கள் முயலுகிறார்கள். இவர்கள் தங்களது தாய்மொழியாகிய தமிழைப் பேணுது, அதனைக்கற்றலும் செய்யாது அநாதரவு காட்டி வருவது பெரிதும் வருந்தத் தக்கது. இவர்களில் ஒருசிலர் தம் கடமையை உணர்ந்து தமிழுக்குப் பெருந்தொண்டு ஆற்றுவது பெரிதும் பாராட்டத்தக்கதே. எனினும், பெரும்பான்மையோர் வடமொழியே தங்கள் தாய்மொழி எனத் தவருகக் கருதி, வழக்காறு அற்றுப்போன அம்மொழி இன்னும் உயிர் வாழ்ந்திருப்பதுபோலக் கற்பித்துக்கொண்டு, அம்மொழியிலுள்ள பண்டைநூல்களை கற்றுக்கற்று, அறிவுவளர்ச்சியின்றி யிருக்கிறார்கள். இலக்கணம் முதலிய ஒரு சில துறைகளில் அந்நூற்கள் மனித அறிவின் எல்லையைத் தொட்டுவிட்டன என்பது உண்மையே. ஆனால், அதனை உணரக் கூடியவர்கள் இப்பெரும்பான்மையோ ரல்லர்; மிகச் சிறுபான்மையோரே யாவர். லௌகிக நடைக்கு இம்மொழி பயன்படுவதன்று. ஆராய்ச்சிக்கும், தேச சரித்திரத்திற்கும், மொழிநூற் பயிற்சிக்கும் மாத்திரம் தான் இம்மொழி பயன்படத் தக்கது. இவ் உண்மையை இவ்வடமொழி வாதிகள் எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் உணருகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு நமது நாட்டிற்

கும் மொழிக்கும் நன்மை விளையும். இவர்கள் ஆங்கிலம் முதலிய மேல்நாட்டு மொழிகளை ஓதுக்கவேண்டுமென்பது அஞ்ஞான இருளில் நம்மை மீட்டும் புகுத்தும் செயலே யாகும்.

வடமொழிப் பூசல் நமது மக்கள் மனத்தைப் பெரிதும் இப்போது கவர்ந்து, அவர்கள் காலத்தையும் முயற்சியை யும் பாழாக்குதலினுலே, சிறிது விரிவாக இங்கே கூறி னேன். தமிழில் வந்து கலந்தது வடமொழி மட்டும் அன்று. பிராகிருத மொழிச் சொற்கள் கலந்துள்ளமைக் குச் சில உதாரணங்கள் மேலே காட்டினேன். ஆணை, வட்டம், நட்டம், கண்ணன் முதலிய சொற்களும் பிராகிரு தமே. இச்சொற்கள் பௌத்த, ஜைனமதத் தொடர் பினுல் நமக்குக் கிடைத்தவை. இம்மதங்கள் உயிராற்ற லுடன் நமது நாட்டில் உலவி வந்த காலமுழுதும் இவ் வகைச் சொற்கள் தமிழில் இடம் பெற்றன இவை க்ஷீணம் அடைந்ததும் இவ்வகையான சொற்களின் புது வரவு நின்றுபோயிற்று. கி. பி. 10-ம் நூற்ருண்டிற்குப் பின் எழுந்த பொது நூல்களில் பிராகிருதச் சொற்கள் காணுதல் அருமை. ஸ்ரீபுராணம் முதலிய பிற்பட்ட ஜைன நூல்களில் பிராகிருதம் காணப்படுதல் வியப்பன்று.

ஜைன சமயத்தவர்களால் பெரிதும் பேணப்பட்ட மொழிகளில் ஒன்று கன்னட மொழி. இம் மொழியினின் றும் தமிழில் பல சொற்கள் ஜைனத் தமிழர்களால் கொள் ளப்பட்டன. உதாரணமாக, சிக்குதல், குளிர்தல் (தங்கு தல்), ஒள்ளியன் (நல்லவன்), நீம் முதலிய சொற்கள் கன் னடத்திலிருந்து வந்தனவாம். இவை காவிய காலத்தில், அதாவது 9, 10-ம் நூற்ருண்டுகளில் தமிழில் இடம் பெற்றன. ஜைனர்களைப் போலவே வீர சைவர்களும் கன்னடச் சொற்களைத் தமது தமிழ்நூல்களில் எடுத் தாண்டுள்ளனர். ஓது (பூனை), இட்டளம், குலுக்குதல்

முதலிய சொற்கள் உதாரணமாம்.

சமயத் தொடர்பினால் நாம் பெற்றுக் கொண்டவை மேற்காட்டிய பதங்கள். சோழ அரசர்கள் முதலியோர்கள் பல தேசங்களிலும் கொண்ட பெரு வெற்றியால், பல நாட்டு மக்களும் தமிழ்மக்களோடு கூட்டுறவுகொள்ளலாயினர்.

**மழலைத் தரு மொழியிற் சிலவடுகும் சிலதமிழும்**
**குழறித் தரு கருநாடியர் குறுகிக் கடைதிறமின்**

என்ற கலிங்கத்துப் பரணியின் அடிகள் நினைவுக்கு வரலாம். இங்கே தமிழ்நாட்டில் வாழ்ந்த கருநட தேசத்துப் பெண்கள் சில வடுகுச் சொற்களையும் சில தமிழ்ச் சொற்களையும் திருந்தாத வடிவில் வழங்கினர் என்ற கருத்துக் காணப்படுகிறது. எனவே, தமிழில் கன்னடம், வடுகு என்ற மொழிகள் கலப்பதற்குரிய சமுதாய நிலை சோழரது வெற்றியால் விளைந்தமை அறியலாம். பல திசைச்சொற்கள் தமிழில் வந்துள்ளனவாகப் பழைய உரைகாரர்கள் குறித்துள்ளனர். மயிலைநாதர் (நன்னூல், 272, உரை,) காட்டியுள்ள சொற்கள் நோக்கத்தக்கன.*

இவர் எழுதிய உரை மொழியுணர்ச்சிக்கு மிகப் பயன்படுவதாம். இவரது நெறியைக் கடைப்பிடித்துச் சொல்லாராய்ச்சி நிகழ்ந்திருக்குமாயின் தமிழுணர்ச்சியும் சிறந்து நிற்கும்; பிராதேசிகச் சொல்லகராதியும் (regional dictionaries) இயற்றப் பெற்றிருக்கும். வீரசோழிய உரைகாரர் முருங்கை என்று நாம் வழங்கும் சொல் 'முருங்கா' என்னும் சிங்களச் சொல்லின் வேற்று

---

* தென்பாண்டி நாட்டார் ஆவினைப் பெற்றம் என்றும் சோற்றினைச் சொன்றி என்றும், குட்டநாட்டார் தாயைத் தள்ளை என்றும், குடநாட்டார் தந்தையை அச்சன் என்றும், கற்கா நாட்டார் வஞ்சரைக் கையர் என்றும், வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்றும், பூழி நாட்டார் சிறு குளத்தைப் பாழி என்றும், பன்றி

வடிவம் என்றனர். இச் சொல்லும் சோழரது ஈழ வெற்றியால் கிடைத்ததென்றே கருதத் தக்கது.

வடுகுச் சொற்களும் தமிழ்நாட்டிற் கேட்கப்பட்டன என்பது முன் காட்டிய கலிங்கத்துப் பரணிச் செய்யுளால் அறியலாகும். வடுகு என்பது தெலுங்குமொழி. இச் சொற்கள் சோழர்களுடைய வெற்றியால் மட்டும் நமக்குக் கிடைத்தனவல்ல. வெற்றியின் விளைவாக, தமிழரசர், தெலுங்க அரசர் என்ற இருபெருங் குடும்பத்தினர்க்குள்ளும் கலப்பு மணவினைகள் நிகழ்ந்தன.

வடுகருள் ஒரு சாரார் கீழைச் சளுக்கியர்; இவர்கள் சந்திரகுலத்தவர்கள். சோழர்கள் சூரிய குலத்தவர்கள். தன் தந்தை வழியால் சந்திர குலத்திற்கும் தாய்வழியால் சூரிய குலத்திற்கும் உரிமை யுடையவனாக விளங்கிய முதற் குலோத்துங்க சோழனை அறியாதார் இல்லை. இங்ஙனமே தமிழரும் தெலுங்கரும் கலப்புமணம் செய்து கொண்டனர். ஒருவர் இலக்கிய இலக்கணங்களை மற்றவர் விரும்பிக் கற்றனர். யாப்பருங்கல விருத்தி யுரையில் 'குணகாங்கியம் என்னும் கருநாடகச் சந்தம் வாஞ்சியார் செய்த வடுகச் சந்தம் ஆகியவற்றுள்ளும்...புகுதியுடையார்வாய்க் கேட்டுக் கொள்க' என வருகின்றது. இது இருபெரு மொழியினரும் கல்வியில் தொடர்புடையவரா யிருந்தனர் என்பதை மிக நன்றாகத் தெளிவிக்கின்றது.*

இங்ஙனம் ஏற்பட்ட பலவகைத் தொடர்புகளால் பல

---

நாட்டார் செறுவைச் செய் என்றும், அருவாணாட்டார் சிறு குளத்தைக் கேணி என்றும், அருவாள் வடதலையார் புளியை எகினம் என்றும், சீதநாட்டார் தோழனை எலுவன் என்றும், மலாடர் தோழியை இகுளை என்றும், புனனாட்டார் தாயை ஆய் என்றும் வழங்குவர்.

* தமிழரும் ஆந்திரரும்: மு. இராகவையங்கார்: ஆராய்ச்சித் தொகுதி, பக். 311 - 338.

வடுகுச் சொற்கள் தமிழில் இடம் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால், ஒரு சிலவே இலக்கியங்களில் காணப்படுகின்றன. அருவர், (கலிங். பரணி, 38, மசரதம் (கம்பராமாயணம், திருவவ 22), தம்பி (ஷை 30), கிச்சு (கம்ப. பிணிவீட்டு. 3), அக்கட (ஷை யுத்த. மந்திர. 32) என்ற சொற்களை இங்கே குறிப்பிடலாம். சோழரது வீழ்ச்சிக்குப் பின்பு, தமிழ் நாட்டிற்கும் தெலுங்கு நாட்டிற்கும் உள்ள தொடர்பு நாளடைவிற் பெருகிக் கொண்டே வந்திருக்கிறது. விஜயநகர ஸாம்ராஜ்யத்திற்குப் பின்பு இத்தொடர்பு மிகவும் வலியுற்றது. தெலுங்க அரசர்கள் தமிழ் நாட்டினை ஆளத் தொடங்கினர். விஜயநகரத்தின் வீழ்ச்சியின் பின்பும், நாயக்கர்களுடைய ஆட்சிகள் தமிழ் நாட்டில் பல இடங்களில் ஏற்பட்டன. அரசியல், பெருமித வாழ்வு, ஆடையாபரணாதிகள் பற்றிய பல தெலுங்குச் சொற்கள் தமிழுக்குக் கிடைத்தன.*

விஜயநகர ஸாம்ராஜ்யம் அழிவதற்குக் காரணமாயிருந்தவர்கள் மகமதியர்கள். இவர்களிடமிருந்து பல சொற்கள் தெலுங்கில் புகுந்தன. தெலுங்கின் வழியாகப் பல உருதுச் சொற்களும் அராபிச் சொற்களும் தமிழிலும் வந்துள்ளன. மகமதியர்களில் சிலர் ஒரு சில இடங்களில் குடியேறியிருந்து பெருஞ் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்கள் சீதக்காதி வள்ளல் இவர்களுள் ஒருவர். மகமதியர் தொடர்பும் திப்பு சுல்தான் முதலியோரது ஆதிக்கியத்தினால் தமிழுக்கு ஏற்பட்டதுண்டு. ஆகவே, தெலுங்கு வழியாகவும் நேரடியாகவும், பல உருதுச் சொற்கள், துருக்கிச் சொற்கள், அராபிச் சொற்கள் முதலியன தமிழில் இடம் பெறலாயின.

---

*** ராணு, ராணுவம், ஒயில், உத்தரித்தல், சந்தடி, கொலு, தலைப்பாகை, தளகர்த்தர், மனு, தத்தரம், ஆயக்கம், ஒப்பமிடுதல், மிண்டு, தண்டு, பராக்கு, கட்டியர், பவிசு, விருது, கடுக்கன், சாலுவை, தாஷ்டிகன், கொலுசு, அங்கி, சொக்காய், பாசிபந்து,**

நாயக்கர் ஆட்சிக்காலத்தில் ஐரோப்பியர்களது வரவு ஏற்பட்டது. இவர்களுள் போர்த்துகீயர்கள் ஏலம், பீரங்கி, ஜன்னல், கடுதாசி, சாவி முதலிய சொற்களைத் தமது மொழியினின்றும் நமது மொழிக்குத் தந்துள்ளார்கள். ஹாலந்து தேசத்தவரான டச்சுக்காரர்கள் உலாந்தா, துட்டு முதலிய சொற்களைத் தமது மொழினின்றும் கப்பல் என்பதை மலேய மொழியினின்றும் நமக்கு அளித்துள்ளார்கள், பிரஞ்சுக்காரர்கள் பட்டாளம், துருப்பு, குசினி, போத்தல், பரங்கி முதலிய சொற்களைத் தமிழுக்குத் தந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியிலும் பல ஆங்கிலச் சொற்களும் தமிழ்மக்களது பேச்சு வழக்கில் புகுந்துவிட்டன. பேனு, பென்சில், வில்லடி, கிடங்கு முதலியனவாகப் பல வாழ்க்கைத் துறைகளிலும் ஆங்கிலச்சொற்கள் பல வந்துள்ளன. இவர்கள் பல இந்துஸ்தானிச் சொற்கள்* புகுவதற்கும் காரணமாயுள்ளார்கள். நமது நாட்டை ஆளுவதற்கு என்று ஏற்படுத்திய உத்தியோகஸ்தர்கள் கட்டாயமாய் இந்துஸ்தானியைக் கற்க வேண்டும் என்று நியமித்ததால் இது நேர்ந்தது.

இவ்வாருக, சங்ககாலந் தொட்டு இந்நாள்வரை தமிழ் மொழி, பிறமொழிச் சொற்களைத் தாராளமாகப் பெற்று வந்துள்ளது, நமது மொழி, அறிவு வளர்ச்சியின் காரணத்தாலும் பிற காரணங்களாலும், அந்நிய மொழிகளை எடுத்

---

துப்பட்டி, டால், சுருட்டி, உம்பளிக்கை—இச் சொற்களனைத்தும் விறலிவிடுதூதின் ஒரு பகுதியில் காணப்படுகின்றன. இவற்றுள் பல இன்றும் தமிழ் வழக்கிலுள்ளவை.

* சலாம், துராய், கபாய், கபாத்து, சரிகை, சவ்வாது, சகலாத்து, அனுமத்து, சராசரி, மாரிபம், ஜல்தி, வர்க்கத்து. அத்து, மாசூல், மராமத்து, அசல், நகல், ஐவேஜ், கஞர், ரஸ்தா, தகரார், தண்டோரா, தரப்பு, திவால், தரியாபத்து, தாவா, மிராசுதார், முனிசீப், ரத்து, வசூல், வாய்தா, வாரிசு, ஜப்தி, ஜாப்தா, டாணு, பந்தோபஸ்து, லஞ்சம், ஆஜர், அமுல், கசாப்பு, கச்சேரி ராவுத்தன் என்பவை உதாரணங்கள். (வேம்பத்தூரார் திரு விளையாடல் 28 : 83, 86 ; 46 : 28*)

துக்கொள்வதில் எப்பொழுதும் பின்வாங்கியதில்லை. சரித்திரபூர்வமாக இது உண்மை என்பது மேலே கண்டோம். சுதந்திரமடைந்திருக்கும் இந்நாளில் நமது மொழிச் செல்வத்தை அபிவிருத்தி செய்வதில் பெருமுயற்சி செய்தல் வேண்டும். ஆனால் ஓர் உண்மையை மனத்தில் நன்ருகப் பதிய வைத்தல் அவசியம். இலக்கியம் எப்பொழுதும் புதுச்சொற்களை ஏற்றுக்கொள்வதற்குச் சிறிது தயங்கியே நிற்கும். செய்யுளால் அமைந்த இலக்கியங்கள் இவ்வாறு தயங்கி நிற்பினும், வசனத்தால் அமைந்த இலக்கியங்கள் முற்போக்கினைத் தழுவுதல் வேண்டும். வசன இலக்கியங்களைக் காட்டிலும், பேச்சுவழக்கில் நாம் விரிந்தமனப்பான்மையையே கொள்ளுதல்வேண்டும், மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திரங்கள் பற்றிய அளவில், நமது கல்வித்துறையில் இருப்பவர்கள் அறிவு வளர்ச்சி ஒன்றனையே முக்கிய நோக்கமாகக் கொண்டு, ஆங்கிலம் முதலிய அந்நிய மொழிக் கலைச்சொற்களை எடுத்தாளுதலில் மிகமிக விரிந்த மனப்பான்மையைக் கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பிறநாட்டு மக்களோடு ஒப்ப விஞ்ஞான சாஸ்திரம் முதலியவற்றில் நாம் மேம்பாடு அடைய முடியும்.

## ௭

# தமிழில் வசன நடை

தமிழில் வசன நடை எப்படி யிருக்கவேண்டும்? இக்கேள்விக்குப் 'பேசுகிற சாயலிலேயே, மக்கள் பேசும் எளிய நேரான பாஷையிலேயே, வசனம் இருக்க வேண்டும்' என்று திருவாளர் டி. கே சிதம்பரநாத முதலியார் முதலிய நண்பர்கள் கூறுகிறார்கள்.

இவர்கள் சொல்லுவது பெரும்பாலும் மறுக்கத் தக்கது. தங்கள் கொள்கைக்கு ஆதாரமாக, இவர்கள் ஆங்கிலம், பிரெஞ்சு முதலியவற்றிலுள்ள வசன நடையை ஆராய்ந்த சில அறிஞர்களின் கருத்துக்களை எடுத்துக் காட்டுகிறார்கள். இந்த ஆசிரியர்களில் பெரும்பாலார் சிறந்த கல்வியாளர்கள்; நல்ல இலக்கியப் பயிற்சி உடையவர்கள்; அழகுணர்ச்சி மிகுதியாக உடையவர்கள்; வசனம் எழுதி யெழுதிக் கை தேர்ந்தவர்கள்; வசன நடை எப்படி யிருக்க வேண்டும் என்று பலபடியாக ஆராய்ந்தவர்கள். ஆகவே, நமது தமிழிலுள்ள வசன நடையும் இவர்களுடைய கருத்துக்களைப் பின்பற்றி அமைந்தால் நலமாகும் என்பதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், ஏதோ ஒரு சிலர் வெளியிட்டுள்ள கருத்துக்களை மாத்திரம் மனத்தில் கொண்டு ஒரு முடிவுக்கு வருதல் கூடாது. வசனநடை என்பதனை நன்கு ஆராய்ந்து, பலருடைய கருத்துக்களையும் எடுத்து விவகரித்து, தக்க கார

---

* திருச்சி அகில இந்திய ரேடியோவில் டி. கே.சி. அவர்களும் நானும் நிகழ்த்திய விவாதத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதியது.

ணங்களால் முடிவுக்கு வந்துள்ள அறிஞர்களின் கருத்துக்களையே நாம் கொள்ள வேண்டும்.

> ரஸ்கின் (Ruskin) என்ற பேராசிரியர் (தமது) வயசு காலத்தில், 'என்னுடைய இளம்பருவத்தில் எந்தச் சிறிய விஷயத்தைப் பற்றியும் நீண்ட நீண்ட வார்த்தைகளைக்கொண்டு இல்லாத வளைவெல்லாம் வளைத்து எழுதி வந்தேன். ஜனங்கள் அதை வியக்கக் கூடச் செய்தார்கள். ஆனால், இப்பொழுதோ விஷயத்தை நேர்நேராக அப்படி அப்படியே சொல்லுவதுதான் சரியானமுறை என்று எனக்குத் தெரிகிறது' என்றார்.

எனப்படுகிறது. இப்படி நேர் முகமாக எழுத ஆரம்பித்த பிறகுதான் ஆங்கிலமொழியின் நயம், சக்தி, வளம் எல்லாம் அவருக்குத் தெரிய வந்தனவாம்.

இந்தக் கருத்தை, 'பேசுகிற சாயலின்படி வசனம் அமைய வேண்டும்' என்பதற்கு ஆதாரமாகச் சிலர் காட்டுகிறார்கள். ஆனால், மேலே உள்ள வாக்கியங்களில் இக்கருத்துக் காணப்படவேயில்லை; சொல்லக் கருதிய விஷயத்தை நேர் நேராக எழுதிவிட வேண்டும் என்ற ஒரு கருத்துத்தான் காணப்படுகிறது. தங்கள் கருத்துக்கு ரஸ்கின் எவ்வாறு ஆதரவளிக்கிறார் என்று நமக்குத் தெரியவில்லை.

ஆசிரியர் ரஸ்கினைக் காட்டிலும், மாண்டெயின் (Montaigne) என்ற ப்ரெஞ்சு ஆசிரியர் டி. கே. சி. யின் கருத்துக்கு ஆதரவு அளிக்கிறார் என்று சொல்லலாம்.

> இயற்கையான, எளிய, நடிப்பற்ற பேச்சைத் தான் நான் விரும்புகிறேன். பேசுவது போலவே எழுதவேண்டும்; வாயில் வழங்குவது போலவே கடுதாசியிலும் அமைதல் வேண்டும் செறிவுள்ளதாயும், கட்டமைந்ததாயும், ஆற்றலுடையதாயும், கருத்து நிரம்பியதாயும், சுருக்கமானதாயும், பயனுடையதாயும் வசனம் அமைதல் வேண்டும். வேகத்தோடு நம்முடைய மனத்தில் கூர்ந்து பாய்வதாயிருக்க வேண்டுமே தவிர, தளுக்கும் நடிப்பும் இருத்தல் கூடாது. நடிப்பு என்பதே கூடாது. கடினமாயிருந்தாலும் நமது பொறுமையைச்

> சோதிப்பதற்க இருத்தல் கூடாது. சுதந்திரத்தோடும், தைரியத்தோடும் லாகவத்தோடும் செல்வதாயிருக்க வேண்டும். நடையிலுள்ள ஒவ்வோர் அங்கமும் ஒன்றோடொன்று அழகாக, சரீரத்தின் உறுப்புக்கள் போல, நன்ருகப் பொருந்தியிருத்தல் வேண்டும். பண்டிதர்கள் முறையையோ, துறவிகள் முறையையோ, வழக்கறிஞர் முறையையோ் வசன நடை பின்பற்றுதல் கூடாது. யுத்த வீரனது முறையில் நேராகப்பொருள் குறித்துச் செல்லுதல் வேண்டும்*.

என்ருர் மாண்டெயின்.

ஆனல், இவரும் அக்கருத்தைப் பலவகையான நிபந்தனைகளுக்கு உட்படுத்தி விடுகிருர். இனி, வசன நடைகளை ஆராய்வதையே தமதுமுதல் நோக்கமாகக் கொண்டு எழுதியவர்களின் கருத்தை நோக்குவோம். உதாரணமாக, ராபர்ட்ஸன் (Robertson) என்ற ஆசிரியர் கூறுவதாவது:

> ஆங்கிலத்தில் இரண்டு வகையான வசன நடைகள் உண்டு. ஒன்றில் சிறிய எளிய ஆங்கிலச் சொற்களும், மற்ருென்றில் பிறமொழிகளிலிருந்து கடன் வாங்கப்பட்டுக் கல்வியாளர்களுக்கு மட்டும் விளங்கும் நெடிய சொற்களும் காணப்படும். முதல்வகை நடையில் நேர்மையும், சுருக்கமும், தெளிவும் உள்ளன. இரண்டாவது வகை நடையில் சொல்-அலங்காரமும், காம்பீரியமும். ஓசை நயமும் உள்ளன. ஆங்கிலமொழி ஒற்றைத் தந்தியால் அமைந்த இசைக் கருவியாய் இல்லாமை பற்றி நாம் நன்றி பாராட்டுகிருேம். இரண்டு நடைகளும் வெவ்வேறு நோக்கமும் பயனும் உடையன. ஒன்று மற்ருென்றைவிடச் சிறந்தது என்று சொல்வது பேதைமை; ஒரு வகை நடையினுல் ஏற்படும் பயன் மற்ருெரு நடையினுலும் விளையக்கூடும் என்று சொல்லுதல் பேதைமையினும் பேதைமை ஆகும்.

ஆங்கில வசனநடையைக் குறித்து மிக விரிவாக ஆராய்ந்த ஹெர்பர்ட் ரீட் (Herbert Read)

> வசனநடைக் கலையின் இயல்பை இரண்டு நிலைகளினின்று நோக்கி நாம் கற்கலாம். ஒருநிலை, மொழியைப் புறத்தே நின்று வழங்குவதைப் பற்றியது (objective use of

* ப்ளோரியோ (Florio) மொழி பெயர்ப்பைத் தழுவியது.

> Language). இதன் நோக்கம் பிழையற்ற திருந்திய நடை (composition) என்று கொள்ளலாம். மற்ெறாருநிலை மொழியை அகத்தே நின்று வழங்குவதாம். இதன் நோக்கம் பிறரை வசீகரித்தல் முதலியனஆகும். இதனை அழகியநடை (Rhetoric) என்று சொல்லலாம், சொல்லமைப்பை மாத்திரம் ஆராய்ந்தால் ஒரு திருந்திய நடையே நமக்குக் கிடைக்கும். இது சாதாரண மக்களுடைய பேச்சில் இருக்கும் குறைபாடுகளை எங்கும் முறைப்பட நீக்குதலால் விளைவதாகும். ஆனால், இவ்வாறு திருத்தமுற்ற நடையிலும் மேம்பட்டு, அழகுடைத்தாக வசனம் அமைய வேண்டுமாயின், அப்பொழுது முன்னே குறித்த குற்றங்கள் நீங்குவதுடன் ஆசிரியனுக்குரிய ஆத்ம குணங்கள் சிலவும் பொருந்தியிருத்தல் வேண்டும். இக்குணங்கள் நடையின் அழகிற்கு உதவுவனவாகும்.

என்று எழுதியுள்ளார்.

மேற் காட்டியவற்றிலிருந்து. ஆங்கில ஆசிரியர்கள் எல்லோரும் ஏகோபித்து 'வசனமெல்லாம் மக்கள் பேசும் எளிய நேரான நடையிலேதான் அமையவேண்டும்' என்று சொல்லவில்லை என்பது தெளிவாம். இவ்வாறு கக்ஷிபேசும் ஆங்கிலேய இக்காலத்துப் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம்.

மேலும் டி.கே. சி. யின் கருத்தை நாம் ஒப்புக்கொள்வதாயிருந்தால், ஒரே வகையான வசன நடைதான் இருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது. அவ்வாறு பெரும்பாலும் இருக்கமுடியாது, இருக்கவும் கூடாதென்றே சொல்லுவேன். ஒவ்வோர் ஆசிரியனும் தனது நூலை ஒரு சில வகுப்பாரை மனத்தில் வைத்தே எழுதுகிறான். யாரைக் குறித்து எழுதுகிறானோ அவர்களுக்குத் தக்கபடி வசன நடை வேறுபடுதல் இயல்பு. குழந்தைகளுக்குக் கதைகள் சொல்லும்போது ஓர் ஆசிரியன் கையாளும் நடை வேறு; கற்றறிந்தோர்க்குத் தன் கருத்தை வெளியிடும்போது கையாளும் நடை வேறு; வழங்கும் சொற்களும் வேறு. இப்படியாக வாசகர்களுக்குத் தக்கபடி நடை வேறுபடுகிறது. இனி, சொல்லக் கருதும் விஷயங்

களுக்குத் தக்கபடியும் நடை வேறுபடும். சரித்திர நூல் எழுதும்போது கையாளுவது ஒருநடை: விஞ்ஞான நூற் கருத்துக்களை வெளியிடும் போது கையாளுவது வேறு ஒரு வகை நடை; முறையும் வேறு. இதுவுமல்லாமல், கருதிய நோக்கத்துக்குத் தக்கபடியும் நடை வேறுபடுதல் இயல்பு. தன் சொல்வன்மையால் வாசிப்போரை வசீகரித்து அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு மேற்கொள்ளும் நடை வேறு. ஏதேனும் ஒன்றை விளக்கஞ் செய்வதற்கு ஆளும் நடை வேறு. இதற்கு மேலும், சொல்லும் முறைக்கு ஏற்றபடியும் வசன நடை வேறுபடும். சம்பாஷணை ரூபத்தில் எழுதும் நடையும், கடித ரூபத்தில் எழுதும் நடையும் வேறுவேருகும். கடைசியாக, ஆசிரியர்களது பண்பு, மன நிலைகளுக்கு ஏற்றபடியாயும் நடை வேறுபடுவ துண்டு. அறிவாற்றல் மிக்க ஆசிரியனது நடை ஒரு வண்ணமாயிருக்கும்: உணர்ச்சி வசத்தனாய் நிற்பவனது நடை வேருரு வண்ணமாயிருக்கும்.

> **ஒவ்வொருவனது மொழியும் மூன்று வகையான இயல்புகளுடையன. ஒருவகை இயல்பு அவனது கல்வி, அறிவு, ஆற்றல் முதலிய தனிப்பண்புகளைச் சார்ந்தது. இரண்டாவது வகை இயல்பு அவன் எந்த இனத்தைச் சேர்ந்தவனா யுள்ளானோ அந்த இனத்திற்குரிய இயல்புகளைச் சார்ந்தது. மூன்றும் வகை இயல்பு பொதுமக்கள் பொதுப்பட வழங்கும் சொல், தொடர் முதலியவைகளைப் பற்றியது.**

என்று எஸ். டி. கோலரிட்ஜ் (S. T. Coleridge) எழுதியுள்ளார். இவ்வாருக, வாசகர்களுக்கும், விஷயங்களுக்கும், நோக்கங்களுக்கும், முறைகளுக்கும், ஆசிரியர் மனநிலை களுக்கும் ஏற்றபடி வசனநடை வேறுபடும். இயற்கைத் தோற்றங்கள் ஒருபடியாய்க் காணுதல் இல்லை. அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டுத் தோன்றுகின்றன. வசன நடைகளும் அத்தகையனவே.

இனி, எளிய நேரான பாஷை நடையிலே என்ன விஷயங்களைக் கூறிவிட முடியும்? இந்நடையின் நோக்கமும் பயனும் வேறு என ராபர்ட்ஸன் கூறியதை மேலே கொடுத்துள்ளேன். எல்லா வகை நோக்கங்களும் பயன்களும் இந்நடையால் முற்றுப்பெற மாட்டா என்பது திண்ணம். சாதாரண விஷயங்களையே இந்நடையில் எழுத முடியும். சிறந்த விஷயங்களை அவைகளுக்கு ஏற்ற முறையில் இந்நடையில் எழுதுதல் முடியாத காரியம். நாளுக்கு நாள் விரிந்து கொண்டே வரும் அறிவு—உலகத்துள்ள பொருள்கள் எல்லாவற்றையும் பற்றி இந்நடையில் எழுதுவது அசாத்தியம்.

ஆனால், மக்கள் பேசும் எளிய நேரானபாஷை ஓரளவு ஒருசில விஷயங்களுக்குச் சிறந்த உரைநடைக் கருவியாயிருக்கும் என்பதை ஒப்புக்கொள்ளலாம். எல்லா விஷயங்களுக்கும், எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் இந்த ஒரு வகை நடையே போதும் என்றுவது, இதைத் தவிர வேறு வகை வசனநடை இருக்கக் கூடாது என்றுவது சொல்லுதல் ஒப்பத்தக்கதல்ல.

பேசுகிற சாயலிலேயே வசனநடை இருக்கவேண்டும் என்பதை ஊன்றிக் கவனிப்போம். பேசுகிற சாயல் என்றால் என்ன? சாதாரணமாய்ப் பேசும் போது வார்த்தைகளை அத்தனை நிறுத்துப் பேசுவதில்லை; அவைகளைக் காரிய காரணத் தொடர்புபட நல்ல முறையில் அமைப்பதும் இல்லை. ஓய்ந்துபோன கையுங்காலும் மூட்டு அறுபட்டுத் தொங்குவது போல வாக்கியங்கள் நிற்கும். வழங்கும் வார்த்தைகளில் பலவும் கிராமியமாய் இருக்கும். வார்த்தைகளைப் பலவாறுகச் சிதைத்து விரூபமாகவும் வழங்குவோம். இப்படியெல்லாம் வசன நடையில் இருக்கலாமா ?

மேலும், பேசும் விஷயங்களைக் கேட்பவன் நன்கு அறிந்து கொண்டானா என்பதை முகக்குறியால் தெரிந்து, வேண்டுமானால், சொல்லியவைகளைத் திரும்பத்திரும்பச் சொல்லியும், திரும்பத்திரும்ப விளக்கியும் பேசுவது மிகச் சாதாரணம். இப்படியெல்லாம் வசன நடையில் இருக்க லாமா?

இருக்கவே கூடாது. வசனம் என்பது நிதானித்து எழுதப்படுவது; வேண்டும் அவகாசத்துடன் எழுதப்படு வது. பேசும்போது இருக்கும் சௌகரியங்களும் அசௌ கரியங்களும் வசனம் எழுதும்போது இல்லை. ஆதலால், பேசுகிற சாயல் என்பதன் அர்த்தம் முழுமையும் நாம் மனத்திற் கொள்வோமானால். பேசுகிற சாயலில் வசனம் இருக்க முடியாது, இருக்கவும் கூடாது என்ற முடிவுக்குத் தான் வரவேண்டும்.

மேலும், பேசுகிற சாயலை வற்புறுத்துவோர் ஒரு முக்கியமான வேறுபாட்டை மறந்து விடுகிறார்கள் என்று தோன்றுகிறது. பழகிய இயற்கை நடை (Familiar) வேறு; கிராமிய நடை (Vulgar) வேறு. இரண்டிற்கும் உரிய வேறு பாட்டை ஹாஸ்லிட் (W. Hazlitt) நன்றாக விளக்கியிருக் கிறார்.

**நடிப்பின்றி இயற்கையாக எழுதுவது என்றால் மனந்தோன் றியபடி எழுதுவது என்று நினைக்கிறார்கள். ஆனால், சொல் லின் திட்பமும் உரையின் தூய்மையும் இயற்கை நடையில் வேண்டும் அளவு வேறொன்றிற்கும் வேண்டியன அல்ல. பொருளற்ற ஆடம்பரச் சொற்களை இயற்கைநடை அறவே ஒழித்துவிடும். இதற்கும் மேலாக, கீழ்மையான இயல்புள்ள தொடர்களையும், பொருத்தமற்று நெகிழ்ந்து செல்லும் வாசகங்களையும், குழூஉக் குறிகள் என்று சொல்லத்தகும் சொற்களையும் முற்றும் இந் நடை நீக்கிவிடும். கைக்கு எட்டிய முதல்வார்த்தையை இது எடுத்துக் கொள்வதில்லை. பொது ஜன வழக்கில் உள்ளவற்றில் சிறந்த வார்த்தைகளையே இது பொறுக்கி எடுத்துக்கொள்ளும். சொற்களை மனம் போன**

> போக்குப்படி வாக்கியத்தில் தொடர்ந்து செல்லுமாறு இது விடுவதில்லை; மொழியின் உண்மையான மரபினைத் தெரிந்து, அம்மரபோடு ஒத்து, சொற்களை வாக்கியத்தில் தொடர்ச்சியுறச் செய்யும். உண்மையான இயற்கைநடை என்பது சாதாரணமான சம்பாஷணையில் சொல்வன்மையுடைய ஒருவன் வார்த்தைகளைத் தெரிந்தெடுத்து லாகவத்துடனும் ஆற்றலுடனும் தெளிவுடனும் பேசுதல்போல எழுதுவதாகும். இவன் பாண்டித்திய படர்டோபங்களையும் பிரசங்கப் பெருவீச்சுக்களையும் அறவே நீக்கிவிடுவான்.

பிழையற்ற நடையைக் குறித்து ஆசிரியர் ரீட் (Read) கூறியதை மேலே உணர்த்தினேன். இந்நடைக்கு எவ்வகையான சொற்களை ஆளுதல் வேண்டும்? எவ்வகையான சொற்களை நீக்குதல் வேண்டும்?

சொற்கள் பொருளை விளக்கமுறச் செய்ய வல்லவையாக இருத்தல் வேண்டும். இதுவே சொல்லினால் விளைய வேண்டும் முதற்பயன். சொல்லின் பொருள் ஆசிரியர் கருத்துக்கு முற்றும் ஒத்ததாக இருக்கவேண்டும், இதைத் தவிர, அதன் ஒலி, பொருளின் சாயையை மனத்திலே தோற்றுவிக்க வல்லதாதல் வேண்டும். இவ்வல்லமை பல தரத்தவாம். காக்கை என்ற பறவைப் பெயரை நோக்குவோம். இப்பறவையின் பெயர் 'கா' கா' எனக் கரைவது பற்றித் தோன்றிய பெயராகும். இங்ஙனமே கிளுகிளுத்தல், ரீங்காரம் முதலிய சொற்களும் இவ்வகையைச் சார்ந்தன. இவற்றை அனுகரண ஒலிப்பெயர் என்று கூறுவார்கள். இவற்றைக் கூறிய அளவிலே இவற்றால் உணர்த்தப்படும் பொருள்கள் நம் மனக்கண் முன்னே தோன்றுகின்றன. இது முதற்படி. இதற்கு மேலாக உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் இவற்றின் ஓசை—அளவினால் பொருளை உணர்த்தும் சொற்களைக் கூறலாம். இவற்றைத் தெரிந்து ஆளுதல் வேண்டும். இது வசன நடையில் முக்கியமாகக் கவனித்தற்குரியது. ஓர் உதாரணம் தருகிறேன். நீண்டகாலப் பகுதியை

உணர்த்துவதற்குத் தமிழில் சாதாரணமாக இரண்டு சொற்கள் வழங்கும்: ஒன்று ஊழி; மற்றொன்று யுகம். இவ் இரண்டிலும் ஊழி என்ற சொல்லே ஓசையின் நீட்சியால் இக் காலப்பகுதியை நன்கு உணர்த்துதல் காணலாம்.

**ஆயிர வெள்ள ஊழி**
**வாழி ஆத வாழிய பலவே** (பதிற்றுப்பத்து. 63)

என்ற அடிகளில் ஊழி என்பதனோடு மற்ற நெடிலோசைகளும் மிகுந்து கருதிய பொருளுக்கு ஏற்ப வந்துள்ளன. 'நீடூழி வாழ்க' என நாம் வாழ்த்தும் தொடரிலும் இவ் ஓசை நயம் இருத்தல் காணலாம்.

**இதன் காரணம் அக்காலத்து விளங்கிய தமிழர் வீரத்தின் மாட்சிமையே யாம்*.**

என்ற தொடரிலும் பொருளுக்கு ஏற்றபடி உயிரெழுத்துக்கள் அமைந்திருத்தல் காணலாம்.

இவை போன்ற சொற்களினும் மேம்பட்ட வேறொரு வகைச் சொற்கள் இருக்கின்றன. இவற்றின் ஒலிகள் கருதிய பொருளுக்கு இசைய அமைந்தன அல்ல. எனினும், அப் பொருளைக் குறிப்பால் உணர்த்த வல்லனவாயிருக்கும். உதாரணமாக, மிடைதல், மிளிர்தல், அமைதி, அமர்வு, இரங்குதல் முதலிய சொற்களைக் காட்டலாம். ஏகதேசமாக இவ்வகை ஓலியழகு மு. இராகவையங்கார் எழுதிய கட்டுரைகளில் காணுதல் கூடும்.

தனிப்பட்ட சொற்களின் ஓசை நயத்திற்கு மேலாக, சொற்கள் தொடர்ந்து வருகிற நிலையிலே தோன்றும் ஒலித்தொடர்ச்சியின் மூலமாய்க் கருத்து விளக்கம் அடைதலும் உண்டு. இங்ஙனம் தொடர்ந்து வருதல் இப்போதுள்ள தமிழ் வசனங்களில் மிக அருகியே காணப்படுகின்றது. ஆனால், கம்பன் இவ்வகைச் சொற்களை நன்கு

---

*** மு. இராகவையங்கார் : ஆராய்ச்சித் தொகுதி. பக். 177**

தெரிந்து உணர்ந்து பாடுகிறான். கீழ்வரும் உதாரணம் காண்க :

மானினம் வருவ போன்றும்,
மயிலினம் திரிவ போன்றும்,
மீனினம் மிளிர்வ போன்றும்,
மின்னினம் மிடைவ போன்றும்,
தேனினம் சிலம்பி யார்ப்ப,
சிலம்பினம் புலம்ப எங்கும்,
பூநனை கோதை மாதர்
பொம்மெனப் புகுந்து மொய்த்தார். (உலாவியல்)

இனி, சில சொற்களுக்கு அவற்றின் வழக்காறுக ளின் மூலமாய்ப் பொருட்சிறப்பு ஏற்படுதல் உண்டு. உதா ரணமாக, காமம், காதல் என்ற இரண்டு சொற்களை எடுத் துக் கொள்வோம். இரண்டும் ஒரு பொருளையே ஆதியில் உணர்த்தின. என்றாலும், காமம் என்பதற்கு இழிந்த குறிப்பும், காதல் என்பதற்கு உயர்ந்த குறிப்பும் நாள டைவில் ஏற்பட்டு விட்டன. இந்த வழக்கினைத் தெரிந்து சொற்களை ஆளுதல் வேண்டும். இங்கே, நெஞ்சு, இதயம் என்ற சொற்களையும் உதாரணமாகக் காட்டலாம். இதய ஒலி, நெஞ்சின் ஒலி என்பனவற்றைச் சொல்லி நோக்கி எது உசிதமானது என்று தெரிந்து கொள்ளலாம். இதயம் வடசொல் என்று இங்கே நீக்கிவிட முடியுமா ?

இனி, தற்காலத்து வழக்கிலுள்ள சொற்களையே நாம் தெரிந்து ஆளுதல் வேண்டும். இவையே உயிர்த் தத்து வத்துடன் கூடியிருப்பவை. இவற்றிற்கு இருக்கும் ஆற்றல் பழங்காலச் சொற்களுக்கு ஏற்படமாட்டாது. ஒரு சிலர் தவறான மொழிப்பற்றுக் கொண்டு பழங்காலச் சொற்க ளையும் தொடர்களையும் வழங்குகிறார்கள். பண்டைக் காலத் துச் சொற்களைப் (archaism) பற்றி, பௌலர் (Fowler) கொண் டுள்ள கருத்தை நாம் நினைவில் வைத்தல் வேண்டும். அவர் இச் சொற்களைப் பற்றி மிக எச்சரிக்கையாகவே எழுதி

யிருக்கிறார். அரை குறையாகக் கற்றவர்கள் இச் சொற்களை வேண்டும் என்றே பொறுக்கிப் பொருத்தமற்ற இடங்களில் புகுத்துவதை மட்டுமே அவர் கண்டிக்கிறார். கற்றறிந்தோர்கள் இச்சொல்லின் ஆட்சியை உணர்ந்து தக்க இடத்தில் தகுதிபெற வழங்குவதை அவர் கண்டிக்கவே இல்லை.

எனினும் 'இது வழக்கிலுள்ளது,' 'இது வழக்கொழிந்தது' என்ற உணர்ச்சி வசனம் எழுதுவோர் ஒவ்வொருவருக்கும் அவசியமாகும். ஆனால், இவ்வுணர்ச்சி நன்கு நிரம்பிப் பயன் அளிக்கவேண்டுமாயின், பழங்காலத்திலும் மத்திய காலத்திலும், இக்காலத்திலும் உள்ள சொல் வழக்காறுகளை எல்லாம் தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாதது. இலக்கணம் என்பது இவ்வழக்காறுகளைத் தொகுத்து அவற்றை ஆளும் நியதிகளைத் தெரிவிக்கும் நூலேயாகும். இதை நாம் மறந்துவிடலாகாது. இலக்கணம் வழக்குணர்ச்சிக்கு அவசியமேயாம். தற்காலத் தமிழ் மக்களுடைய சொல்வழக்கினைப் புலப்படுத்துதல் தற்காலத்துத் தமிழ் இலக்கணத்தின் கடமையாகும். எனவே, சிறந்த வசனநடை எழுதுவதற்கு இலக்கணம் பயன்பட மாட்டாது என ஒதுக்குதல் தவறு. வசன நடையும், இலக்கணத்திற்கு உட்பட்டதேயாகும்.

ஆனால், இலக்கியங்களில் பயிற்சி பெற்ற பின்னரே இலக்கணம் தெரிந்துகொள்ளுதல் நலமாகும். இலக்கணம் மட்டும் கற்றவர்கள் பொதுவாக நல்ல வசன நடை எழுத முடியாதவர்களாயிருக்கிறார்கள் என்பது அனுபவத்தால் நாம் அறிகிறோம். இவ்விஷயத்தைக் குறித்து லாம்பார்ன் (E. A. G. Lamborn) என்ற ஆசிரியர் நான் கூறிய முடிபிற்கே வந்திருக்கின்றனர்.*

---

* Expression in Speech and Writing, pp. 40—43

பழங்காலத் தமிழ்ச் சொற்களை வழங்குதல் ஒரு புற மிருக்க, வடமொழிச் சொற்களை மிகுதியாக வழங்கியுள்ள ஆசிரியர்களும் உளர்.

> **இதிலே வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய ஸௌலப்யங் களாகிற குண விசேஷங்கள் நேராக ப்ரகாசிக்கிறது.**

இதிற் காண்பது போல வடமொழிச் சொற்களை மிகுதி யாய் ஆளுதலும் நீக்கத்தக்கதாம்.

இவையேயன்றி, கருதியதை நேரே சொல்லாது சில வசன ஆசிரியர்கள் வளைத்து வளைத்து எழுதுகிறார்கள்.

> **நூறு பத்தடுக்கி யொன்று கடைநிறுத்த வெண்பொற்காசு.**
> **அலையாழி மிசைத்துயில்கூர் பண்ணவன்.**

என்பன உதாரணங்கள். இவைகளையும் வசனத்தில் நீக்கு தல் வேண்டும்.

> **எம்பெருமாட்டி கவல்கின்றது என்னைகொல்?**

என்பது போன்ற நடிப்புச் சொற்களையும் விலக்குதல் வேண்டும்.

இக்காலத்தில் ஆங்கிலம் கற்ற தமிழ் மக்களில் சிலர் ஆங்கில மரபுத் தொடர்களை நேரடியாக மொழி பெயர்த் துத் தமிழ் வசனத்தில் அமைத்து விடுகிறார்கள்.

> **தமது அகன்ற கல்விக்கு அஸ்திவாரம் போட்டார்.**
> **அவர் ஒளி விளங்கும் விவேகம் நிறைந்துள்ளவராயிருந்தார்.**
> **மாணிக்கவாசகர் ஒன்பதாம் நூற்றாண்டில் கிளம்பினார்.**
> **ஒவ்வொருவனும் சேனாபதிக்குரிய அதிகாரக்கோல் தன்தன் பயணப் பொதிக்குள் வைத்திருந்தாலும் இருக்குமென்று எண்ணுவது இயற்கை.**

இவ்வாறான மொழி பெயர்ப்புக்களும் நாம் ஒழிக்கத் தக்கனவே.

இதுவரை, கொள்ளவேண்டும் சொற்களையும், நீக்க வேண்டும் சொல்வகைகளையும் நோக்கினோம். இனி, அடை மொழிகளை வழங்குவதில் கையாளவேண்டும் நியமங்களை

நோக்குவோம். அவசியமில்லாத அடைமொழிகளைப் பலரும் எழுதி வருகிறார்கள்.

**கடல்புடை சூழ்ந்த மலர்தலை யுலகத்துள்ள உயிரினங்களெல்லாம்**

என்ற இத்தொடரிலுள்ள அடைமொழி சிறிதும் பயனற்றது; சிறிதும் அவசியமில்லாதது. இதுபோன்றவற்றை நீக்குவதில் நாம் மிக்க மனவுறுதியோடு இருக்கவேண்டும். வேறொரு வகையான அடைமொழியும் உண்டு. இதனை அநாவசியம் என்று சொல்ல முடியாது; ஆனால் தகுதி நோக்காமல் குருட்டுப் போக்காக வழங்கியிருக்கக் காண்போம். உதாரணமாக, அமைதியாயிருக்கிற கடலை 'பொங்கிரும் புணரி' என்றல் சிறிதும் பொருத்தமின்மை காணலாம். இவ்வகையான அடைமொழிகளையும் ஒழித்து விடுதல் வேண்டும். இந்த அடைமொழிபற்றிய அளவில், ஒரே ஒரு நியதியைப் பின்பற்றினால் போதுமானது. இயற்கையில் ஊகிக்கக்கூடிய அடைமொழிகளை நீக்கிவிடலாம். பொருளின் அல்லது செயலின் தன்மையை வேறுபடுத்தக் கருதினால், அதற்குரிய அடைமொழிகளைச் சேர்க்கவேண்டும். இந்நியதியைத் தவறாமல் நாம் கையாண்டால், தமிழ் வசனநடை எவ்வளவோ திருந்திவிடும்.

சொற்களைப்பற்றிய குறிப்பை முடிப்பதற்குமுன்னால், அணிகளைக் குறித்துச் சில சொல்ல விரும்புகிறேன். பொதுப்பட அணிகள் எல்லாம் செய்யுளுக்கு உரியனவேயன்றி, வசனத்துக்கு உரியன அல்ல. எனினும், ஒரு சில சந்தர்ப்பங்களிலே உவமானம், உருவகம் என்ற அணிகளைக் கையாள நேரிடலாம். உருவகம் சில இடங்களில் பொருளை விளக்குவதன் பொருட்டு வரலாம்; சில இடங்களில் கேவலம் அணியின் பொருட்டும் வருவதாகலாம். இவற்றை முறையே 'விளக்க-உருவகம்' என்றும் 'அணி-உருவகம்' என்றும் பெயரிடலாம். இரண்டும் செய்யுட்கு

உரியனவே. எனினும், விளக்க – உருவகம் மட்டும் வசன நடையிலும் ஏகதேசமாக வருதல் குற்றமாகாது. 'கல்வி மக்களுக்குக் கண்' என்ற இடத்தில், பொருளை விளக்குவதற்கே உருவகம் வந்துள்ளது. இதுபோன்ற உருவகங்களை வசன நடையிலும் கையாளலாம்.

சொற்கள், தொடர்களுக்கு அடுத்தபடியாக, இனி வாக்கிய–அமைதியை எடுத்துக்கொள்வோம். சிலர் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் முதலிய எல்லா உறுப்புக்களும் பொருந்தியே வாக்கியங்கள் அமைதல் வேண்டும் என்பர். வாக்கியத்தின் பல உறுப்புக்களையும் மாணவர்கள் அறிந்துகொள்ளல் அவசியம் என்பதற்காக, முற்குறித்தபடி சொல்லுகிறார்கள் என்றுதான் நாம் கருதுதல் தக்கது. பொருளின் விளக்கத்திற்கு எல்லா உறுப்புக்களும் வாக்கியத்தில் இருத்தல் வேண்டா. எல்லா உறுப்புக்களும் வாக்கியந்தோறும் அமைவதாயின், அதன் பொருளாற்றலும் குறைந்துவிடும். அன்றியும் பயனற்ற சொற்கள் மிகுதலால் பொருளின் தொடர்ச்சியும் கெட்டுவிடும். ஆகவே பல வாக்கியங்கள் தொடர்ந்த ஒருவசனப் பகுதியை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு வாக்கியத்திலும் எல்லா உறுப்புக்களும் இருத்தல் வேண்டும் என்ற நியதி கொள்ளத் தக்கதன்று.

மக்களது ஆதிமொழிகளின் வரலாற்றை ஆராய்ந்து நோக்கினால், வாக்கியம் என்று தற்காலத்தில் சொல்வது பிரிக்க முடியாதபடி ஒன்றோடொன்று பிணைந்து அமைந்த ஒலித் தொகுதியேயாகும். 'இத் தொகுதி ஏகம் என்னும் ஒருமை யுணர்ச்சியை விளக்கும்; ஒருமை உணர்ச்சியினாலே, இத் தொகுதியின் நீட்சி, ஒலியின் ஒத்திசைப்பு (rhythm), அமைப்பு என்ற பல இயல்புகளும் கட்டுண்டு நிற்கும்' என்றனர் ஆசிரியர் ரீட். இப்படி

அமைந்த வாக்கியத்தில், பல வேறு உறுப்புக்களும், பெயர், வினை என்ற இரண்டின் வேறுபாடு மக்கள் மனத்தில் பதிந்த பின்னரே அறியப்படுவனவாயின. மக்கள் முதலாவது அறிந்தவை பெயரும் செயலும் தான். இவ்வாருக, பெயர் மாத்திரம் தனித்து நின்று வாக்கியமாக அமைந்துவிடலாம்; சில இடங்களில் இது மாத்திரமே நிரம்பிய வாக்கியத்தைக் காட்டிலும் ஆற்றல் உடையதாயிருக்கும். இவ்விடங்களில் வினை தொக்கு நிற்கிறது என்றே நாம் கருதுதல் வேண்டும். இவ்வாறே வினை மாத்திரம் தனித்து நின்று வாக்கியத்தின் பயனைத் தருதலும் உண்டு. ஆனல், முன் வாக்கியமேனும் முன் வாக்கியத்திலுள்ள எழுவாயேனும் எழுவாயாக அமைந்துள்ளதெனக் கொள்ளுதல் வேண்டும். தனித்தும் அடைமொழியோடு சேர்ந்தும் வருகிற பெயர்கள் மாத்திரம் எழுவாயாக நின்று மிக்க ஆற்றலோடு பொருள் உணர்த்துவதற்கு ஓர் உதாரணம்:

> சிறிய தானியம் போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத் தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல்-வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் இவை கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டிற் போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள்: இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன.

இப்படிச் சிட்டுக்குருவியைப் பற்றிப் பாரதியார் எழுதுகிருர். இந்த வசனத்தின் அழகையும் ஆற்றலையும் நாம் உணர்ந்து அனுபவித்தால், வாக்கியங்கள் எப்பொழுதும் உறுப்புக்கள் நிரம்பியே அமைதல்வேண்டும் எனக் கூற மாட்டோம்.

சிலர் எழுவாய், செயப்படு பொருள், பயனிலை என்ற இலக்கண முறைப்படியே எப்பொழுதும் வாக்கியங்கள் இயலவேண்டும் என்று கூறுவார். உறுப்புக்கள் நிரம்பி

அமைதல் வேண்டும் என்ற நியதியைப் போல, இதுவும் பெரும்பான்மை நியதியேயாம். சில இடங்களில் இம் முறை மாறிவருதலும், அப்பொழுது பொருளாற்றல் சிறந்து விளங்குவதும் உண்டு; இதனைச் செய்யுளுக்கு மட்டும் உரிய ஒருமுறை என்று கொள்ளுதல் கூடாது. வசனத்திலும் இது உரியதே. ஓர் உதாரணம் :

> பேரண்டத்திலுள்ள பொருள்களிலெல்லாம் சிறந்த பொருள் மனிதன். மனிதனிடத்தில் உள்ள பொருள்களிலெல்லாம் சிறந்தது மனசு.

இப்படி அழகாக மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார் டி. கே. சி. இது மொழி பெயர்ப்பு ஆயிற்றே : ஒருவேளை ஆங்கில மூலத்திலும் இம்முறை மாற்றம் இருக்கலாம் என்று தாம் நினைக்கக்கூடும். வேறோர் உதாரணத்தைப் பார்ப்போம்:

> 'சரியான அடிமை யடா நீ! உன் தாய்பாஷை உனக்கு ஆகவா செய்யும்? மாட்டாது. வேறொரு பாஷைக்குமே நீ அடிமை என்பது தெரிய வேண்டாமா?' என்று கதறுகிறார் கவி.

இவையும் டி. கே. சி. யின் வாக்கியங்களே. இவற்றை யெல்லாம் வாசித்தால் வாக்கியத்தை முறைமாற்றி அமைப்பதில் சில நயம் உண்டாகிறது என்பது தெளிவு.

மேலே தந்துள்ள வாக்கியங்கள் இலக்கண விரோத மானவை என்று சிலர் கூறலாம். அவ்வாறு இருப்பினும் வாக்கியங்களுக்கு உயிர் இருக்கவேண்டுமானால், நான் காட்டியவை போன்ற நெறிகளைப் பின்பற்றத்தான் வேண் டும். இலக்கணம் என்பது காலத்துக்குக் காலம் மாறு வது. ஒரு காலத்துத் தோன்றிய இலக்கணம் பின் வருங் காலம் முழுமைக்கும் ஒரு மொழியை நெறிப்படுத்துதல் இயற்கை விரோதம். இந்த உண்மையை உணர்ந்து, பொரு ளின் திட்பம், தெளிவு முதலியவற்றையே முக்கியமாகக் கொண்டு, ஒருவன் தனது ஆத்மகுணம் தோன்றவும்

தனது நோக்கம் நிரம்பவும் வசனத்தை அமைத்தலே தமிழின் மறுமலர்ச்சிக்கு அறிகுறியாகும். வாக்கியங்களால் அமைந்த பத்தியின் (paragraph) அமைதியும், சொல்லக் கருதிய பொருளைப் பாகுபடுத்தி முறைப்பட விரிக்கும் நெறியும் வசன நூல்கள் முக்கியமாகக் கவனிக்கத்தக்கன. இவ்வாறு பல வழியிலும் திருந்திய செம்மையான வசன நூல்களை இயற்றி மறுமலர்ச்சியைப் பேணி வருவோமாக.

# 10

# வளரும்மொழி: உரை நயம்

சில காலத்திற்கு முன், எனது நண்பர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்தேன். அவர் இலக்கண-அறிவிற் சிறந்தவர். எங்கள் ஸம்பாஷணையினிடையே, அவர் தற்காலத்துத் தமிழ், எழுத்தாளர்கள் தமிழ், மறுமலர்ச்சித் தமிழ் முதலியவைகளைப் பற்றி மிகவும் குறை கூறிக்கொண்டிருந்தார். எழுத்தாளரில் பெரும்பாலோர் இலக்கண-அறிவும் தமிழ்—உணர்ச்சியும் இல்லாதவரென்று பழித்தார். தமிழே தொலைந்து போயிற்று என்று நொந்து வருந்தினார். நான் எதிர்க் கட்சியை ஆதரித்து, 'நீங்கள் கூறுவது ஒரு வேளை சரியாயிருக்கலாம். தற்காலத்தில் எழுதிவரும் தமிழ், பண்டிதர்களுக்கு மட்டுமன்றி, எல்லார்க்கும் விளங்குகிறது; எளிமையாயிருக்கிறது; வெளியிடும் கருத்தின் விளக்கத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது; புது நெறிகளைக் கொண்டு வசனத்தை அமைத்து, புதுப்புது நயங்களைத் தோற்றுவிக்கிறது; அறிவின் நுட்பங்களை நன்றாகப் புலப்படச் செய்கிறது; கருத்தின் சாயைகளுக் கெல்லாம் நிறம் கொடுத்து வாசிப்போர் மனத்தைக் கவருகிறது; உணர்ச்சியின் வேகங்களுக்கெல்லாம் இடம் தருகிறது; கலை நயம் மிகுந்து இன்புறுத்துகிறது; எழுத்தாளன் ஒவ்வொருவனது தனிப்பண்பும் நன்குதுலங்கச் செய்கிறது. இவ்வாறான

* இதன் சுருக்கம் சென்னை வானொலி நிலையத்தில் 1-11-50-ல் ஒலி பரப்பப்பட்டது.

தமிழை எழுதுதல் அருமை' என்று கூறினேன். எனது நண்பர் சிறிது வியப்புடன் என்னை நோக்கினர். பின்னர் முடிவற்ற இவ்விவகாரத்தை விட்டு விட்டு, வேறு சில இலக்கிய விஷயங்களைக் குறித்துப் பேசலானோம்,

எனது பதிலில் அடங்கிய பொருள்களைத்தான் உரை நயம் என்ற தொடர் குறிக்கிறது. தமிழ்-நடை விவகாரம் இன்று நேற்று உண்டானதல்ல. கற்றுவல்ல பண்டிதர்கள் மொழியை இலக்கண விதிப்படியே வழங்கவேண்டுமென்று எப்பொழும் வற்புறுத்துவர். பொதுஜனங்கள் தெரிந்தோ தெரியாமலோ இலக்கண விதிகளைச் சிறிதும் பொருட்படுத்தாது, தமக்குத் தோன்றியவாறு—ஆனால் பொருள் விளங்கும்படி—மொழிகளை வழங்கி வருவர். இவ்வகை வேறுபாட்டைப் பண்டித—பொதுஜனப் போர் என்று கூறலாம். இப்போர் நிகழாத காலமுமில்லை; இடமுமில்லை. முடிவில் வெற்றி பொதுஜனங்களுக்குத் தான். மொழிகள் தோன்றிய காலந்தொட்டு இன்று வரை அப்படியே. இனிமேலும் அப்படியே. பூர்வகாலத்துப் பேராசிரியர்கள் கையாண்ட மொழி-வழக்கினை முழுதும் புறக்கணியாது ஓரளவு பின்பற்றி, தற்காலத்தை எதிர்ந்து நோக்கி, அதன் புதுத்தேவைகளை உணர்ந்து, அவற்றைத் தக்கவாறு வாக்கியங்களின் மூலமாய் வெளியிடுவதற்குப் பொதுமக்கள் சிறிதும் தயங்குவதில்லை. அதுதான் அவர்கள் வெற்றியின் ரகசியம், மொழிகளின் வளர்ச்சி எங்கும் பொதுஜனங்களால்தான் இதுவரை நேர்ந்துள்ளது. என்றும் அப்படித்தான். அவர்களால் நேர்ந்த வளர்ச்சியை நம்மில் ஒரு சிலர் கேடு என்பார்கள். ஒரு வேளை ஒரு சில இடங்களில் உண்மையிற் கேடாயிருப்பினும், நன்மையின் வித்தும் அதிலே உள்ளது. பொதுஜனங்கள்தான் மொழிகளுக்கு உயிர் கொடுத்து அவை இயங்கும்படி செய்யவல்லவர்கள். மொழிவளர்ச்சிநெறியை

உணராத இலக்கணப் பண்டிதர்களிடத்தில் மட்டும் மொழிகள் அமைந்து விடுமாஞல், அவைகளைக் காற்றில் லாத அறையில் பூட்டிவைத்துக் கொன்றே விடுவார்கள். மொழிகளுக்கு மரணம் நேர்ந்ததெல்லாம் இவ்வாறே.

ஆஞல், பண்டிதர்கள் தேரின் அச்சாணி போன்றவர் கள் என்பதையும் நாம் மறக்கலாகாது. தேர் ஒரு நிலையில் நிற்க வேண்டுமல்லவா ? அதுபோல, மொழிகளும் ஒரு பொது நிலையில் நிற்க வேண்டும். அவ்வாறு நிற்பதற்கு இவர்கள் உதவுகிருர்கள். பண்டித வகுப்பினரின் உறுதி நிலையைப்பெருது, அவர்களை ஊன்று கோலாய்க் கொள் ளாது, மொழிகள் பொது ஜனங்களின் வசமே முற்றும் அமைந்து விடுமாஞல் அவற்றை எவ்வகை நியதியுமின்றி வழங்கி வெகுவிரைவில் உருக்குலைத்து விடுவார்கள். ஆகவே, மொழிகளுக்குப் பண்டிதர்களால் விளையும் நிலை பேறும் வேண்டும்; பொது மக்களால் விளையும் உயிராற் றலும் வேண்டும்.

இதஞல், வளரும் மொழி நிலைபேறும் உயிராற்றலும் கொண்டே வளர்வதாகும் என்பது வெளிப்படை. நிலை பேறு தொன்றுதொட்டு வரும் இலக்கண மரபையும் தமிழ் மரபையும் காலதேச வர்த்தமானங்களுக்கு இயைய, வேண்டுமளவு பின் பற்றுவதஞல் உண்டாகும். உயிராற் றல் எவ்வாறு ஊறிச் சுரந்து பாய்கிறது? இதனைக் குறித் துச் சிறிது சிந்தனை செய்வோம்.

முதலாவது, அப்போதைக் கப்போது பிற மொழிகளி லிருந்து சொற்களைக் கடன்கொண்டு வழங்குவதஞல் இவ் வுயிராற்றல் பெருகுகிறது. புதுப் பொருள்களையும் புதுச் செயல்கள் முதலியவற்றையும் இவ்வகைக் கடன் சொற் களால் எளிதில் உணர்த்துவது கூடும். மேலை நாடுகளில்

அறிவுத் துறைகள் பலவற்றிலும் பற்பல நூதன விஷயங்கள் நாள்தோறும் கண்டுபிடிக்கப்பட்டுவருகின்றன. அவைகளையெல்லாம் தமிழ்மக்கள் அறியவேண்டுமாயின், இங்கே குறித்த கடன் சொற்களாலல்லது ஏலாதாகும். தமிழ் எழுத்தாளருள் ஒரு சிலர் இவ்வாறு கடன் கொள்ளுதலை வெறுத்துரைப்பர். இவ் வெறுப்புரை சிறிதும் தக்கதன்று.

இரண்டாவது, எழுதுவது எல்லார்க்கும் விளங்கும்படி தற்காலத்துப் பொது வழக்கில் உள்ள சொற்களையும் தொடர்களையும் எழுத்தாளன் உபயோகித்தல் வேண்டும். இதற்கு மாறாக எழுதுவது பயன்படமாட்டாது.

> **இன்னிசையாழை இடவயின் தழீஇக்கொண்டு மாடகந் திரித்து, வாரியும் வடித்தும், உந்தியும் உறழ்ந்தும் பாடி மகிழும் இளமகளிர்.**

இதில் பெரும்பாலன—நான்கு, ஐந்து சொற்களைத் தவிர மற்றைச் சொற்களெல்லாம் இறந்துவிட்ட ஸங்கேதச் சொற்களே. இவற்றால் ஒரு பயனும் இல்லை. வாக்கியமும் விளங்கமாட்டாது; இறந்து விட்டதற்குச் சமானந்தான். எனவே இதிலே உயிராற்றல் சிறிதும் இல்லையென்பது சொல்லவும் வேண்டுமா?

> **அவனைக்காட்டிலும் நீ எவ்வளவோ உயர்ந்தவன் என்பதைத் தடையின்றி ஒப்புக்கொள்ளுகிறேன்.**

இதில் ஒன்றேனும் வழக்கில் இல்லாத சொல் இல்லை. பொருள் விளக்கமாயிருக்கிறது. எனவே உயிராற்றலும் ஓரளவு இருக்கிறது.

மூன்றாவது, எளிய சொற்களையே பெரும்பாலும் கையாளுதல் வேண்டும். ஒவ்வோர் அவசரம்பற்றி, சற்றுக் கடுமையான சொற்களை எழுத்தாளன் வழங்க நேரலாம்.

ஆனால் பொதுப்பட நோக்குமிடத்து எளிய சொற்கள் தான் வழங்கப்படுதல் வேண்டும். ஓர் உதாரணம்:

> **தமிழ் எழுத்தாளர்களை யெல்லாம் ஒன்று சேர்த்துப் பெருந் திரளாய்க் கண்குளிரப் பார்க்க வேண்டுமென்று முதன் முதலாக இவர் ஆவல் கொண்டார்.**

இதில் எளிய சொற்களும் தொடர்களும் உள்ளன. உயிராற்றல் உடையதாக இது விளங்குவது தெளிவு.

நான்காவது, சொற்களை அள்ளி வீசுவதில் கவனம் செலுத்தாது, கருத்தின் விளக்கத்தையே உரைநடை கவனித்தல் வேண்டும். இதுவும் உயிராற்றல் நிரம்புவதற்கு ஒரு வழியாகும். ஸ்தூலித்துச் சதை வளர்ந்த சரீரம் நோய்க்கு இடங்கொடுக்கக் கூடியது; உயிரின் வலிமைக் குக் குறைவு உண்டாக்குவது. இதுபோல, சொற்களை அடுக்கி நிரப்பினால் கருத்துக்கள் மறையும் அல்லது வலி குன்றும்; கருத்துக்களின் உயிராற்றலும் தேய்ந்துவிடும். ஆகவே, கருத்தின் விளக்கத்திலேயே எழுத்தாளன் கண்ணாக இருக்க வேண்டும். பயனற்ற சொற்கள் வலிமை தரமாட்டாது. உதாரணம்:

> **வறுமையால் வருந்தியிருக்கும் புலவர்கள் வறுமை காரண மாகத் தன்மானம் என்பதை இழந்து உயிர் வாழார்கள்.**

இவ் வாக்கியத்தில் 'வறுமையால் வருந்தியிருக்கும்' என்பது பயனற்றது. இங்ஙனமே 'என்பதை' என்பதும் வேண்டா தது. வேறோர் உதாரணம்:

> **அவள் எப்போதும் அல்லும் பகலும் புருஷோத்தமனை கிருஷ்ணனையே மனத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.**

இதில் 'எப்போதும்' 'மனத்தில்' 'புருஷோத்தமனை' என் பவை வேண்டாச் சொற்கள். இரண்டு வாக்கியங்களிலும்

உள்ள மிகைச் சொற்களை நீக்கிவிட்டால், வாக்கியம் உயி ராற்றலில் சிறந்து விளங்குவது காணலாம்.

ஐந்தாவது, புதுநெறிகளைக் கையாண்டு வசனத்தை அமைத்தல் வேண்டும். இந்நெறி பலதிறப்படும் பேச்சு வழக்கோடு ஒத்திருத்தலும் வேண்டும். இதனால் புதுப்புது நயங்கள் தோன்றுதல் உறுதி; அதுமட்டுமன்றி, உயிராற் றலும் நிரம்பி விளங்கும். ஓர் உதாரணம்:

> சிறிய் தானியம் போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத் தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல்-வெண்மை நிற முடைய பட்டுப் போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் இவைகலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டில் போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித் துளிக் கால்கள்: இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்து விடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன.

இது ஒரு சிட்டுக்குருவியின் வர்ணனை. சின்னஞ் சிறு அழகிய வாக்கியங்கள்; புதுமுறையில் அமைந்தவை. தொன்றுதொட்டு வரும் இலக்கண முறைப்படி இவை அமையவில்லை. 'சிறிய தானியம் போன்ற மூக்கு' என்பதை இலக்கண நியதிப்படி 'இதன் மூக்குச் சிறிய தானியம் போன்றுள்ளது' என்று கூறவேண்டும். இவ்வாறு இலக் கணத்தைத்திருப்திப்படுத்தலாம்; ஆனால்அழகுணர்ச்சியைத் திருப்திப்படுத்த முடியாது. சிற்பி ஒருவன் நுட்பமான வேலைத்திறன் காட்டி அழகு ததும்ப அமைத்த ஒரு சிற் பத்தை முரட்டு வேலை செய்யும் கல்-தச்சன் பெரிய உளியி னால் திருத்தியமைக்க முயல்வது போலத்தான் இவ்விலக் கண முயற்சி. இவ் வாக்கியங்களிலே பொருளின் தெளிவு, சொற்களின் எளிமை, கருத்துக்கேற்ற சொற்கள், புதிய நெறி, புதிய நயம்: இவையனைத்தும் நன்குவிளங்குகின்றன.

இவற்றில் விளங்கும் உயிராற்றல் சொற்களைக் கூடை கூடையாய் வாரியிறைத்துக் கொட்டினாலும் உண்டாக மாட்டாது. எத்தனை உயரிய நடையும் இவற்றின் அழகையும் நயத்தையும் எட்டிப்பிடிக்க முடியாது. இங்குக் காணும் உயிராற்றலோ ஒரு தனி ரகத்தைச் சார்ந்தது. இவ்வாற்றல் நமது உள்ளத்தை அள்ளிப் பிடிக்கிறது; நமது மனக்கண் முன்னே, சிறிய அழகிய ஓர் உயிர்ச் சித்திரத்தைத் தீட்டி விடுகிறது. இது, வளரும் தமிழின் சிகரங்களில் ஒன்றைச் சிறிதும் சிரமமின்றி எளிதிலே பறந்து சென்று அடைந்து விடுகிறது.

ஏன் இவ்வாற்றல் உள்ளத்தை அள்ளிப்பிடிக்கிறது? இக் கேள்வியின் விடைதான் வளரும் தமிழின் ஆறுவது இயல்பாகும். உதட்டின் அளவில் நின்று வெளிவரும் வெற்றுரைகளால் இவ்வகை ஆற்றல் உண்டாவதில்லை. எழுத்தாளனது உள்ளத்திலிருந்து கருத்துக்களும் சொற்களும் புறப்படுகின்றன. இவை இரண்டும் அபேதமாய் நின்று, சொற்கள் தாம் வெளிப்பட்டமாத்திரையில் வாசிப்போர் மனத்திலே கருத்துக்களை நேர்பட உட்செலுத்திவிடுகின்றன. எழுத்தாளனது தனிப்பட்ட உள்ளப்பண்பினைக் காட்டுவதே இவ்வியல்பாகும். இந்த இயல்பினை நன்கு உணர்ந்துகொள்ளுதல் மிகஅவசியம். இதனை இனி விளக்க முயல்வோம் :

**தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த**
**தெத்தாதோ தித்தித்த தாது**

என்று ஒரு புலவன் பாடினால், உடனே இச் செய்யுள் அவன் உள்ளத்தினின்றும் தோன்றியதல்ல என்று உணர்கிறோம். ஏதோ நியதிக்கு உட்பட்டு உள்ளத்தைத் தூர எறிந்துவிட்டுப் பாடுகிறானென்று எளிதில் அறியலாம், இது போன்றதுதான் சொல்லணிகள் எல்லாம். இவ்வாறே ஓர் எழுத்தாளன்,

> **ஆற்றங்கரையை அடுந்து நின்ற அரசமரக் கிளையை ஆண் குரங்கு ஆட்ட ஆரம்பித்தது.**

என்று எழுதினல், உடனே இவ் வாக்கியமும் அவன் உள்ளத்திலிருந்து தோன்றவில்லை யென்பது எளிதில் புலனுகும். இவ்வாறு சொல்லிய அளவில், சொற் கட்டுப் பாடுகளை நீக்கிவிட்டு, நேரே எழுதும் வாக்கியங்களெல்லாம் எழுத்தாளன் உள்ளத்திலிருந்து தோன்றியவை என்று கொள்ளலாமா? அதுவும் முடியாது. அவன் உள்ளம் அவன் சொல்லக் கருதிய பொருளில் ஆழ்ந்து தோய்ந்து நிற்கவேண்டும். மேலே கூறிய சிட்டுக் குருவி வர்ணனையில் இவ்வாறு உள்ளம் தோய்ந்து நிற்பதைக் காணலாம். வேறோர் உதாரணம் :

> **குக்கிராமம் உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது. அங்குள்ள விசித்திர வேலைப்பாடுகளைப் பார்க்கப் பார்க்க அவநம்பிக்கை உண்டாகிறது - நம்மைப் போன்ற மனிதர்கள் செய்திருக்க முடியுமா ? என்று.**

இவ் வாக்கியங்களிலும் எழுத்தாளன் தான் சொல்லக் கருதிய பொருளின் அழகில் ஈடுபட்டு நின்று, உள்ளத்தை வியப்பு-வெள்ளத்தில் முழுகவிட்டு, ஆவேசம் கொண்டு கூறுகிறுன். உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்துப் பாயும் கருத்தோடு ஒன்றிய வசனத்தை இவ்வுதாரணங்களால் ஒருவாறு தெளியலாம். வளரும் தமிழின் உரை நயம் இவ்வாறு விளைதல் வேண்டும்.

ஆனல், 'உள்ளம்' 'கருத்து' என்ற அளவில் அவற்றின் பாகுபாடுகளை யெல்லாம் முற்றக் கூறியதாகாது. உள்ளத்திலே அறிவுப் பகுதியும் (intellect), உணர்ச்சிப் பகுதியும் (emotion) உண்டு. இவற்றைத் தனித்தனியே விவரித்தல் அவசியம். எழுத்தாளனது அறிவு பலதிறப்பட்டதாய் இருக்கும். பலதிறப்பட்ட இவ் அறிவின் நுட்பங்களுக்கேற்றபடி கருத்து நுட்பமும் இருக்கும். இக் கருத்து

நுட்பங்களுக்கெல்லாம் இடம் தந்து உரை நடை அமைதல் வேண்டும். வாக்கியத்தின் அமைப்பு சிறிதளவு மாறினாலும், பொருள் மாறிவிடும்; அறிவின் நுட்பமும் கருத்தின் நுட்பமும் புலப்படமாட்டா. உதாரணமாக, 'அவ் வழியே போந்த எந்த உயிரையும் கொல்லாத ஒரு சங்யாசி அக் கொடிய செயலைக் கண்டனர்' என்பதற்கும் 'எந்த உயிரை யும் கொல்லாத ஒரு சங்யாசி அவ்வழியே செல்லுகையில் அக்கொடிய செயலைக் கண்டனர்' என்பதற்கும் உள்ள வேறு பாட்டை எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஆகவே, எழுத்தாளன் தனது கருத்துக்கேற்றபடி சொற்களைக் கிரமத்தில் அமைத்தல் வேண்டும். இம் முறையைப் பின் பற்றி அமைக்கும் வாக்கியங்களினால், உரை நடையின் நயம் வரவர முதிர்வதாகும்.

மேலும் கருத்துக்களுக்குச் சாயைகள் இருக்கின்றன என்பதை எழுத்தாளர்கள் அறிவார்கள். இச் சாயைகளை ஆங்கிலத்தில் 'nuances'என்று கூறுவார்கள். இச்சாயைகளை எல்லாம் நன்கு தெரிந்து, அவை இனிது புலப்படக்கூடிய சொற்களையும் தொடர்களையும் வாக்கியத்தில் அமைத்து, உரை நடையின் நயத்தை எழுத்தாளன் மிகுவிக்க வேண்டும். வளரும் தமிழ் இவ்வகை நயத்தைப் பெரிதும் போற்றுதல் தகும். இதில் மேன்மேலும் முயற்சி யெடுப்ப தனால் தமிழின் நயமே மேம்படுதற்கு வழியுண்டு. இவ்வாறு ஏற்படும் மொழி நயத்தினால், நமது தமிழ் மக்களது உள்ளப்பண்பும் திருந்தியதோர் நயத்தை அடையும்.

இனி, உணர்ச்சிப் பகுதியை எடுத்துக்கொள்வோம். உணர்ச்சி வகைகள் எண்ணிறந்தன. உவகை, வெகுளி, அச்சம் என்பன முதலாக இலக்கண நூலார் கூறுவன வற்றில் இவை அடங்கிவிடமாட்டா. உணர்ச்சி பேதங் களுக்கும் அதன் நுட்பங்களுக்கும் அதன் வேகங்களுக்கும்

தக்கபடி வாக்கியங்கள் அமைதல் வேண்டும். இவ்வமைப்பினாலும் உரை நடையின் நயம் சிறந்து விளங்கும். வளரும் தமிழில் இந் நயம் சிறப்பாகக் கையாளுதற்கு உரியது.

நாம் சாதாரணமாகப் பேசும்போது சொல்லாலும் குரலாலும் செயலாலும் கருத்து நுட்பங்களையும் உணர்ச்சி நுட்பங்களையும் நன்றாகப் புலப்படுத்தி விடுகிறோம். வசன நூல்களில் இவ்வகையான உதவிகள் இல்லை. சொற்களையும் தொடர்களையும் வாக்கிய அமைப்புக்களையும் மட்டுமே நாம் பயன்படுத்துதல் கூடும். இவைகளைத் தக்க முறையில், முற் கூறிய நுட்பங்கள் புலப்படும் வகையில், பயன்படுத்த வேண்டுவது உரை நடையின் முக்கிய கடமையாகும்.

கடைசியாக, எழுத்து ஒரு கலை. எழுத்தாளன் ஒரு கலைஞன். அவன் எழுதுவனவற்றில் கலை நயம் காணப்படுதல் வேண்டும். கலை நயத்தின் உயிர்நிலை அழகுணர்ச்சி. சொல்லழகு, ஓசையழகு, அவயவ அழகு, ஒற்றுமையழகு, அழகினால் ஏற்படும் இன்பச் சுவை: இவை அனைத்தும் அவன் எழுத்துக்களில் பிரதிபலித்தல் வேண்டும். இக் கலையழகோடு விளங்கும் உரைநயந்தான் எக்காலத்தும் மேம்பட்டதாக நின்று நிலவும். வளரும் தமிழில் இது முக்கியமான ஓர் அம்சமென்று கூறவும் வேண்டுமா ?

மேற்கூறிய உரை நயங்களெல்லாம் நமது வளரும் தமிழில் இடம்பெற வேண்டுமானால், அதற்கு இன்றியமையாத ஒரு நியதி உண்டு. அந் நியதி யாது என்றால், உரைநடை பேச்சு-வழக்கு முறையைப் பின்பற்றுதலேயாகும். அப்பொழுதுதான் அது உயிராற்றல் பெற்று இயங்க வல்லதாகும். நமது முன்னோர்கள் கையாண்ட முறை இதுவே. இதை நாம் மறந்துவிடலாகாது. உலக மகா கவிகளில் ஒருவனாகிய கம்பன் இம்முறையைத்தான்

பின்பற்றியுள்ளான். அவனது செய்யுட்களின் கதி பேச்சு-வழக்கோடு ஒத்து இயங்குகிறது. ஆதலால் தான் அவனது பேரிலக்கியம் தூண்டாத மணிவிளக்காய் என்றும் இலங்கிக் கொண்டிருக்க வல்லதாகிறது. பேச்சு-வழக்குத் தவிர்க்க முடியாதது. அதைத் தவிர்த்துவிட்டு, தமிழ் செல்லுதல் கூடாது.

பேச்சு வழக்கு முறை என்பதனுல் பேசும் ஒரே சாயலில் மட்டுந்தான் உரைநடை அமையவேண்டும் என்பது கருத்தல்ல. இடம், பொருள், நோக்கம் முதலியனபற்றி உரைநடை வேறுபடும்.

மேலே கூறிய நியதிகளை உறுதியாய்க் கைக்கொண்டே வளரும் தமிழ் இனி வளரவேண்டும்.

11

# தமிழ்ப் பாட்டும் இசையும்

தருக்க நெறிப்படி, அதாவது காரணகாரியத் தொடர் போடு பொருள் முழுதும் வெளியிடுவது வசனம். காரண காரியத் தொடர்பை இரண்டாவதாகக் கொண்டு, குறிப் பாற்றலாலும் ஓசையின் நயத்தாலும் பொருளை உணர்த்து வது பாட்டு. இது வசனத்திற்கும் பாட்டிற்குமுள்ள வேறுபாடுகளில் மிக முக்கியமானது. பிறிதொரு வேறு பாடும் உண்டு. பாட்டுக்களைப் பாடினால்தான் அவற்றி னுடைய சுவையும் பொருளின் சிறப்பும் நம்மால் அறிய முடியும். பாடாமல் போனால் இவை இரண்டும் விளங்க மாட்டா.

பாடுவதற்கு இசை இன்றியமையாதது. இவ் இசை தமிழ்ப் பாட்டுடன் கலந்துவந்த வரலாற்றை நாம் அறிந்து கொள்ளுதல் நலம். இதற்குத் தமிழ்ப்பாட்டு வடிவங்களின் வரலாறு கூர்ந்து உணரத்தக்கது. முதல் முதலில் அகவல் என்ற பாவினமே தோன்றியதாகும். சங்கச் செய்யுட்களில் பெரும்பாலன இவ்வகைப் பாவினத்தாலே இயன்றவை. இப்பாவினத்திற்குத் தனித்து உரிய ஓசை நயம் உண்டு. ஆனால் இசையோடு பாடுதற்கு இப்பாவினம் தக்கதன்று. அடிகளுக்கு வரையறை யில்லாமை இதற்கு முக்கிய கார ணமாகும். சொல்லின் இனிமையாலும், சொல் தொடர்பு களின் நயத்தினாலும், அடிகளின் ஒத்திசைப்பினாலும் (rhythm) பொருளின் நயத்தாலுமே இவ்வகைச் செய்யுட் கள் சிறந்து விளங்கின. இதற்கு உதாரணம்:

*பாரி பாரி என்றுபல ஏத்தி*
*ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர் ;*
*பாரி ஒருவனும் அல்லன் ;*
*மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே.* (புறம். 107)

அகவலுக்குப் பின்னர்த் தோன்றியது வெண்பா என்று கொள்ளலாம். இது பெரும்பாலும் நான்கு அடி உடையது. இதற்கு உரியது செப்பலோசை. இவ் ஓசையோடு தளைக்குரிய நியமங்களும் சேர்ந்து, இவ்வகைச் செய்யுட்கள் இயலுகின்றன. இவற்றை இசையோடு சேர்த்துப் பாடுதற்குப் பெரிதும் ஏற்புடைமை உண்டு.

*என்னை உரையல் என் பேர் உரையல் ஊர் உரையல்*
*அன்னையும் இன்னள் எனஉரையல்-பின்னையும்*
*தண்படா யானைத் தமிழ்நர் பெருமாற்குஎன்*
*கண்படா வாறே உரை.* (புறத்திரட்டு, 1540)

இதனைப் பாடி நோக்குக.

வெண்பாவின்பின் வந்தது கலிப்பாவின் ஒரு பகுப்பாகிய தாழிசை. இது பாடுதற்கெனவே அமைந்தது என்று கூறலாம். தாழிசை என்ற பெயரே இதனை விளக்குகிறது. கலிப்பாவிற்குரிய 'முரற்கை' (தொல். பொருள். 382) என்ற பெயரும் இதனையே வலியுறுத்தும். முரற்கை என்பது ஒலித்தல் என்று பொருள்படும். 'இசை முரலுதல்' என்றல் முற்காலத்து மரபு.

*பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை*
*மலையுளே பிறப்பினும் மலைக்குஅவை தாம் என் செய்யும்?*
*நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.*

*சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை*
*நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும் ?*
*தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.*

*ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை*
*யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும் ?*
*சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.* (கலி. 9)

செய்யுளின் அமைப்பே பாடுதற்கு ஒத்ததாக மேற்கூறிய அகவலொழிந்த ஏனையவற்றில் காணப்படுகிறது. கால அடைவில் இசைக்கலையானது மிகவும் வளம்பெறலாயிற்று. அங்ஙிலையில் பாடல்களிற் சிலவற்றிற்கு இசை ஊட்டப்பெற்றது; பரிபாடல் இதற்கு உதாரணம். இசைக்கு எனவே இப்பாடல்கள் இயற்றப் பெற்றன. தேவாரம் முதலிய திருப்பாட்டுக்கள் அனைத்தும் இவ்வாறு பண்களுக்கு எனப் பாடப் பெற்றனவே. பிற செய்யுள் வகைகளும் கூட இசையோடு இனிமையாகப் பாடுதற்கு ஒத்தனவாக இருக்கவேண்டும் என்று ஆசிரியர்கள் கொண்டனர். இதன் விளைவாக ஆசிரியவிருத்தம் முதலிய செய்யுள் வகைகள் தமிழாசிரியர்களால் கையாளப்பட்டன. சிந்தாமணி முதலிய காவியங்களின் விருத்தங்கள் இதற்குச் சான்று. தாழிசையும், பாடுதற்கு அமைந்த தன்மை பற்றியே, தனிப்பாட்ட நூலுக்குரிய யாப்பாகக் கொள்ளப்பட்டது. கலிங்கத்துப் பரணி இதற்கு எடுத்துக் காட்டு.

*சுரிகுழல் அசைவுற அசைவுறத்*
*துயில்எழு மயில்என மயில்என*
*பரிபுர ஒலிஎழ ஒலிஎழப்*
*பனிமொழி யவர்கடை திறமினோ.*
*முருகில் சிவந்த கழுநீரும்*
*முதிரா இளைஞர் ஆருயிரும்*
*திருகிச் செருகும் குழல்மடவீர்*
*செம்பொற் கபாடம் திறமினோ.* (கடைதிறப்பு 3, 10)

இங்ஙனமே குறள்வெண் செந்துறையும் இசையோடு பாடுதற்கு ஏற்றதாக ஆசிரியர் சுந்தரம் பிள்ளையால் சிவகாமி சரித்திரத்தில் கொள்ளப்பட்டது.

*இந்திர நற் சாலவித்தை எதுவோ ஒன்றிழைக்க*
*இட்டதிரை எனத்திசைகள் எட்டும் இருள்விரிய*
*அந்தரத்தே கண்சிமிட்டிச் சுந்தர தாரகைகள்*
*அரிய ரகசியம் தமக்குள் அறைந்து நகைபுரிய ;*

என்புருகப் பிணைந்த அன்றில் இணை சிறிது பிரிய
ஏங்கி யுயிர் விடுப்பவர்போல் இடையிடையே கூவ,
அன்புநிலை யார் அறிவர் என்பன போல் மரங்கள்
அலர் மலர்க் கண்ணீர் அருவி அகம் உடைந்து தூவ.
(சிவகாமி. 7, 8)

சொல்லின் இனிமைக்கும் இசையின் இனிமைக்கும் சிறந்த எடுத்துக் காட்டாக இருப்பது சூளாமணி.

பொன்னே! நன் மணிக்கொம்பே! பூமிமேல்
ஆரணங்கே! போற்றி போற்றி;
அன்னே! எம் அரசகுலத் தவிர்விளக்கே!
ஆரமிர்தே! போற்றி; உன்றன்
மின்னேர்நுண் ணிடைநோமால்; மென்மலர்மேல்
மென்மெலவே ஒதுங்காய் என்று
மன்னேர்செய் அயில்நெடுங்கண் மங்கைமார்
போற்றிசைப்ப மாடம் புக்காள். (சுயம்வர. 245)

இசையின் இனிமைக்கும், செய்யுளின் இனிமைக்கும், பொருளின் இனிமைக்கும், பேரெல்லையாக உள்ளது கம்ப ராமாயணம். அதிலே உள்ள விருத்தங்கள் செம்பாக நடையிற்சென்று தமிழ் மக்களுடைய பேச்சில் இயற்கையாயுள்ள ஒத்திசையோடு (rhythm) அமைந்திருக்கின்றன. அக்காலத்துப் பெரும்பான்மை மக்கள் வழங்கிய சொற்கள் இவ்விருத்தங்களில் மிகுதியாகக் காணலாம். தமிழ் கற்ற பெரும் புலவர்களேயன்றி, சாதாரண மக்களும் ஓதியுணர்ந்து இன்புறவேண்டும் என்பது கம்பர் கருத்து. ஆகவே அதற்கேற்ற பல முறைகளும் கையாளப் பட்டுள்ளன.

கரங்கள்மீச் சுமந்து செல்லும்
கதிர்மணி முடியன் கல்லும்
மரங்களும் உருக நோக்கும்
காதலான் கருணை வள்ளல்

இரங்கினன் நோக்குந் தோறும்
　　இருநிலத் திறைஞ்சு கின்றான்
வரங்களின் வாரி யன்ன
　　தாளிணை வந்து வீழ்ந்தான்.

அழிந்தது பிறவி என்னும்
　　அகத்து இயல் முகத்தில் காட்ட
வழிந்த கண்ணீரின் மண்ணின்
　　மார்புற வணங்கி னானைப்
பொழிந்ததோர் கருணை தன்னால்
　　புல்லினன் என்று தோன்ற
எழுந்து இனிது இருத்தி என்னா
　　மலர்க்கையால் இருக்கை ஈந்தான்.

(வீடணன். 140, 141)

இங்ஙனமாக, இயலும் இசையும் ஒன்று சேர்ந்து செய்யுளின் நயங்களைக் கனியும்படி செய்தன. பொது மக்களது இலக்கிய நுகர்ச்சிக்குப் பெருங்கருவியாக இசை துணைபுரிந்தது.

கம்பர் ஆன்றோராலும் நன்கு மதிக்கப்பட்ட புலமை மரபில் சிறந்து விளங்கியவர். பிற்காலத்து வந்த பெருங் கவிஞர்களுள் இயலையும் இசையையும் ஒருங்கு கையாண் டவர் இரமலிங்க சுவாமிகள்.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே!
　　காணார்க்கும் கண்டவர்க்கும் கண் அளிக்கும் கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம் அளிக்கும் வரமே!
　　மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே!
　　நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே!
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே!
　　என் அரசே! யான் புகலும் இசையும் அணிந்தருளே.

(vi. அருள் விளக். 39)

கற்றவர்களால் புறக்கணிக்கப்பட்ட பொது மக்கள் உள்ளத்திலேயும் இசையின் உணர்ச்சியால் செய்யுட்கள் தோன்றத் தொடங்கின. சிந்து, கும்மி, பள்ளு, குறவஞ்சி

முதலியன இதற்கு உதாரணங்களாம். இவற்றைப் பாடினாலன்றிச் சுவை பிறக்கமாட்டாது. பொருளுணர்ச்சியும் பாடுதலிலேயே நிரம்பிக் காணப்படும். இவ்வகைச் செய்யுட்களைப் புலவர்கள் கையாளுவதில் அத்துணை விருப்பம் முதலிற் கொள்ள வில்லை என்றுதான் தோன்றுகிறது. நாளடைவிலே அவர்களையுங்கூட இச் செய்யுள்வகை வசப்படுத்திவிட்டது. பிற்காலத்தே சிறந்த கவிஞர்களும் இச் செய்யுட்களை இயற்றுவாராயினர். உதாரணமாக, திரிகூடராசப்பக் கவிராயர்

**தண் அமுதுடன் பிறந்தாய், வெண்ணிலாவே !—அந்தத்**
**தண்ணளியை ஏன்மறந்தாய் ? வெண்ணிலாவே !**
**பெண்ணுடன் பிறந்த துண்டே வெண்ணிலாவே !—என்றன்**
**பெண்மை கண்டும் காயலாமோ ? வெண்ணிலாவே !**

**விண்ணிலே பிறந்ததற்கோ ? வெண்ணிலாவே !—எரு**
**விட்டு நான் எறிந்ததற்கோ ? வெண்ணிலாவே !**
**கண்ணில் விழியாதவர்போல் வெண்ணிலவே !—மெத்தக்**
**காந்தி யாட்டம் ஆடுகிறாய், வெண்ணிலாவே !**

**(குற்றாலக் குறவஞ்சி. 23)**

எனப்பாடுகிறார்.

இசையின் கதியை உணர்த்தும் 'மெட்டு' என்று இக்காலத்தில் சொல்லப்படுவதனை அடிப்படையாகக் கொண்டு, இச் செய்யுள் வகைகள் இயற்றப்பட்டன. முதன் முதலில், இசை நயம் ஒன்றே பள்ளு முதலியவற்றின் ஆசிரியர்களைக் கவர்ந்தது. நாளடைவில் உணர்ச்சியின் வேகத்திற்கும் அளவிற்கும் தக்கபடி அடிகளைச் சுருக்கியும் விரித்தும் அமைப்பதற்குக் கூடும் என்ற தன்மையைக் கவிஞர்கள் கண்டுகொண்டனர். இவ்வகைச் செய்யுட்களை அவற்றிற்கேற்றபடி இயற்றத்தொடங்கினர். இராகம், பாவம், வடிவம் என்ற இம்மூன்றும் கலந்து இச் செய்யுள்வகை அனைவரையும் மோகங்கொள்ளும்படியாகச் செய்தது. கீர்த்தனம் என்று இச் செய்யுள் வகையைக்

கூறுவது பொருந்தாது. கீர்த்தனத்தில் இராகமும் தாளமுமே பிரதானம்; இதன் பொருளை அத்துணை விசேஷமாகக் கீர்த்தனுச்சாரியர்கள் கொள்ளவில்லை. ஆனல் சிந்து முதலியவற்றில் பாவமே அதிமுக்கியமாகும். இராகமும் தாளமும் அதற்குத் துணைபுரியும் அளவில்தான் சிறப்பு எய்தும். இச்செய்யுள் வகையிற் சில, குறிப்பிட்ட ஓர் உணர்ச்சியைச் சாங்கோபாங்கமாக வெளிப்படுத்துவனவாக அமைவனவாயின. இச் செய்யுள் வகைக்குத் தந்தை என்று சொல்லத் தகுந்தவர் சுப்பிரமணிய பாரதியார். இவருடைய தேச பக்தியும், தமிழுணர்ச்சியும், இசையுணர்ச்சியும், பலதிறப்பட்ட கல்வியறிவும் இவரது கவிதைகளுக்கு முன்பு ஒரு காலத்தும் இல்லாத புதிய அழகைக் கொடுத்தன. இவரது கவிகளிலே ஆண்மைத் தத்துவம் நிரம்பியுள்ளது என்று கருதலாம். வலிமை, வீரம், பெருமிதம் என்பனவே ஆண்மைக்குச் சிறப்பாக உரிய நலன்கள். இந்நலன்களோடு பொருந்தியதைப் 'பாரதி–நெறி' என்னலாம்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
    நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
    செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாம்அறி யாமையில்
    அவலம் எய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறம் ஆகுமாம்
    உதய கன்னி உரைப்பது கேட்டிரோ! (புதுமைப். 7)

என்ற பாட்டில் மேற் சொல்லியதன் உண்மையை அறியலாம்.

இங்குக் குறித்த அம்சங்களில் பெரும்பாலன கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கவிதையிலும் காணப்படுகின்றன. ஆனல், இவரது பாடல்களில் பெண்மைத் தத்துவம் நிரம்பியுள்ளது என்று கருதலாம். அடக்கம்,

அமைதி, கருணை, பேதையுள்ளத்தில் எழும் களிப்பு முதலியன இப்பெண்மைக்குச் சிறப்பாக உரிய நலன்கள். இந்நலன்களோடு பொருந்தியதைக் 'கவிமணி—நெறி' என்னலாம்.

*தேமலர்ச் சோலையிலே—வாசம் எழு*
*தென்றல் உலாவையிலே*
*மாமண மங்கையைப் போல்—பெரிதும்*
*மகிழ்ந்துநீ தங்கினையோ ?*

*மாணிக்க மூக்கழகும்—மரகத*
*வர்ண வடிவழகும்*
*காணக்கண் ணாயிரந்தான்—இருப்பினும்*
*கண்டு முடிந்திடுமோ !*

இங்குக் கூறிய இருதிறப்பட்ட நெறிகளிற் செல்லும் செய்யுள் வகைகள் தற்காலத்துத் தமிழ் மறுமலர்ச்சிக்கும் செய்யுள் வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுகின்றன. இந்நெறிகள் செழித்தோங்குக !

# 12

# மறுமலர்ச்சியும் கவிமணியும்

தற்காலத்தில் 'மறுமலர்ச்சி' பொது மக்களுடைய உள்ளத்தை நன்ருகப் பற்றிப் பிடித்துக் கொண்டது. மறுமலர்ச்சியைப் பற்றி ஒருவன் பேசாமற் போனுல், அவனது பேச்சையோ, பிரசங்கத்தையோ ஒருவரும் கேட்க வரமாட்டார்கள். அதைப்பற்றி ஒருவன் எழுதாமற் போனுல், அவன் எழுதியதை ஒருவரும் விரும்பிப் படிக்க மாட்டார்கள். ஒருவரும் படியாமற் போனுல் போகட்டும்: அவனை ஓர் எழுத்தாளன் என்றேனும் சொல்வார்களா? அப்படியும் ஒருவரும் சொல்லமாட்டார்கள். அதுவுமன்றி அவனைப் படித்தவன் என்றுகூட எவரும் நினைக்கமாட்டார்கள். அவன் தற்காலத்துத் தமிழுலகில் வாழ்ந்திருப்பவன் என்றும் ஒருவரேனும் கருத மாட்டார்கள். இவையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். யாரேனும் ஒரு கவிஞனைப் பொது மக்கள் அங்கீகரிக்க வேண்டுமென்ருல், அவனை மறுமலர்ச்சிக் கவிஞன் என்ருே அல்லது புரட்சிக் கவிஞன் என்ருே சொல்லியாக வேண்டும். இல்லாமற் போனுல் அவனை மதிப்பாரே கிடையாது.

பாரதியார் ஒரு மறுமலர்ச்சிக் கவிஞர் என்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். தமிழின் மறுமலர்ச்சிக்கு அவரே காரணம் என்று தைரியமாய்ச் சொல்லலாம். ஒரு நாட்டிலுள்ள மக்களிற் பெரும்பாலாரை இயக்கி வந்த ஓர் ஆழ்ந்த உணர்ச்சி அவர்களைப் பலவாருன செயல்களைச் செய்யும்படி தூண்டி, நாடு முழுவதும் ஓர் பரபரப்பு உண்

டாகும்படி ஊக்கிய காலத்திலே, அவ்வுணர்ச்சியின் விளைவாய் மீண்டும் அவ்வுணர்ச்சிக்கு உரமாவனவாய் அமைந்த கவிதைகளை மறுமலர்ச்சிக் கவிதை என்று சொல்லுவதற்கு என்ன தடை? அக்கவிதைகளைக் கொட்டிச் சொரிந்து மக்கள் உள்ளத்தில் அனலைஎழுப்பிப் பொங்கியெழச் செய்த கவிஞனை மறுமலர்ச்சிக் கவிஞன் என்று சொல்வதில் என்ன ஐயம்?

ஆனால், இது மட்டும் தானா அதன் பொருள்? அப்படியென்றால் உணர்ச்சி வேகமுள்ள ஒவ்வொரு கவிஞனையும் மறுமலர்ச்சிக் கவிஞன் என்று கூறிவிடலாமே?

மறுமலர்ச்சி என்று ஆர்வத்துடன் கூறுகிறோம். இதன் பொருள் என்ன? இதன் பொருளைத் தெரிந்து கொள்ள நாம் ஆங்கிலத்திற்குச் செல்ல வேண்டும். அம்மொழியிலே 'ரிநேஸான்ஸ்' (Renaissance) என்ற ஒரு பிரெஞ்சுப் பதத்தை ஆங்கில—இலக்கிய நிபுணர்கள் வழங்குகிறார்கள். எவ்விதச் சந்தர்ப்பத்தில் என்றால் சொல்லுகிறேன்:

கி. பி. 16-ம் நூற்றாண்டுக்கு முன், சில நூற்றாண்டுகளாக, ஐரோப்பியர் வாழ்வு இருள் அடைந்து கிடந்தது. சமயவாதிகளுடைய வியவகாரங்களும், விவாதங்களும், தர்க்க படாடோபங்களும் மக்களைக் கொடுமையாய் ஆண்டு வந்தன. எல்லாவற்றையும் சமயக் கோட்பாடுகளை வைத்துத்தான் மக்கள் அளந்து பார்த்தார்கள். சமய சாஸ்திரங்களுக்கு வியாக்கியானங்களும் வியாக்கியானத்திற்கு வியாக்கியானங்களும், கண்டனங்களும், கண்டனகண்டனங்களும் எழுதுவதிலேயே அறிஞர்கள் பொழுது போக்கிக்கொண்டிருந்தார்கள். தமது அறிவையும் கல்வியையும் இவற்றின் பொருட்டே செலவு செய்து வந்தனர். சமய நூல்களும் சமயாச்சாரியர்களும் கூறியவையே உண்மை என்றும்

இவ்வுண்மைகளுக்கு மாருக, புறம்பாக, ஓர் உண்மையும் இருக்கமுடியா தென்றும் கருதினர்கள். அறிவைப் பயன் படுத்தி, புதிய உண்மைகளைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்ய வும் இல்லை; புதிய உண்மைகளைக் கண்டுபிடிப்பதும் உலகத் தார்க்கு வெளியிடுவதும் பாவச் செயல் என்றே கொண்டி ருந்தார்கள். அக்காலத்தில் கற்றவர்கள் கூர்மையான அறிவுள்ளவர்களாய்த் தான் இருந்தார்கள். அறிவிலே தேவாம்சர்கள்போல இருந்தாலும், சிறு குழந்தைகள் பொம்மைகளை வைத்து விளையாடுவதுபோல விளையாடி வந்தார்கள். உலகத்தை ஆண்டு வரும் பௌதிகவிதிகளைக் குறித்து இவர்களுக்கு ஒன்றும் தெரியாது; ஆனல் தெய் வத்தின் இயல்பு என்ன? தேவதூதர்கள் எவ்வளவு வேக மாய்ச் செல்வார்கள்? எதன் மேல் ஏறிச் செல்வார்கள் என் றெல்லாம் மிக நுட்பமாகத் தர்க்கம் பண்ணி வந்தார்கள். புதிய அறிவுத்துறைகளில் புகுந்து உண்மைகளைக் கண்டு பிடிக்க இவர்களுக்கு ஆசைதான். ஆனல், சமயக் கோட் பாடுகளால் இவர்கள் வெளியேற முடியாமற் போய் விட்டது.

இவ்வாறு அஞ்ஞான இருளில் உழன்று கொண்டி ருக்கும் பொழுது, இவர்களுக்குக் கைகொடுத்து வெளிச் சத்தில் அழைத்து வருவதற்கு, சில விஞ்ஞான சாஸ்திரங் களும் புதிய அறிவுகளும் அராபியர்கள் மூலமாகச் சிறிது சிறிதாக, துளித்துளியாக, இவர்களுக்குக் கிடைத்தன. இவற்ருல் இயற்கையுலகைக் காணுவதற்குக் கண் திறந் தது. கிரேக்க இலக்கியங்களும் இப்போது வெளிவர லாயின. அச்சு யந்திரம் அமைக்கப்பட்டுப் பிரசாரத்திற்கு வந்தபடியால், இந்த இலக்கியங்களும் மற்றை நூல்களும் வெகுவாய்ப் பரந்து பெருகலாயின. சமய பந்தத்திஞல் சிறையிடப்படாத புதிய அறிவும் புதிய நோக்கங்களும் தலைப்படலாயின. கிரேக்கக் கவிஞர்கள் நிருபித்த புதிய

உலகமும் இவர்கள் கண்முன் தோன்றிற்று. கிரேக்க தத்துவ ஞானிகளின் புதிய அறிவுலகமும் இவர்களுக்கு எதிர்ப்பட்டது. ஸர்வகலாசாலைகள் பல நகரங்களிலும் நிருமிக்கப்பட்டன. அந்தகாரம் தெளியலாயிற்று. மனிதன் விழித்தான்; தன்னையும் இயற்கை யுலகையும் கண்டு கொண்டான். உண்மைதான் பிரமாணமே யல்லாமல், சமய சாஸ்திரங்களல்ல என்பதை உணர்ந்தான். இந்த நிலைகளுக்கு ஏற்க, மாலுமிகள் துணிந்து நீண்டகாலம் கப்பல் யாத்திரை செய்து புதுநிலப் பகுதிகளைக் கண்டு பிடித்தனர். புதிய உணர்ச்சிகள் மக்கள் இதயத்தில் தோன்றின. ஒரு புதிய யுகமும் தோன்றிவிட்டது. இதைத்தான் 'ரினேஸான்ஸ்' என்று மேல்-நாட்டு அறிஞர்கள் கூறுவது. இச் சொல்லின் பொருள் மறுபிறப்பு என்பது.

இந்தப் பிரெஞ்சுப் பதத்தைத் தமிழில் 'மறு மலர்ச்சி' என்று மொழி பெயர்த்திருக்கிறது. அழகான பெயர். மொழிபெயர்த்தவர் இன்னாரென்று தெரியவில்லை. யாராயிருந்தாலும், அவர் கவித்துவ உணர்ச்சியுடையவர். சுமார் 1920-ல் இப்பெயரை எனது நண்பர் பி. ஸ்ரீ. ஆச்சார்யா வழங்கியுள்ளார் என்று தெரிகிறது. பெரும்பாலும் இப் பெயரை அமைத்தவர் காலஞ்சென்ற தேசபக்தர் வ. வெ. சு. அய்யராக இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

மேலே குறித்த இருள்-நிலைமைக்கும் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னால் நமது தமிழ் நாடு இருந்த நிலைமைக்கும் எவ்வளவு ஒற்றுமை! இங்கேயும் சமயப்பூசல்களும் தர்க்கப்பூசல்களும் நிரம்பியிருந்தன. சைவ வைஷ்ணவப் போர்களும், வைதிக கிறிஸ்தவப் போர்களும் நிகழ்ந்தவண்ணமாயிருந்தன. அத்வைத சண்ட மாருதங்களும், தர்க்க குடாரங்களும், ஆபாச நிரசனங்களும், அருட்பா மருட்பாப்

போர்களும் அறிவைச் சூறையாடிவந்தன. சிவஞான முனிவர் முதலிய பேரறிஞர்கள் பலர் இவ்வித விநோத விளையாட்டுக்கள் புரிந்தனர்; வயிரக் குப்பாயங்கள் அமைத்தனர்; கண்டன கண்டனங்கள் இயற்றினர்; சூறுவளிகள் கிளம்பின. நாடெங்கும் வாதீபசிங்கங்களும், பரசமயகோளரிகளும், தர்க்கப் புலிகளுமாய் நிரம்பி விட்டன. இறைவன் இயல்பும், உயிர்களின் இயல்பும், பூதங்களின் இயல்பும் துருவித் துருவி ஆராயப்பட்டன. முத்தியின் இயல்பு நீரும் உப்பும் கலந்ததுபோலவா அல்லது நீரும் பாலும் கலந்தது போலவா என்பது பற்றிப் பெரும் போர்கள் விளைந்தன. அறிவு விஷயங்கள் எல்லா வற்றிலும் சமயந்தான் கொடுங்கோலாட்சி புரிந்து வந்தது. இவ் ஆட்சிக்குத் துணைபுரிந்து வந்தவை வடமொழித் தருக்க சாஸ்திரமும் தத்துவ சாஸ்திரங்களும். குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டது போல, அறிவு வெளிச்சத்தை நாடிச்சென்று அஞ்ஞான இருளில் மக்கள் தத்தளித்து வந்தனர்.

**ஆறு கோடி மாயா சத்திகள்**
**வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின;**
**ஆத்த மானர் அயலவர் கூடி**
**நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்;**
**விரதமே பரமாக வேதியரும்**
**சரத மாகவே சாத்திரங் காட்டினர்;**
**சமய வாதிகள் தத்தம் மதங்களே**
**அமைவதாக அரற்றி மலைந்தனர்;**
**மிண்டிய மாயா வாதம் என்னும்**
**சண்ட மாருதம் சுழித்தடித்து ஆர்த்து**
**உலோகா யதம்எனும் ஒண்திறற் பாம்பின்**
**கலா பேதத்த கடுவிடம் எய்தி**
**அதிற்பெரு மாயை எனைப்பல சூழவும்**

**(போற்றித். 44-57)**

என்று மாணிக்கவாசகர் கதறி அரற்றுவது மேலே நான்

கூறியது உண்மையெனக் காட்டும். வீணை குதர்க்கங் களிலே காலங்கழிந்தது.

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறிவில் லாத என்
கன்மத்தை என்சொல்வேன் மதியை என் சொல்லுவேன்
கைவல்ய ஞான நீதி
நல்லோர் உரைக்கிலோ கர்ம முக்கியமென்று
நாட்டுவேன் கர்மம் ஒருவன்
நாட்டினுலோ பழைய ஞான முக்கியமென்று
நவிலுவேன் வட மொழியிலே
வல்லான் ஒருத்தன் வரவும் த்ராவிடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்ல தமிழறிஞர் வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்தி தருமோ
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

என்று தாயுமானர் கூறியது அவர் காலத்திலே நிகழ்ந்து வந்த தர்க்க விவகாரங்களை மிக நன்முக எடுத்துக் காட்டு கிறது. இது போன்றுள்ள தர்க்கங்கள் என்றேனும் உண் மைகளை அறிய இடந்தருமா?

இங்ஙனம் இருக்க, ஐரோப்பியர்கள் நம் நாட்டுக்கு வரத்தொடங்கினுர்கள். அவர்கள் கூட்டுறவு வரவர நெருக் கமாகிக் கொண்டே வந்தது. ஒரு புதிய நாகரிகம் நம்மவர் களைத் தாக்கத் தொடங்கிற்று. விஞ்ஞான அறிவு சிறிது சிறிதாகப் பரவலாயிற்று. ஒரு புதிய கலைப் பண்பாடும் நம்மவர்கள் மனத்தைக் கவர்ந்தது. அந்தகாரத்திலிருந்து மக்கள் பிழைத்து வெளியேற முயன்றனர். அச்சு எந்திரங் களும் நாட்டில் ஸ்தாபிக்கப் பெற்றன. வெகுகாலமாகப் புதையுண்டுகிடந்த நமது பண்டை இலக்கியங்கள் அச்சில் வெளிவந்து பலர்க்கும் கிடைத்தன. சி. வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ. வே. சாமிநாதையர் முதலியோர்

பண்டை இலக்கியங்களை வெளியிட்டனர். கனகசபைப் பிள்ளை, பேராசிரியர் சுந்தரம்பிள்ளை: இருவரும் முறையே பண்டைத் தமிழர் நாகரிகச் சிறப்பையும், பண்டை இலக்கிய நயங்களையும் அறிவுறுத்தினர். இவர் அனைவரும் மறுமலர்ச்சியின் தூதுவர்களாய் அமைந்தனர். இங்ஙனமே வடமொழியிலுள்ள பல புராதன இலக்கியங்களும் மற்றச் சிறந்த நூல்களும் அச்சின் வாயிலாக வெளிவந்து கோல்புருக், மாக்ஸ்முல்லர் முதலிய அறிஞர்களால் பாராட்டப் பெற்று, மறுமலர்ச்சிக்குத் துணைபுரிந்தன. வடமொழியானது உலக மொழிகள் பலவற்றோடும் தொடர்புடையதென்பதும், மொழி நூற்பயிற்சிக்கு அவ்வடமொழி யறிவு அவசியம் என்பதும் உணரப்பட்டன. சமயச் சிறைச்சாலையினின்றும் வெளிவந்து. சுதந்திரத்தைச் சுவாசித்து மக்கள் புதிய அறிவுலகத்திற் புகும் காலம்வந்து சேர்ந்தது. ஆங்கில-இலக்கிய அறிவும், மேல் நாட்டு விஞ்ஞான அறிவும் இப்புத்துணர்ச்சியை நமக்கு அளித்தன. ஆங்கில மொழியில் அறிவு நூல்கள் கற்று மேம்பாடு அடையும்படி நமது நாட்டிலும் இக்காலத்தில் ஸர்வகலாசாலைகள் ஏற்பட்டன. நாலுபக்கங்களிலிருந்தும் தமிழ் மக்கள் வந்து இப் புதிய கல்வியையும் அறிவையும் பெறுதற்குக் கலாசாலைகளில் சேர்ந்தனர். கல்வி பெருகிற்று. ஒரு புதுயுகம் நமது நாட்டிலும் ஆரம்பமாயிற்று. இங்கே கூறிய நிகழ்ச்சிகள் மட்டும் தனித்திருந்தாலும் இங்நிலையை 'ரினைஸான்ஸ்' என்று சொல்லுதற்குத் தடையில்லை. ஆனால், இதற்கு மேலும் ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. அந்நிலைமை யாது?

வாணிகத்தின் பொருட்டு வந்த ஆங்கிலேயர்கள் முடிவில் இங்கே இந்தியாவில் ராஜ்யத்தையே ஸ்தாபித்துவிட்டார்கள். நமது தமிழ் நாடும் இந்த ராஜ்யத்தின் பகுதியாய் அடங்கிற்று. நாமும் ஆங்கிலேயர்களுடைய சேவ

கர்களாகி விட்டோம்; அடிமைகளும் ஆகிவிட்டோம். அடிமைத்தனத்தினின்றும் இனி என்றும் நமக்கு மீட்சியில்லை என்ற ஒரு நிலையும் வந்துவிட்டது! மீட்சி வேண்டாம் என்று கூடச் சிலர் சொல்லத் தொடங்கிவிட்டனர். தன்னலத்திற்காகத் தன் மதிப்பு இழந்து, அடிமை மோகத்தில் ஆழ்ந்து, நீண்ட துயில்கொள்ளத் தொடங்கிவிட்டோம். அப்பொழுது தமிழ் நாட்டில் இரண்டு தியாகிகள் தோன்றினார்கள். ஒருவர் வ. உ. சிதம்பரம்பிள்ளை; மற்றொருவர் பாரதி. வ. உ. சி. தமது தீரச் செயல்களினால் தமிழ் மக்களின் உள்ளத்தில் தேசீய உணர்ச்சியை விதைத்தனர். பாரதியார் என்றுமுள தென் தமிழ்ச் சொற்களால் தேசீய உணர்ச்சியை மூட்டி அது நமது உள்ளத்திலே கொழுந்து விட்டு எரியும்படி செய்தனர். சுதந்திரதாகம் அடங்காத தாகமாயிற்று. அறிவுத் துறைகளில் கீழ்ப்பட்டு பௌராணிக இருளில் விழிகண் குருடர்களாய் நாம் வாழ்ந்து வந்ததனால் அல்லவா நாம் அடிமையாக நேர்ந்தது என்று பாரதியார் கருதினார்; நெஞ்சம் புழுங்கிக் குமுறிக் கதறினார். அவர் இரத்தக் கண்ணீர் சிந்தினார். தமிழ்—மக்கள் உள்ளத்தைத் தொட்டுவிட்டார். ஆங்கில துரைத்தனத்தார் கையாண்ட அடக்குமுறைச் சட்டம் தேசீய உணர்ச்சியை வளர்த்தது. புத்தறிவின் தாகத்தாலும் தேச பக்தியாலும் கனிந்தன பாரதியார் பாட்டுக்கள். பழைய யுகத்தைப் போக்கிப் புது யுகத்தை வரச்சொல்லும் இவருடைய வீரத்திருமொழிகளைக் கேளுங்கள் :

**இன்று பாரதத்திடை நாய் போல**
**ஏற்ற மின்றி வாழுவாய் போ, போ, போ**
**நன்று கூறில் அஞ்சுவாய் போ, போ, போ**
**நாணி லாது கெஞ்சுவாய் போ, போ, போ**
**சென்று போன பொய்யெலாம் மெய்யாகச்**
**சிந்தை கொண்டு போற்றுவாய் போ, போ, போ**

**வென்று நிற்க மெய்யெலாம் பொய்யாக**
**விழி மயங்கி நோக்குவாய் — போ, போ, போ**

**இளைய பாரதத்தினாய் — வா, வா, வா**
**எதிரிலா வலத்தினாய் — வா, வா, வா**
**ஒளியிழந்த நாட்டிலே நின்றேறும்**
**உதய ஞாயி றொப்பவே — வா, வா, வா**
**களையிழந்த நாட்டிலே முன்போலே**
**கலை சிறக்க வந்தனை — வா, வா, வா**
**விளையும் மாண்பு யாவையும் பார்த்தன் போல்**
**விழியினால் விளக்குவாய் — வா, வா, வா**

இவரை மறுமலர்ச்சிக் கவிஞர் என்று சொல்லுவது எவ்வளவு பொருத்தம்!

ஆனால், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் வாழ்க்கையோ பாரதியின் வாழ்க்கைக்கு முற்றும் மாறுபட்டது. அவர் சுதேச மன்னர் நாடாகிய திருவிதாங்கூரில் உள்ளவர். இந்தியன் என்ற அளவிலே அவருக்குத் தேசபக்தி உண்டே தவிர, இப்பக்தி அவர் உள்ளத்தில் கனன்று பொங்கி எழுவதற்கு நியாயமே இல்லை. ஆங்கில அரசினர் பாரதியை விசேஷப் பாதுகாப்பில் வைத்திருப்பதற்குக் காரணம் இருந்தது. தனிப்பட்ட இந்த அருளுக்குக் கவிமணி பாத்திரரானதில்லை. மேலும் இருபெருங் கவிஞர்களது இயல்புகளும் முற்றிலும் வேறுபட்டவை. பாரதியினிடத்திலே வேகம், கோபம், அசாதாரண இரக்கம், அசாதாரண பக்தி, தன்மறதி, பகற்கனவு காணல், ஆவேசம் முதலிய இயல்புகளெல்லாம் இருந்தன. ஆனால், கவிமணியிடத்திலே அமைதி, பொறுமை, அடக்கம், இனிய மனப்பண்பு, இரக்கம், உபகார சிந்தை, முறைமையிலே பிரியம்: நினைவாற்றல் முதலியவற்றைக் காணலாம். நீண்ட காலமாகப் பெண்கள் கலாசாலையில் ஆசிரியரா யிருந்தமையால் இக்குணங்கள் சிறந்து விளங்குவதற்கும் இடமிருந்தது. ஆவேசம், பரபரப்பு முதலியன சிறிதளவும் கிடையாது.

கவிமணியோடு 40 ஆண்டுகளாகப் பழகியுள்ளேன்; என்ருலும் ஒரு முறையாவது யாரோடும் அவர் கோபங் கொண்டதை நான் பார்த்ததேயில்லை.

இவ்வாறு இயற்கையிலும் வாழ்க்கை முறையிலும் இருவருக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. மறுமலர்ச்சிக் கவிஞன் என்று பாரதியைக் கூறினுல், கவிமணிக்கு அந்தப் பதவி இருக்கமுடியாது என்றுதான் சொல்லத் தோன்றும். ஆனுல், பாரதியிடம் சிறந்து விளங்கும் புதிய அறிவுத் தாகமும் சுதந்திர தாகமும் தவிர, மறுமலர்ச்சியில் (Renaissance) வேருேர் அம்சம் உண்டு. இந்த அம்சத்தில் கவிமணியின் நிலை யாதென்று நோக்குவோம்.

இலக்கிய அறிஞர் கண்ட இந்த அம்சத்திற்கு 'ஹியூமனிஸ்ம்' (Humanism) என்று பெயர். இதனை மக்கள் நல-நாட்டம் என்று கூறலாம். ஐரோப்பாவில் 16-ம் நூற்ருண்டுக்கு முன்புள்ள இருட்காலத்தில், கல்வி என்ருல் சமயக் கல்வி ஒன்றைத்தான் குறித்தது. அவ்வாறே கற்ருேர்கள் என்ருல், சமய சாஸ்திரம், புராணம் முதலியவற்றில் வல்லவர்களைத்தான் குறித்தது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்புள்ள கிரேக்க இலக்கியங்களை அச்சின் வாயிலாகப் பெற்று அவற்றை வாசித்த அறிஞர்கள், சமயங்களோடு யாதொரு தொடர்பும் இல்லாதபடி, அவ் இலக்கியங்கள், தத்துவ நூல்கள் முதலியன மக்கள் நலத்தை மட்டும் பேணின என்று கருதினுர்கள். சமயச் சார்புள்ள நூல்களை நீக்கி, அவ்வகைச் சார்பற்ற இலக்கியங்களே மக்கள் நலத்தை உண்மையிற் பேணுவன என்றும், அவையே வேண்டத்தக்கன என்றும் இவர்கள் கொண்டார்கள். இங்ஙனமாக, மக்கள்-நலம் நாடும் கொள்கையும் முயற்சியும் 'ஹ்யூமனிஸ்ம்' என்று ஆங்கிலத்தில் போற்றப்பட்டது.

பூர்வத்தில் இவ்வாறு மக்கள் - நலம் பேணும் செயல்களில் ஈடுபட்டவர் புத்தர்பிரான். ‘தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்’ என்று இவர் போற்றப்படுகிறார். பல பிறவிகள் எடுத்து மக்களின் நலத்தைப் பேணினரென்றும் இவர் சரித்திரம் கூறும். இவர் ஆத்மா உண்டென்பதில் நம்பிக்கையற்றவர்; கடவுள் உண்டென்ற கொள்கையிலும் அவ்வாறே. எனவே, இவ்விரண்டும் உண்டென்று கொண்ட வைதிக சமயத்தின் கட்டுப்பாட்டினின்றும் நீங்கியவர். கிரேக்க இலக்கியங்கள் மக்கள் நலம் பேணியமை போல, புத்த ஞாயிறு தோன்றி அவ் அரிய செயலைச் செய்து ஒளிமிகுந்து சிறந்தது. மனிதன் தனக்குரிய கௌரவ ஸ்தானத்தைப் பெற்றான். ‘வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்றதம்மா’ என்று கம்பன் கூறியதுபோல, மனிதன் சமயங்களுக்கெல்லாம் மேற்பட்டவன். கற்பிதங்களாயுள்ள தெய்வங்களுக்கெல்லாம் அவன் மேற்பட்டவனே. இதனை உணர்ந்தே புத்தர் மக்கள் நலத்தைப் பேணுதலே தமது கடமை எனக் கொண்டனர். இதனோடும் நிற்கவில்லை. உயிரினங்களை யெல்லாம் பேணுதலே தமது வாழ்வின் பெருநோக்கம் எனவும் கருதினர்.

புத்தர்பிரான் கொண்ட இக்கருத்து கவிமணியின் இதயத்தைக் கவர்ந்தது. அவரது சரித்திரப் பகுதிகளிற் சிலவற்றை அதியற்புதமான தமிழில் பாடியுள்ளார். இப் பகுதிகளை நாம் படித்து நோக்கினால், கவிமணி எவ்வளவு ஆழமாக இச் சரிதத்தில் ஈடுபட்டுள்ளார் என்பது தெரியும். ஆசிரியரது ஆழ்ந்த உணர்ச்சியும் தமிழின் குழைவும், கவிதையின் அருமைப்பாடும் படிப்போரது உளத்தைக் கனிவிப்பன. இவை மக்கள் நலம் பேணுவது இவரது இயற்கைக் குணமென்பதை விளக்கும். இவரது பிற

கவிதைகளும் இக்குணத்தையே வெளிக் காட்டுகின்றன. மக்கள் நல - நாட்டம் இவரது கவித்துவத்தின் ஜீவநாடி என்று கொள்ளலாம். ஆதலால், இவரை மறுமலர்ச்சிக் கவிஞன் என்று கூறுவது பொருந்துவதேயாம்.

புத்தரைப் பற்றிய பாடற் பகுதிகள் மொழி பெயர்ப்புத் தானே என்று சிலர் கூறுவர். பல உயர்ந்த செய்யுட்கள் ஆங்கிலத்திலிருக்க, இதனைத் தெரிந்து எடுத்துக் கொள்வானேன்? புத்த பகவானது அருட்பாங்கிலே கவிமணி ஈடுபட்டதே காரணம். தாமும் அவ் அருட் கொள்கையைக் கொண்டவர் என்பது காரணம். அன்றியும் இப்பாடல்கள் பெயரளவில்தான் மொழி பெயர்ப்பு. இவற்றை ஒரு நூதன சிருஷ்டி என்றே நாம் கொள்ளுதல் வேண்டும்.

கவிமணியின் மற்றைப் பாடல்களும் இவர் மறுமலர்ச்சிக் கவிஞர் என்பதை வற்புறுத்துகின்றன. 'மருமக்கள் வழி மான்மியம்' என்ற நூல் தமிழுக்கு ஒரு நூதன நெறியைத் தந்துள்ளது; ஓரளவில் இவரைப் புரட்சிக்கவிஞர் என்பதையும் தெரிவிக்கிறது. ஆனால், இந் நூலில் இவர் கைக்கொண்டுள்ள முறை பிரகசன முறையாகும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்குத் தக்கமுறை என்பது சார்ல்ஸ் டிக்கென்ஸ் (Charles Dickens) முதலியோரது 'நாவல்' களினால் விளங்கும். மக்களது சமுதாய நிலையில், அவர்களுடைய துன்பங்கள் கண்டு ஆற்றாது உருகிக் கவிமணி வருந்துவதை இம் மான்மியம் சோகம் நிரம்பிய எளிய பாடல்களால் உணர்த்துகிறது. சிறு குழந்தைகளுக்கு எனக் கவிமணி பாடிய பாடல்களிலும் மறுமலர்ச்சியின் மக்கள் நல-நாட்டமே கமழ்கின்றது. இங்ஙனமாகப் பல படியாலும் இவர் மறுமலர்ச்சிக் கவிஞரே. மறுமலர்ச்சியின் ஓர் அம்சமாகிய மக்கள் நல—நாட்டப் பகுதிக்கு இவரே பிரதிநிதியாவார்.

13

# புதிய இலக்கியமுறை

புதுமை தோன்றுதல் ஒரு புதுமையல்ல. எல்லா இடத்தும், எல்லாக் காலத்தும், எல்லாப் பொருள் பற்றியும், எப்பொழுதும் இது நிகழ்ந்து கொண்டே இருப்பதுதான். பௌதிகப்பிரபஞ்சம் (Physical Worid) மானஸிகப் பிரபஞ்சம் (Mental World) என்பவற்றுள் அடங்கிய எல்லாவற்றிலும் இப்புதுமை நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. சர-அசரங்கள் அனைத்தும் இந்நியதிக்கு உட்பட்டவையே. இப்புதுமையை இயற்கையின் நியதிகளுள் ஒன்றெனச் சொன்னால் அது தவறாகாது. ஆனால், அது சதா நிகழ்ந்து கொண்டிருப்பதால் எப்போது தோன்றியது எனக் காலத்தைக் குறிப்பிட்டுக் கூறமுடியாது. தொடங்கிச் சில காலம் சென்றதற்கப்புறம் தான் பூர்வ நிலையினின்றும் வேறுபாடு வந்துள்ளதெனப் பொதுப்பட அறிகிறோம். இவ் வேறுபாடுகளில் சில அழிந்து போகின்றன. சில அழியாது நின்று புதிய தோற்றங்களுக்கு அடிப்படையாய் அமைந்து விடுகின்றன. எங்கும், எவ்விடத்தும், எல்லாத் துறைகளிலும் ஆட்சிபுரியும் இந்நியதி இலக்கிய விஷயங்களிலும் பொருந்துவதே யாம்.

இலக்கியம் என்பது யாது? கணித நூலை இலக்கியமென்று கூறமாட்டோம். இவ்வாறே வான நூல், இலக்கண நூல் முதலியவற்றையும் இலக்கியமென்று கருதுவாரில்லை. இவை யெல்லாம் மக்களது அறிவை வளர்ப்பதொன்றே நோக்கமாகக் கொண்டவை. இவற்றின் நோக்கம் மக்களுக்கு இன்பம் விளைப்பதன்று. மேலும்,

இவை தனிப்பட்ட சிலர் சிலர்க்கன்றி, பொது மக்களுக்கு ஆவல் (interest) விளைக்கமாட்டா. இந்நோக்கத்தோடு மாத்திரம் இயற்றப்படுவன எல்லாம் இலக்கிய மென்று கொள்ளப்பட மாட்டா. இவற்றிற்கு மாருக, அறிவை வளர்ப்பதோடு பொது மக்களுக்கு ஆவல் விளைத்து அவர்களை இன்புறுத்துப் நோக்கத்தோடு இயற்றியவை இலக்கியமாகும். நேர்பட அறிவூட்டும் நோக்கம் இல்லாதிருக்கலாம்; ஆனால் பொதுப்பட ஆவல் விளைத்தலும் இன்பந் தருதலும் இலக்கியத்திற்கு இன்றிமையாதநோக்கங்களாம். சிலப்பதிகாரத்தை யெடுத்துக் கொள்வோம். இது பொதுவே தமிழ் மக்கள் அனைவர்க்கும் ஆவல் விளைப்பது; அவர்களை இலக்கியச் சுவையாலும் அழகாலும் இன்புறுத்தி வருவது. எனவே, இது ஓர் இலக்கியம் என்பதில் ஒருவர்க்கும் ஐயப்பாடில்லை.

இவ்வகை இயல்புடைய இலக்கியங்களில், சில அரிய கூறுகள், அம்சங்கள், புலப்படும். இவை அறிவின் கூறு ((Intellectual Element)), உணர்ச்சிக் கூறு (Emotion or element of feeling), பாவனைக் கூறு (imagination) என்பன. அறிவின் கூறு, இலக்கியத்தில் வரும் பொருள்பற்றி அதன் ஆசிரியன் பயன்படுத்தும் கருத்துக்களைச் சுட்டுவது. உணர்ச்சிக் கூறு அப் பொருள் ஆசிரியனிடம் தோற்றுவிக்கும் பல்வேறு உணர்ச்சிகளைப் பற்றியது. இவ்வுணர்ச்சிகளைத்தான் அவன் தன் வாசகர்களிடத்தும் உண்டுபண்ண முயலுகிருன். பாவனைக் கூறு இலக்கியத்தில் வரும் விஷயங்களை மனக்கண் முன்னே தத்ரூபமாக நிறுத்துவது, அதாவது, காட்சிப் பொருளாகச் செய்துவிடும் இயல்புடையது. உதாரணமாக, வீடு ஒன்றை ஆசிரியன் கூறக் கருதுகிருன் என்ருல், அவ் வீட்டினைக் கண்முன்னே காண்பது போலவே, அவன் தன் மனக்கண் முன்னேயுங் கண்டு கொள்ளும் மானஸிக வன்மை. இவ்வன்மையால்

வாசகர்களது மனத்திலும் கண்ணிலும் அவ்விஷயங்களைக் காட்சிப்படும்படி செய்துவிடுவான்.

இம் மூன்று வகையான ஆற்றலும் விளங்கும் நூலே இலக்கியம் என்று சிறப்பாகச் சொல்லுதற்குரியது. வேறோர் இயல்பும் அதற்கு வேண்டும். நூலை அமைக்கும் முறையில், விஷயங்களைக் காட்டிலும் அவற்றிற்கு வடிவம் (Form) கொடுப்பது அதி முக்கியமாக விளங்கும் இயல்பே இது. கம்பனும் எழுத்தச்சனும் ஒரே நூற் பொருளைத் தான் கூறுகிறார்கள். கம்பன் கொடுத்துள்ள நாடகத் திறமை நிரம்பியவடிவம் எழுத்தச்சனது இராமாயணத்தில் இல்லை. இதனால் கம்ப இராமாயணம் சிறந்த இலக்கிய மாக விளங்குகிறது.

இங்கே குறித்த கூறுபாடுகளால் சிறப்புற்று விளங் கும் இலக்கியங்கள் பண்டைக் காலந்தொட்டே நமது மொழியில் உள்ளன. ஆனால், புதிய அமைப்புக்களும் அவ் வப்போது தோன்றிக் கொண்டே வந்தன. இப் புதுமை களுள் சில அழிந்து போயின. தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி முதலியன மறைந்து பல நூற்றாண்டுகள் ஆய்விட்டன. வேறு சில புதுமைகள் அழியாது நின்று நூதன இலக்கிய மரபிற்கு அஸ்திவாரமாய் அமைந்திருக் கின்றன. இந்த இலக்கியப் புதிய-அமைப்புக்களின் நெறி முறைகள் மேலெழுந்த வாரியாய் நோக்குவாருக்குத் தெளி வாகப் புலப்படமாட்டா; ஆழ்ந்து சிந்தித்து நோக்கு வார்க்கே புலப்படும். வான மண்டலத்தில் எண்ணத் தொலையாத நட்சத்திரங்கள் யாதோர் ஒழுங்கு முறையும் இன்றிக் காணப்படுகின்றன என்று நமது பொதுமக்கள் நம்புகிறார்கள்.

> அகலிரு விசும்பின் மீனினும்
> பலரே மன்ற இவ் வுலகத் தோரே (குறுந். 44)

எனச் சங்கப் புலவரொருவரும் பாடினர். ஆனால், அவற்

றின் தொகுதிகளும், தரமும், அவை வானத்தில் தோன்றும் ஒழுங்கு முறையும், அவற்றின் கதியும் கூர்ந்து நோக்குவார்க்குப் புலனும். அதைப் போன்றதே இலக்கிய மண்டலத்தில் இலக்கிய நெறியின் இயல்பு.

இந்நெறியிலே அவ்வக் காலத்தில் எழுந்த தமிழ்-இலக்கியப் புதிய அமைப்புக்களை முறைப்பட நோக்குவோம். புதுமுறை யிலக்கியங்கள் பொருள் பற்றியும் (Substance), வடிவுபற்றியும் (Form) காலந்தோறும் வேறுபட்டுத் தோன்றியுள்ளன. இப்போது கிடைப்பவற்றுள், மிகப் பழையவை அகம், புறம் என்று நமது இலக்கண நூலார் கூறும் பொருள்கள் பற்றியன. அகம் என்பது காதற் பொருளை உணர்த்துவது; புறம் என்பது அகத்திற்குப் புறமான வீரம், போர், ஈகை முதலிய பொருள்களை உணர்த்துவது. இங்ஙனம் பொதுப்படக் கூறலாம். இருவகைப் பொருள்களும் 'அகவல்' என்ற செய்யுள் வடிவில் பாடப்பட்டன. அகநானூறு புறநானூறு என்ற தொகை நூல்கள் சிறந்த உதாரணங்களாம்.

இவற்றிற்குப் பின் புறப்பொருள் மறையலாயிற்று. அகப்பொருள் பற்றி ஓர் அரிய இலக்கியம் தோன்றியது. ஆனல், இதன் செய்யுள் வடிவம் முற்றிலும் வேறுபட்டது. கலிப்பா என்ற மிக இனிய இசை நிரம்பிய வடிவம் புதிதாக அமைக்கப்பட்டது. இவ்வாறு தோன்றியதுதான் கலித்தொகை என்ற அழகிய இலக்கியச் செல்வம். இதற்குச் சிறிது பிற்பட்டு, அகமே பொருளாகக் கொண்டு, ஆனல் செய்யுள் வடிவில் பெரிதும் வேறுபட்டு, ஓர் இலக்கியம் தோன்றியது. இதுதான் பரிபாடல். இவ்வடிவினை விளக்கிய பேராசிரியர் 'பரிபாடல் என்பது பரிந்து வருவது; அஃதாவது கலியுறுப்புப் போலாது பல அடியும் ஏற்று வருவது' என்று கூறினர். இதனல், பாவினங்களுள் வெண்பா முதலிய பல செய்யுள் வகைகளுக்கும் உரிய

அடிகள் இவ்விலக்கியத்தில் காணப் பெறுகின்றன என்பது இவ்வுரைகாரர் கருத்து. இந்த வடிவிற்கும் அழகிற்கும் வெகுதூரமாம். பண்ணிசையுங்கூட இவ்வடிவிற்கு ஊட்டப்பட்டதென்பர். எனவே, இவ்வடிவில் இசையும் பொருந்திற்றும்.

வடிவுபற்றிய அளவில், கலித்தொகை, பரிபாடல், இவற்றின் மரபில் யாதோர் இலக்கியமும் தோன்றவில்லை இவை சந்ததியற்றுப் போயின. கலித்தொகை எத்தனையோ அற்புதமான கவிதைகளுக்கு வழிகாட்டியாய் அமையும் இயல்பு பெற்றும், தனியாய் நின்று, பாலைநிலத்திலிட்ட வித்துப்போலாயிற்றே என்ற இரக்க உணர்ச்சியைத்தான் நமக்கு உண்டாக்குகிறது. அகநானூறு, புறநானூறு முதலிய மற்றைத் தொகை நூல்கள் சந்ததியற்றுப் போகாது ஒரு சில இலக்கியங்களுக்கு வடிவு பற்றிய அளவில் குல முதலாய் அமைந்த போதிலும், இச் சந்ததி-இலக்கியங்களில் பெரும்பாலும் வடிவழகும் சுவையினிமையும் காணப்பெறவில்லை. எனவே, இத்தொகை நூல்களும் நல்ல சந்ததிகளைப் பிறப்பிக்கும் ஆற்றலற்றனவாய்ப் போயின.

இவற்றின்பின், பொருளிலும் வடிவிலும் முற்றும் வேறுபட்ட இலக்கியங்கள் தோன்றலாயின. பொது நீதியும், அரச நீதியும் புதுப்பொருள்களாம். வெண்பா, அதன் வகையாகிய குறட்பா முதலாயின புது வடிவங்களாம். நாலடி, நான்மணிக்கடிகை, திருக்குறள், ஐந்திணை ஐம்பது என்பன இப்புதிய தோற்றங்களுக்குச் சிறந்த உதாரணங்கள். திருக்குறளின் இலக்கிய நயம் உலகறிந்தது. அந்நயம் சிறந்து விளங்குவது அதன் பொருளில் மாத்திரம் அன்று. அப்பொருளிற் காட்டிலும் அதன் வடிவழகில் தான் மேம்பட்டுத் தோன்றுகிறது. ஒவ்வொரு குறளும் மாசு நீக்கித் தூய தாக்கி, அழகு பெற இழைத்

தமைத்த நன்மணிபோல விளங்குகிறது. ஆனால், பொன் மலர் நாற்றமுடைத்து என்றவாறு சுவையினிமையும் மிக வாய்ந்தது. இதன் வழியில் தோன்றிய இலக்கிய சந்ததி ஒன்றும் இல்லை என்பதில் சிறிதும் வியப்பில்லை. ஏனென்றால், ஒப்பற்ற இதன் பெருமையை அணுகுதற்கு ஒருவராலும் இயலாது. உலகில் ஒரு வள்ளுவர்தான் தோன்றுதல் கூடும்; ஒரு திருக்குறள்-பேரிலக்கியந்தான் தோன்றுதற்கு இடமுண்டு. மற்றை நீதியிலக்கியங்கள் அப்படியல்ல. பின் சந்ததிகள் பலவும் பெற்றுக் கூலம் தழைக்கச் செய்தன.

இவ் இலக்கியங்கள் பிறந்ததற்குச் சற்று முன்பின்னாக, தமிழ் மக்களை ஒரு புதிய சக்தி இயக்கியது. பக்திப் பேராற்றல் என்று இதனைக் கூறலாம். இதன் பயனாக, புதிய மரபில் இலக்கியங்கள் தோன்றின. இவைதான் தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம் முதலிய அருளிச் செயல்கள். இவற்றில் தெய்வ பக்தி என்ற புதுப் பொருளும், பண்ணோடு கூடிய விருத்தங்களாகிய புது வடிவங்களும் அமைந்துள்ளன. மேலும், இவற்றிலே உணர்ச்சி வெள்ளம் பொங்கித் ததும்பி, கற்போரது உள்ளத்திற் பாய்ந்து அதனை நெகிழ்வித்துக் குழைவித்து அன்பூற்றெடுக்கச் செய்கிறது. இதனோடு 'பண்' என்ற இசையும் இப்பாட்டுக்களிற் கலந்து, அவற்றிற்கு இனிமை யூட்டிக் கற்போரது உள்ளம் தேனூறித் தித்திக்கச் செய்கின்றது. திருவருட்பா முதலிய பல சந்ததிகளைப் பெற்றெடுத்து, நிலைத்த பெருமையோடு இன்றளவும் இப் புதிய இலக்கியங்கள் யாவரும் போற்றிப் பாராட்ட வீற்றிருக்கின்றன.

இவ் இலக்கியங்களில் நிறைந்த சுவானுபவம் உள்ளது. ஆனால், அறிவுக் கூறும் பாவனைக் கூறும் விசேஷமாக இல்லை யென்றே சொல்லலாம். அன்றியும், பொது

மக்களனைவர்க்கும் இந்த இலக்கியங்கள் சுவை விளைக்கக் கூடியன அல்ல. சமயப் பற்றுடையார் என்ற இனத் தார்க்கே இவை உரியவாய் விடுகின்றன. இலக்கிய நெறி யில் சிறப்பெனக் கொள்ளத் தகாத இவ் இயல்புகள் நீங்க, இவற்றிற்குத் தொடர்பு நயத்தால் சுவை யூட்டுதற்கு, வேறு புதிய இலக்கியங்கள் விரைவில் தோன்றின. காவி யங்கள், இதிகாசங்கள் முதலியவற்றைத்தான் இங்கே குறிப்பிடுகிறேன். இவற்றில் பொருளின் புதுமை எளி தில் அறியலாம்; தெய்வங்கள், அடியார்கள், அரசர்கள் முதலியோர்களின் சரிதமே இப்புதுப் பொருள்கள். வடி வுப் புதுமையும் உண்டு. விருத்த வகைகளை இவை மேற் கொண்ட போதிலும் இவ்விருத்தங்கள் ‘பண்கள்’ என்று தனியாய்ப் புகுத்தப்பட்ட இனிமையை வேண்டாது, வடி வின் தன்மையிலேயே அமைந்து கிடந்த சொல்லினிமை, பொருளினிமை நடையினிமை முதலியவற்றை உட் கொண்டு விளங்குகின்றன. இப்புதிய இலக்கியங்களில் மிகச் சிறந்தவை பெருங்கதை, சிலப்பதிகாரம், கம்பராமா யணம் என்பன. பெருங்கதை உதயணன் சரித்திரத்தைக் கூறுவதாகிய பிருஹத் கதை என்னும் வடநாட்டு நூலைப் பின்பற்றியது. தமிழ் நாட்டிற்கு இக்கதை புதியது. இதில் காவிய—இயல்பு முதன் முதலாக வெளிப்படுகின் றது. அகவற்பாவைச் சரித்திரங் கூறுவதற்கு முதன் முறையாகப் பயன் படுத்திய நூலும் இதுவே. அகவல்—பாவும் இதில் தனிப்பட்ட புதிய சிறப்புக்களுடன் இனி தாய் ஒழுகுகின்றது. சிலப்பதிகாரம் கண்ணகி கோவ லன் சரிதமாகிய புதுப் பொருளைக் கொண்டது. வடிவில் அகவற் பாவினால் இயன்றது. ஆனால், இதன் இனிமை யும் அழகும், பெருங்கதையில்தவிர, முன்புள்ள எந்த இலக் கியத்திலும் கண்டறியாதவை. பொருளை வகுத்தமைக்குந் திறமும் இத்தன்மையதே. இதில் பலவகைப்பட்ட வரிப் பாட்டுக்களும் உரைநடைப்பகுதியும் உள்ளன. வரிப்பாட்

டுக்கள் இதன்கண் உள்ள ஒரு புதுமை. இவற்றின் இனிமை முன்புள்ள எவ் இலக்கியத்திலும் காணப்படாதது; பெருங் கதையிலும் இல்லை; உணர்ச்சி நயமும் சிறந்து விளங்குகிறது. இதில் வரும் அரங்கேற்று காதை நாட்டிய அறிவைப்புகட்டுதற்கு ஏற்பட்டதாதலால், அதில் இலக்கியச் சுவையை எதிர்பார்ப்பது தக்கதன்று. இக் காவியம் ஓர் அரிய இலக்கியச் செல்வம் என்று கூறுதலோடு அமைகின்றேன். சிலப்பதிகாரப் பேரிலக்கியம் கூறும் கோவலன் சரிதத்தைக் காட்டிலும், எத்தனையோ மடங்கு சிறந்தது இராம சரிதம். இச் சரிதத்தை நமது பாரத தேசம் முழுவதும் போற்றி வருகிறது. இப் பெருமை சிறந்த சரிதத்தைப் பொருளாகக் கொண்டதே கம்ப ராமாயணம். இச் சரிதம் பற்றி முன்பும் சில இலக்கியங்கள் இருந்தனவாகத் தெரிய வருகின்ற போதிலும், அவற்றில் இலக்கியச் சுவை இருந்ததெனற்குச் சான்று இல்லை; அவை மறைந்தும் போயின. வடமொழியில் வால்மீகி மகரிஷி யருளிய இராமாயணம் இருத்தலால் கம்பன் எடுத்துக்கொண்டது புதுப் பொருள் என்றுகூற முடியாது. ஆனல், அவனது பலதிறப்பட்ட பேராற்றல் விளங்குவதற்கு வேறு எவ்வகைப் பொருளும் போதியதல்ல. வால்மீகியையும் கவிதைத் திறத்தில் கம்பன் வென்று விட்டானென்றும் உலக மகா கவிகளுள் அவன் ஒருவனுவானென்றும் அறிஞர்கள் கருதக்கூடிய அளவில் அவனது கவிதைப் பெருமை யுள்ளது. பொருட் கூற்றை அமைக்குந் திறம் வியக்கத் தக்கது. அதில் காணும் நாடக நயம் எவரையும் பரவசமாக்க வல்லது. அதிற் கிளர்ந்தெழும் பலவகை உணர்ச்சி வேகம் தனிச் சிறப்பு வாய்ந்தது; நமது மனத்தைக் கொள்ளையிட்டுச் சூறையாடுகின்றது. அதிற் புலப்படும் பாவனையாற்றல் உலக இலக்கியங்களில் மிக மிக அருகியே காணக் கூடியது. இவ் இலக்கியத்திலுள்ள விருத்தங்கள் உணர்ச்சி வேறு

பாட்டிற்குத் தக்கபடி புதிது புதிதாய் அமைந்துள்ளன. அவற்றின் இனிமையும், நடையின் தெளிவும், தொடர்ச்சி நயமும் மனத்தைக் கனிவித்து இன்பூட்டுகின்றன. இந்தப் புதுமை சிந்தாமணி, சூளாமணி முதலிய முற்பட்ட காவியங்களில் காணப்படாதது. தமிழரசிக்குச் சிரோமணி யென்று இதனைக் கூறுதல் எவ்வகையாலும் பொருத்தமே. ஆகவே, இப்பெருங் காவியம் பொருள், வடிவு, அறிவாற்றல், உணர்ச்சி வேகம், பாவனைச் சிறப்பு என்ற கூறுபாட்டளவில் நில்லாது, அவற்றிலெல்லாம் சிறந்து இலக்கியம் மேம்பட வேண்டும் என்ற புதியதோர் மரபிற்கு லட்சியமாய், முதல் மூலமாய், ஒளிர்கின்றது.

ஆனால், திருக்குறளைப் போலவே, சிலப்பதிகாரமும் கம்பராமாயணமும் சந்ததியற்றுத் தனிச் சிறப்புடையனவாய்ப் போயின. ஏனென்றால், இவற்றின் ஆசிரியர்களோடு ஒப்பார் இவர்கள்தாமே யன்றி வேறில்லை.

இப்பேரிலக்கியங்கள் தோன்றியதற்குச் சற்று முன் பின்னாக, பிரபந்த வகைகள் தோன்றின. இவைகள் தெய்வங்களைப் பற்றியும் அரசர் முதலியோரைப் பற்றியும் அமைந்தன. உதாரணமாக, கோவை, உலா, பரணி, பிள்ளைத் தமிழ் என்பவற்றைக் கூறலாம். இவற்றில் பொருட் புதுமை இல்லை. ஆனால், வடிவத்திலும் அமைப்பு நெறியிலும் புதுமையுண்டு. கோவை கட்டளைக் கலித்துறையாலும், உலா கலிவெண்பாவாலும், பரணி தாழிசையாலும், பிள்ளைத் தமிழ் ஆசிரிய விருத்தத்தாலும் இயற்றப்பட்டன. இப் பாவகைகள் எல்லாம் புதியவாய்த் தோன்றியவை. இப்பிரபந்தங்களின் அமைப்பு முறையும் புதியதாய்ப் பிறந்ததேயாம். கோவை அகப்பொருளைத் துறையாக வகுத்து முறைப் படுத்தியது. உலா எழுவகைப் பருவத்துப் பெண்களும் தலைவன் பவனி வரும் போது அவன் மீது காதல் கொண்டதாகப் பாடுவது

பரணி ஒரு பேரரசன் போர்க்களத்தில் கொண்ட பெரு வெற்றியைப் புனைந்துரைத்துப் பாடுவது. பிள்ளைத்தமிழ் பாட்டுடைத்தலைவன் அல்லது தலைவியின் பிள்ளைப்பருவத்தைப் பல கூறுகளாகப் பிரித்து அக் கூறுகளில் அவர்கள் நிகழ்த்தும் நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பது. இவையெல்லாம் புதியவாய் வந்த இலக்கிய முறைகளைப் பின் பற்றியவை. இவைபோன்று கலம்பகம், அந்தாதி முதலிய பல பிரபந்த வகைகளும் தோன்றின. பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு எனப்பிற்காலத்தார் வரையறை செய்துள்ளார்கள். இவை மிகப் புதியவையாதலால், 'விருந்து' என்னும் நூல் வகையில் அடக்கினர். இச் சொல்லுக்குப் புதுமை என்று பொருள். இவற்றுள் சிறப்பாகத் தனிப்படக் கூறத்தக்கன குறவஞ்சி, பள்ளு என்பன. இரண்டும் பெயரளவில் தெய்வம் பற்றியவையாயிருந்தாலும், அவை தாழ்ந்த குடியினர் என்று கொள்ளும் குறவர், பள்ளர் என்பவர்களுடைய காதல் வாழ்க்கையைச் சித்திரிக்கின்றன. எப்பொழுதும் தெய்வங்களையும், அரசர்களையும், குறுநில மன்னர்களையும், பிரபுக்களையும் பாடிவந்த நம்மவர்க்கு இது ஒரு புதுமையல்லவா ? மேலும், நாடக வடிவில் அமைந்து, இசைப் பாட்டுக்களையும் உடன் கொண்டு, பலரும் திரண்டிருக்கும் பொதுக்கூட்டங்களில் இவை நடிக்கப்பட்டு வந்தமையால், பொதுமக்கள் இவற்றை மிகவும் விரும்பினர். இப்பிரபந்த வகைகளும் பல சந்ததிகளை ஈன்றன.

இவைகள் இலக்கணக் கட்டுப் பாடுகளில் அடங்கி விட்டன. அவ்வாறு கட்டுப்பாடுகளில் அடங்காதனவாய்ப் பல சிற்றிலக்கியங்களும் பிற்பட்ட காலத்தில் தோன்றின. கீர்த்தனங்கள், தூது. கும்மி முதலியவை உதாரணங்கள். சில, இசைப்பாட்டு மயமாய் இருந்தன. உதாரணம் இராமநாடகம். சில, பெண்கள் விளையாடும் கும்மியாட்டம் முதலியவற்றிற் பாடுதற்குரியதாய் அமைந்

தன. முற்காலத்தும் இவ்வகைப் பாடல்கள் இருந்தன. அம்மானை, பாவைப்பாட்டு முதலியன உதாரணங்கள். சில, தாசிகள் இயல்பைக் கூறுபவையாயின. உதாரணம் விறலிவிடுதூது. இவ்வாறாகப் பல சில்லறைப் பிரபந்தங்களும் உள்ளன. இவைகளெல்லாம் சமயசந்தர்ப்பமும் தாற்காலிக வாழ்க்கை நெறியும் பற்றி அப்போதைக்கப்போது தோன்றியவை; நிலைபேறற்றவை. ஆங்கிலத் தொடர்பு ஏற்பட்டதன் பின்தான் நிலைபேறான புதிய இலக்கியமுறைகள் பிறந்தன.

இவற்றுள் முதலாவது கூறத்தக்கது நாடகமாகும் 11-ம் நூற்றாண்டளவிலே இது தோன்றத் தொடங்கி, காலத்திற்கியைய்ப் பற்பல வேறுபாடுகளை அடைந்து சென்ற நூற்றாண்டில்தான் ஒருவாறு கௌரவ ஸ்தானத்தைப் பெற்று, இப்போது மிசப் போற்றப்படும் நிலையை எய்தியுள்ளது. மனோன்மணீயம் ஒரு சிறந்த உதாரணமாம். சூரிய நாராயண சாஸ்திரியாரும், சம்பந்த முதலியாரும் இயற்றிய நாடகங்கள் முறையே பண்டிதர்களையும் பொதுமக்களையும் குறித்து எழுதப்பட்டன. பொதுமக்கள் முன்னர் நடிக்கப்பெற்று, அவர்களை இன்புறுத்துவதையே நோக்கமாகக் கொள்ளும் நாடகமே நிலைத்துநிற்க வல்லது. நாடகத்திற்கு வருங்காலத்தில் பெரும் பிரசாரம் இருக்குமென்று தோன்றுகிறது. ஆங்கில மரபை மேற்கொண்டு களம், அங்கம் எனப் பாகுபட்டு இவ்வகை இலக்கியம் அமைக்கப்பட்டு வருகிறது. இப் பாகுபாடு காளிதாசனது நாடகங்களிலும் காணப்படுதல் இங்கே அறிந்து மகிழ்தற்குரியது.

ஆங்கிலத் தொடர்பால் வசன நடை எல்லாராலும் போற்றப்பட்டது. அந்நடையில் பல இலக்கியங்களும் தோன்றலாயின. உதாரணமாக, பலவகைக் கட்டுரைகளைக் கூறலாம்.

அடுத்தபடியாக, வசனநடையில் அமைந்த கதைகளைக் கூறவேண்டும். பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் என்பன சிறந்த உதாரணங்களாம். கலையுணர்ச்சியோடு, வாழ்க்கையைச்சித்திரிக்கும் இப்புத்தமைப்பும் நயங்கள் முதிர்ந்து பெருஞ் சிறப்பு எய்தக் கூடியதே.

தேசீயக் கிளர்ச்சி ஒரு புதிய சக்தி. இதன் காரணமாய் விளைந்துள்ள நன்மைகள் மிகப் பல. கவிஞர்கள் இந்த சக்தியை மிகவும் பயன்படுத்தி வந்துள்ளார்கள். தேசிய கவி பாரதி ஆற்றல் நிரம்பிய ஒரு புதிய நெறியை வகுத்து விட்டனர். விலங்குகளை யெல்லாம் முறித்தெறிந்து யதேச்சையாய் ஆண்மையும் அழகும்தோன்றச் சுவைபடத் தற்காலத்திலெழுந்த பாடல்கள் பாரதியார் முதலியோர் இயற்றியவை. இவற்றின் சந்ததியே இனி நிலைத்து நிற்கும் என்னலாம். பூர்வ மரபைப் போற்றி, பல புதிய அம்சங்களும் தோன்ற, தமிழ்ப் பண்பு நிரம்ப, கவிமணிதேசிக விநாயகம்பிள்ளை மற்றொரு புதிய நெறியை வகுத்துள்ளார் இவைகளைப் பெரும்பாலும் பின்பற்றிக் கவிதை இலக்கியங்கள் தோன்றி வருகின்றன.

இப்போது சிறுகதையுகம் நிகழ்கிறது. சிறுகதை மரபும் மேன்மேலும் சிறந்து, அழகுக்கலை யுணர்ச்சியோடு விளங்கி, நிலைபேறுடைய புதிய இலக்கிய வகையாக அமையுமென்று கருதலாம்.

இங்ஙனமாக, பல நூற்றுண்டுகளுக்கு முரிய புதிய இலக்கிய முறைகளின் சரித்திரம் புலப்படுகின்றது, ஆசிரியர்கள் இலக்கிய இயல்பை நன்குணர்ந்து, புதிய மரபினை மேற்கொண்டு, புதியஇலக்கியங்களை அமைத்தல் இலக்கிய வளத்திற்கு இன்றியமையாதது. அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பெருங்கடமையுமாகும்.

# 14

# புதிய இலக்கணம்

சூழ்நிலைக்குத் தக்கபடி மாறிக்கொண்டு செல்வது உலகத்துள்ள எல்லாவகைப் பொருள்களுக்கும்—அதிலும் உயிரினங்கள் அனைத்திற்கும்—பொதுவாகவுள்ள ஒரு நியதி. மொழியும் இந்நியதிக்கு உட்பட்டதே. அது உயிருடைய பொருள்போன்றது எனக்கருதிய அறிஞரும் உளர். பேச்சு வழக்கிலுள்ள ஒவ்வொரு மொழியும் உயிர்த்தத்துவத்துடன் கூடியது. இங்ஙனம் உயிர்த் தத்துவத்துடன் கூடி வழங்கும் ஒவ்வொரு மொழியும் முற்கூறிய நியதியின்படி மாறிக் கொண்டு செல்வதுதான் இயற்கை. மொழி வரலாற்றில் ஒவ்வொரு காலப் பகுதியிலும் இவ்வுண்மையைக் காணலாகும். என்று சூழ்நிலை முதலியவற்றிற்குத் தக்கபடி மாறிச் செல்லும் இயல்பை ஒரு மொழி இழந்துவிட்டதோ, அன்று அது இறந்தொழிந்தது என்று உறுதியாகக் கூறலாம். வடமொழி, லத்தீன், புராதன கிரீக்கு முதலியவை உதாரணங்கள். இவை யனைத்தும் வழக்கொழிந்து இறந்துபோன மொழிகளாம். இம்மொழிகளைப்போல் தமிழ் இறந்து போகவில்லை; அதில் உயிர்த்தத்துவம் துடித்துக் கொண்டிருக்கிறது. அதனால் சூழ்நிலைக்குத் தக்கபடி அது மாறிக் கொண்டுதான் செல்லும். இவ்வாறு மாறிக் கொண்டு சென்றதில், பூர்வகாலத் தமிழும், தற்காலத் தமிழும் பெரிதும் வேறுபட்டுள்ளன; இடைக்காலத் தமிழும் அப்படியே. பூர்வ காலத்திருந்த நமது முன்னோர்களுக்குத் தற்காலத்து வழங்கும் - அதிலும் பத்திரிகைகளில் வழங்கும்—தமிழ் எத்தனையோ புதுமை

யாகத் தோன்றும். பொருளும் ஒரு சிறிதும் விளங்க மாட்டாது. நம் காலத்தவர்க்குப் பூர்வ காலத் தமிழும் இடைக்காலத் தமிழும் இலக்கண முதலிய கருவிகளாலும் அவ் விரு காலத் தமிழிலும் தோன்றியுள்ள நூல்களிற் பயிற்சியினுலும் புலப்படுவனவாம். அவ்விரு காலத்திற்கும் உரிய இலக்கணங்களே நம்மிடையில் இப்போதுள்ளவை. இவைகளே இப்பொழுது நமக்குப்போதிக்கப்பட்டு வருகின்றன. சுமார் 600 ஆண்டுகளுக்கு முற்பட்டுத் தோன்றியது நன்னூல் என்ற இலக்கணம். அதற்கும் மிக முற்பட்டுத் தோன்றியது தொல்காப்பியம். இதன் காலம் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு என்று கொள்ளலாம். 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கூறுவோரும் உண்டு, இந்த இலக்கணங்களில் அவை தோன்றிய காலத்திலும் அக்காலத்திற்கு முன்புமுள்ள தமிழ் வழக்காறுகளின் இலக்கணங்களே கூறப்பட்டிருக்கும். அவற்றிற்குப் பிற்பட்டு நாளிதுவரையில் தோன்றிய இலக்கிய வழக்குக்களை ஆராய்ந்து இலக்கணம் எழுதப்படவுமில்லை; அவ்வகை இலக்கணப் பொருள்கள் நமக்குக் கற்பிக்கப் படவுமில்லை. ஆகவே, நமக்குக் கற்பிக்கப்படும் இலக்கணத்திற்கும் நமது காலத்துத் தமிழுக்கும் யாதோர் இயைபும் இல்லை. ஆனல், தற்காலத்தில் நமக்கு வேண்டுவது நம்முடைய வாழ்க்கையோடு நெருங்கிய சம்பந்தமுடைய நம்காலத்துத் தமிழ்மொழி வழக்கின் இலக்கணமாகும், இது புதிய தமிழிலக்கணம் அவசியம் என்பதை நன்குகப் புலப்படுத்துகிறது.

இப்புதிய இலக்கணம் என்ன நெறியிற் செல்லுதல் வேண்டும்? எவ்வெக் குறைகளை அகற்றுதல் வேண்டும்?

இதுவரை தோன்றிய பழைய இலக்கணங்கள் பல குறைகளை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இவைகள் வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றி அமைந்துள்ளன.

இலக்கணத்தைச் சூத்திரங்களாக அமைத்துக் கூறுதல் தானும் வடமொழி முறையே. இதனால் விளைந்த கேடுகளும் விழுதைங்களும் மிகப்பல. உரைகள் பல்கிப் பெருகின. விருத்தியுரைகள் செழித்துத் தோன்றின. சூத்திரம் கருதாதனவற்றை யெல்லாம் அதன்கண் அடக்கித் திணித்தற்குப் பலவகை உத்திகள் கையாளப்பட்டன. தொல்காப்பியத்தின் கடைசிச் சூத்திரம் முப்பத்திரண்டு தந்திர உத்திகளைக் கூறுகிறது. இந்த உத்திகள் யாவும் பொருள் கொள்ளும் முறையையும், பொதுப்பட நூல் அமைப்பின் முறையையும் உணர்த்துகின்றன. சில நமக்கு வேடிக்கையாகக் கூடத் தோன்றலாம். 'உரைத்தாம்' (முன் சொன்னோம்), 'உரைத்தும்' (இனிச் சொல்வோம்) என்பவற்றை உதாரணமாகக் கூறலாம். உத்திகளைப் போலவே சூத்திரங்கள் அமைந்து கிடக்கும் நிலையிலும் வடமொழியின் சார்பு காண்கிறது. யாற்றொழுக்கு, அரிமா நோக்கம், தவளைப் பாய்த்து, பருந்தின் வீழ்வு என்பவற்றை உதாரணமாகக் கூறலாம். அரிமா நோக்கமாயமைந்த சூத்திரம் முன்னும் பின்னும் நோக்குமாம்! தவளைப் பாய்த்து என்ற அமைப்பு முறையில் சூத்திரங்கள் தாவித்தாவிச் செல்லுமாம்! பருந்தின் வீழ்வு எங்கேனும் உள்ள சூத்திரம் திடீரென ஓரிடத்தில் வந்து குதித்து, அச் சூத்திரப் பொருளுக்கு இயைபு தருமாம்! இந்த அருமையான முறைகளெல்லாம் வடமொழி நூல்கள் நமக்குத் தந்தனவே. சூத்திரங்களாக இயற்றும் முறை ஒழிந்தாலன்றி, இக் குறைகள் நீங்க மாட்டா.

இலக்கணப் பொருளிலும், வடமொழிச் சார்பு எளிதிற் காணப்படுகிறது. இலக்கணம் என்ற சொல்லே லக்ஷணம் என்ற வடமொழியின் பிராகிருதச் சிதைவு. இதை மொழிபெயர்த்துக் 'குறி' என்னும் சொல்லாலும் தொல்காப்பியர் இலக்கணத்திற்குப் பெயர் வழங்கியுள்

ளார். தமிழிலுள்ள சொற்களைப்பெயர், வினை, இடை, உரி என நான்கு வகையினவாகத் தொல்காப்பியர் முதலிய இலக்கண நூலார் பகுத்துள்ளார்கள். முதல் மூன்றும் நமக்கு விளங்குகின்றன. உரிச்சொல் என்பது யாது? இது பற்றி ஆராய்ந்து முடிவு கண்டவர்கள் இல்லை. பொருள் விளக்கமற்ற இப்பதப்பிரயோகம் இப்பாகுபாடு தமிழுக்கு உரியதன்று என்பதைப் புலப்படுத்துகிறது. வடமொழியில் மிகப் புராதன காலந் தொட்டு,

**நாம ஆக்யாத உபஸர்க்க நிபாதம்**

என்று வடசொற்களை நான்காகப் பாகுபாடு செய்திருக்கின்றனர். நாமம் என்பது பெயர்; ஆக்யாதம் என்பது வினை; உபஸர்க்கம் என்பது இடைச்சொல்; நிபாதம் என்பதுதான் உரிச்சொல்.

இச்சொற் பாகுபாட்டினைத் தவிர, தமிழிலக்கணங்களிற் கூறும் எட்டுவகை வேற்றுமைகளும் வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றியனவே. வேற்றுமை என்பது கூட 'விபக்தி' என்ற சொல்லின் மொழி பெயர்ப்பு. முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என்ற பெயரும், அவற்றை வைத்திருக்கும் அடைவு முறையும் வடமொழி ஆசிரியர்கள் கூறியவையேதான். "இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்" என்ற அகத்தியச் சூத்திரமும் இவ்வேற்றுமையின் வடமொழிப் பிறப்பைத் தெளிவாக்குகிறது. இவற்றைத் தவிர அங்கங்கே வடமொழிச் சொற்களும் தொடரும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக, அஸப்பியம் என்ற சொல்லை 'அவையல் கிளவி' எனத் தொல்காப்பியர் மொழிபெயர்த்துள்ளார். இவ்வாறே முன்மொழி நிலையல், பின்மொழி நிலையல், இருமொழி நிலையல், அன்மொழி நிலையல் என்பனவும் வடமொழி இலக்கணத் தொடர்களின் மொழி பெயர்ப்புக்களே. இங்ஙனம் பல.

இம் மொழிபெயர்ப்புக்களேயன்றிப் பல வடசொற்களும் தொல்காப்பியத்தில் எடுத்தாளப் பட்டுள்ளன. அம்போதரங்கம், உவமம் என்பன உதாரணங்கள். அன்றியும், இலக்கணப்பொருளை உணர்த்தும் முறையும் வடமொழி-இலக்கணத்தைப் பெரிதும் தழுவியுள்ளது. சூத்திரம், பிண்டம், படலம், காண்டிகை என்ற சொற்களால் இதன் உண்மை தெளியலாம்.

இலக்கணத்தில்வரும் பொருளும்முறையும்இவ்வாருக, அவைகளிற் சிலவற்றிற்கு அடிப்படையாயமைந்த ஒரு சில தத்துவக் கொள்கைகளை நோக்குவோம். எழுத்துக்களின் பிறப்பை உணர்த்துமிடத்தில் உந்தியிலிருந்து தோன்றும் காற்ருனது சிலசில ஸ்தானங்களில் தங்கி முடிவில் எழுத்தொலியாக அமைகின்றது என்று தொல்காப்பியர் கூறினர். இது வடமொழியிலுள்ள யோகசாஸ்திரக் கருத்து. தற்காலத்துள்ள ஒலியியல் அறிஞர்கள் இதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இவ்வாறே, 'மொழிமுதற் காரணமாம் அணுத்திரளொலி' என நன்னூலார் கூறினர். இது ஜைனர்களுடைய தத்துவக் கொள்கைகளுள் ஒன்று. 'சப்தம் நித்தியம்' என்பதும் இவ்வகையைச் சார்ந்ததே. சொற்கள் நித்தியமாயுள்ளன என்பது இதன் கருத்து. பிரயோக விவேகம் என்னும் தமிழிலக்கண நூலாசிரியர் இக்கருத்தை வியவகரித்து எழுதியுள்ளார். இலக்கணக் கொள்கைகள் தத்துவக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதென்று கூறுதல் நமது இந்திய நாட்டு இலக்கண ஆசிரியர்களுக்கு ஒரு வழக்கமாய் அமைந்து விட்டது. பிற நாடுகளிலும் இவ் வழக்கம் இல்லாமற் போய்விடவில்லை. லத்தீன் இலக்கண ஆசிரியர் ஒருவர் (Peter Helias) இம்முறையைப் பின்பற்றினர். இவரைத் தொடர்ந்து பல ஆசிரியர்களும் எழுதிவரலாயினர். இவர்களுக்கு லத்தீன் மொழியில் மோடிஸ்டி (Modistae) என்று

பெயர். தத்துவ நூலாரது ஆராய்ச்சியுலகு வேறு; இலக்கண நூலாரது ஆராய்ச்சியுலகு வேறு. தத்துவக் கருத்துக்கள் இலக்கணக் கருத்துக்களை நெறிப்படுத்துதல் பெரும் பிழையாம். இப்பிழைபட்ட கொள்கையும் வட மொழியினின்றும் தமிழிற் கொள்ளப்பட்டதே.

இவ்வாறாக, வடமொழி நெறியைப் பின்பற்றி அமைத்த தமிழ்—இலக்கணம் தமிழின் இயல்பை முற்ற உணர்த்துவதாகுமா? மாட்டாது. மேலை நாடுகளில் ஆங்கிலமொழி முதலியவற்றிற்கு அமைத்த பண்டை இலக்கணங்கள் லத்தீன் இலக்கணத்தைப் பின்பற்றியவை. இங்ஙனம் அமைத்தல் சரியன்று என அந்நாட்டு அறிஞர்கள் நீக்கிவிட்டனர். நமது தமிழில் இக்குறைகள் இன்றளவு நீங்கியபாடில்லை.

வேறொன்று. தமிழிலக்கணம் செய்தவர்கள் தமிழ் மொழியை ஆக்கியவர்களே என்று கருதும் மனப்பான்மையானது நமது நாட்டில் வேரூன்றி வந்திருக்கிறது. 'அகத்தியன் பயந்த செஞ்சொ லாரணங்கு' என்று வில்லிபுத்தூரர் கூறியது இதனை உட்கிடையாகக் கொண்டதே. இதனால், இலக்கண ஆசிரியர்கள் இன்ன நெறியில் தமிழ் செல்க என்று ஆணையிடுவதற்கு அதிகாரிகளாகி விட்டனர்.

> **தோமின் றுணர்தல் தொல்காப்பியன் றன்**
> **ஆணையிற் றமிழறிந் தோர்க்குக் கடனே**

என்பது இவ்வதிகாரத்தை நமக்குப் புலப்படுத்துகிறது. 'எல்லே இலக்கம்' என்ற சூத்திரத்தின் (தொல். சொல். 269) உரையில் 'எல்' என்பது உரிச்சொனீர்மைத்தாயினும் ஆசிரியர் இடைச்சொல்லாக ஓதினமையான், இடைச் சொல்லென்று கோடும்' என்று சேனாவரையர் எழுதினர். இதுவும் இவ் அதிகாரத்தையே உணர்த்துகிறது. இலக்

கண ஆசிரியர்கள் வைத்ததுதான் சட்டம், அவர்கள் கூறியதற்கு யாருக ஒருவரும் எழுதத் துணியக்கூடாது.

மேலே நாடுகளிலும் இவ்வகையான கொள்கை முன்பு நிலவிவந்தது. இம்முறையில் அமைந்த இலக்கணங்களே ஆணை முறையிலக்கணம் (Prescriptive Grammar) என்று கூறுவார்கள். இலக்கணம் எழுதுவதில் இம்முறையைப் பின்பற்றுதல் தக்கதன்று என மேலேநாட்டு ஆசிரியர்கள் வெகுகாலத்திற்கு முன்பே ஒதுக்கி விட்டனர். ஆனல், நமது நாட்டில் இந்த முறைதான் இன்னும் போற்றப் படுகிறது. இது மிகப் பெரியதோர் குறையென்பது கூற வேண்டா.

தமிழிலே ஆன்ருேராட்சி மிகச் சிறந்ததாக இலக் கண ஆசிரியர்களால் கருதப்பட்டது. அவர்கள் இயற்றிய நூல்களில் வரும் தமிழ்தான் பின்பற்றத் தக்கது என்பர். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற திவாகரச் சூத்திரம் இந்தக் கருத்தை உட்கொண்டதுதான். இலக் கணக்காரர் கூறும் உலக வழக்கு என்பது ஆன்ருேராட் சியை மட்டும்தான் குறிப்பதாம். பிறவழக்குகள் இழிசன வழக்கு எனப் புறக்கணித்து ஒதுக்கப்பட்டுள்ளன. மக்க ளனைவரும் வழங்கிவரும் தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுக்காதபடி, அவருள் ஒரு பகுதியினராகிய ஆன்ருேரது ஆட்சியை மட்டும் பின்பற்றிச் சென்றுள்ளவை இதுவரை தோன்றிய தமிழிலக்கணங்கள். ஆனல், தமிழின் இயல் பும், அது செல்லும் நெறியும் எந்த ஆசிரியனது ஆணைக் கும் உட்பட்டனவல்ல, 'ஆன்ருேராட்சியும்' அதனைக் கட்டுப்படுத்துதல் இயலாது. இவ்வாறு கட்டுப்படுத்து வது பெருங்கடலுக்கு அணையிடுவது போலத்தான். அன் றியும், ஆன்ருேர் என்பவர் யாவர்? அவர் எக்காலத்துள் ளவர்? அவரது தகுதி யாது? இவற்றிற்கு விடை காணு தல் எளிதல்ல.

மொழியின் இலக்கணத்திற்கும் தருக்க நியதிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்று பொதுப்படக் கருதுவதுண்டு. உண்மையில் இரண்டிற்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. 'அன்' விகுதியும் 'அள்' விகுதியும் ஆண்பாலையும் பெண்பாலையும் உணர்த்துவனவாயிருக்க, ஒருவன் என்பதற்கு ஒருவள் என்ற பெண்பாற் பெயர் இருக்க வேண்டாமா? தருக்க நியதியின்படி இருக்கவேண்டும் அல்லவா ? அவ்வாறு உள்ளதா ? இலக்கணம் வழக்குப் பற்றியது என்பது இதனால் தெளிவாகிறது. மொழி தருக்க நியதியோடு ஒத்ததென்று நினைத்து இலக்கணம் அமைத்தல் ஒரு பெரிய தவறாம்.

மொழி யென்பது மக்கள் தம் கருத்தை வெளியிடுவதற்குப் பயன்படும் ஒரு கருவி யென்றும், இலக்கணம் அம்மொழியைப் பிழையின்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் உதவும் கருவியென்றும் சாதாரண மக்கள் கொள்வார்கள். இதில் ஒரு முக்கியமான உண்மை புலப்பட்டவில்லை. சமுதாயத்தின் செயலாகவுள்ளது மொழி என்பது தான் அவ்வுண்மை. அதனால், சொல்லும் தொடரும் அவை தோன்றிய சந்தர்ப்பம் நோக்கிப் பொருள்கொள்ளப் படவேண்டும் என்பது தெளிவாகிறது. அவற்றிற்குத் தனிப்பட்ட பொருள்களுண்டேனும் அப்பொருள்களும் சந்தர்ப்ப நியதிக்கு உட்பட்டது என்பதை நாம் நன்றாக உணர்தல் வேண்டும். அன்றியும், சொற்கள் நித்தியம் என்றும் இயற்கையில் தோற்றம் என்றும் எண்ணும் கருத்துக்கள் மிகப் பிரபலமாக வழங்கி வந்தன. இக்கருத்துக்களினால், நித்தியமாயுள்ள இச்சொற்கள் அக்ஷரத்தில் (அதாவது வரிவடிவில்) அமைந்துள்ள சொற்களைக் குறிப்பன என்று கொண்டு, ஒலிவடிவைக் காட்டிலும் வரிவடிவிற்கு முதன்மை கொடுத்து வந்தனர். ஒரு மொழியின் வாழ்க்கை வரலாறு முழுதும் அதன் ஒலிகளின் வேறு

பாடுகளாலேயே நெறிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வுண்மை மிகப் பிரசித்தமாயுள்ளது. எனவே, எழுத்து வடிவிற்கு இலக்கண ஆசிரியர்கள் முதன்மை கற்பிப்பது தவறான முறையென்று எளிதில் அறியத் தக்கது. இருவகை வடிவும் ஒன்றே யெனக் கொள்ளுதலும் பெரியதொரு மயக்கமாம்.

நமது தமிழிலக்கணம் ஐந்து பகுப்பையுடையது எனக் கூறுதல் மரபு: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என. இவ்வைந்தும் தொல்காப்பியத்தில் காணப் படுகின்றன; வீரசோழியத்திலும் உள்ளன, ஆனால், இவற்றிற்குப் பிற்பட்டெழுந்த நன்னூலில் தமிழ் இலக் கணம் என்று சொல்வதற்கு உரிமையுடைய எழுத்தும் சொல்லுமே கூறப்பட்டுள்ளன. ஏனைய மூன்றற்கும் இவ் வகை உரிமையில்லை என்று நன்னூலார் கருதியிருக்க லாம். உண்மையும் நன்னூலார் கருதியதுதான். யாப்பும் அணியும் இலக்கணத்தின் பாகுபாடு என்று ஒரு வகை யாகக் கொண்டாலும் பொருளிலக்கணத்தை அவ்வாறு கூறுதல் சிறிதும் ஏலாது. இக்காலத்தில் பொருளிலக் கணத்தைக் கற்பது, பண்டை நூல்களைக் கற்பதற்கு ஒரு வாறு பயன்படுமே யன்றி, வேறு யாதொரு பயனும் தர மாட்டாது. உரிமையற்ற, வேண்டாத இப்பகுதி தற்கால இலக்கணத்தினின்றும் அறவே நீக்கப்படல் வேண்டும்.

இக்குறைகளெல்லாம் நீங்குதல் வேண்டும். ஒவ் வொரு மொழிக்கும் அதற்கெனத் தனித்துரிய பொது மாதிரிகைகள் (patterns) உண்டு. அவைகள் பேச்சு அமைதியிலும், வாக்கிய அமைதியிலும், சொல் அமைதி யிலும் சிறப்பாகக் காணப்பெறும். நமது பேச்சு வழக் கினையும் இலக்கிய வழக்கினையும் ஆராய்ந்து பாகுபாடு (analysis) செய்து, மொழியில் அமைந்து கிடக்கும் பொது மாதிரிகைகளைத் தெரிந்து, புதிய இலக்கணம்

அமைத்தல் அவசியமாம்: விவரண முறையைக் (descriptive) கைக்கொள்ளல் வேண்டும்; ஆணையிடும் முறையை (prescriptive) நீக்குதல் வேண்டும். இதுபோன்று முக்கியமானது மொழியின் சரித்திரத்தை நோக்கி, வரலாற்று முறை இலக்கணம் (historical grammar) இயற்றுதல். இது இன்றியமையாதது. கடைசியாக, மொழி நூல் முடிவுகளுக்கு ஒத்தமுறையில் இப்புதிய இலக்கணம் அமைதலே தக்கது. ஒரு சில பழைய எழுத்தொலிகள் தற்காலத்திற்கு அவசியமில்லை. தற்காலத்தில் வழங்கும் சில எழுத்தொலிகள் சேர்க்கப்பெறுதல் வேண்டும். இவ்வாறே சொற்கள் பற்றியும், நூதன உருபுகள் பற்றியும், நூதன வினைகள் பற்றியும், நூதன வினை விகற்பங்கள் பற்றியும், நூதன வாக்கிய அமைதி பற்றியும் புதிதாக வழக்கிற் புகுந்தனவற்றை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு அமையும் புதிய இலக்கணம் பற்றிய முயற்சியைத் தமிழறிஞர்கள் உடனடியாகத்தானே மேற்கொள்வது தனிப்பெருங் கடமையாகும்.

# 15

# தமிழும் எதிர்காலமும்

எதிர்காலத்திலே தமிழ் எவ்வாறாக இருக்கும்? 'ஜோதிஷத்திலும் ஆரூடத்திலும் இக்காலத்தில் நம்பிக்கையில்லையே! இக்கேள்வியால் என்ன பயன்?' என்று சிலர் நினைக்கலாம்.

குறிசொல்வதால் பயனில்லை. ஆனால் இக்கேள்விக்கு விடையளிப்பது குறி சொல்வதாகாது. தமிழின் பூர்வ சரித்திரத்தையும் அதன் தற்கால நிலைமையையும் அடிப்படையாகக் கொண்டு அதன் எதிர்கால நிலையை அநுமானம் செய்யலாம். இந்த அநுமானத்திற்கு மொழிகளைப் பற்றிய பொது அறிவும் துணைபுரியும். இம்முறையில் தமிழ் மொழியின் எதிர்கால நிலையைக் கவனிப்போம்.

தமிழ் மொழி சுமார் 2000 ஆண்டுகளாக வழங்கி வந்துள்ள சரித்திரம் இலக்கிய இலக்கணச் சான்றுகள் மூலமாய் நாம் அறிந்து கொள்ளக் கூடியதே. கிறிஸ்து அப்தத் தொடக்கத்திலிருந்து பூர்வ காலத் தமிழும், சில நூற்றாண்டுகளுக்குப் பின்பு வழங்கிய பின் - பூர்வ காலத் தமிழும், வடமொழிக் கலப்பு மிகுந்து இசை யுணர்ச்சி பெருகி இலக்கியக் கலை வளம்பட்ட முன் - இடைக்காலத் தமிழும், அரசியல்குழப்பங்கள் மிகுந்து கல்விநிலைதளர்ந்து விட்ட பின்-இடைக்காலத் தமிழும், மேல்நாட்டு நாகரிகக் கலப்பால் தன்மை திரிந்துவிட்ட தற்காலத் தமிழும் ஒன்றுக்கொன்று மிகவும் வேறுபட்டிருப்பதைக் காண்கிறோம். இவைகளுக்கு முறையே நற்றிணையாதிய தொகை நூல்

களும், திருக்குறள் பரிபாடல் என்பனவும், சிந்தாமணி கம்பராமாயணம் முதலிய காவியங்களும், விறலி விடுதூது குற்றாலக் குறவஞ்சி முதலிய நூல்களும், ஆனந்த ரங்கப் பிள்ளை தினசரி, பாரதிபாடல் முதலியவைகளும் சிறந்த உதாரணங்களாம். ஒருண்மை இச் சரித்திரத்தால் புலனுகிறது. தமிழ் மொழியானது தமிழ் மக்களது அறிவு வளர்ச்சிக்கும் தமிழ சமுதாயத்தின் நிலைமைக்கும், சூழ்நிலைக்கும் தக்கவாறு காலத்துக்குக் காலம் வேறுபட்டுக் கொண்டே வந்திருக்கிறது. தமிழ்மொழி மட்டும் இவ்வாறு வேறுபட்டு வந்திருக்கிறது என்று நினைப்பது சரியல்ல. உலகத்திலுள்ள எல்லா மொழிகளும் இவ்வாறே வேறுபட்டுவரும் தன்மையனவே. "மொழி யென்பது எல்லாக் காலத்திலும் ஒரு படித்தாய் வழங்குமாறு அமைந்துள்ளது என்று இப்போது கருதுவார் இல்லை, பூர்வத்திலுள்ள விருத்திக்குரிய அம்சங்களின் முடிவாகவும், பின்னிகழும் விருத்திக்குரிய அம்சங்களுக்கு வித்தாகவும்தான் ஒரு மொழியானது இப்பொழுது கருதப்பட்டு வருகிறது" என்று எஸ்பெர்ஸென்* என்ற மொழி நூலறிஞர் கூறுகிறார். 'நில்லாமை சால நிலைபெற்றதன்றே' என்ற உண்மை மொழி வரலாற்றிற்கும் ஒத்ததேயாகும். ஆகவே, தமிழ் மொழி இனி வருங்காலத்திலும் மாறுபாடடைதல் உறுதி. இக்காலத்துள்ள சில அறிகுறிகளால் இன்ன முறையில் மொழி மாறுபடும் என்பது நாம் ஊகித்துக் கொள்ளக்கூடியதே. விளையும் பயிர் முளையிலே தெரியும் அல்லவா?

---

* A language is no longer taken as something given once for all, but as a result of previous development and at the same time as the starting point for subsequent development.—Jesperson

தற்காலத்திலே எழுதப்படும் நூல்களில் ஒரு முக்கிய மான அம்சம் என்னவென்றால், நூலிற் கூறும் பொருள் களுக்கும் நமது வாழ்க்கையின் இயல்பிற்கும் மிகநெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. முன் காலத்தில் இவ்வகை யான தொடர்பு பெரும்பாலும் இருந்ததில்லை யென்று தான் சொல்லவேண்டும். அக்காலத்திலுள்ள ஆசிரியர் களிற் பெரும்பாலார் கவிதை யுலகில் வாழ்ந்து வந்தவர் கள். அவர்களது கண்முன்பாக நிகழ்ந்த வாழ்க்கையில் அவர்களுடைய கவித்வ உள்ளம் பற்றவில்லை. பலர் அவ் வாழ்க்கையைத் துச்சமாகவும் கருதி ஒதுக்கி வந்தார்கள். கவிதை யுலகிலே வாழ்ந்து; காவிய சிருஷ்டிகளைக் கனவு கண்டு, அந்த சிருஷ்டிகளின் தத்துவங்களிலேயே லயித்து விட்டார்கள். எனினும், அவர்கள் காலத்துள்ள வாழ்க் கையின் சாயல் அவர்கள் இயற்றிய நூல்களில் காணப் படாமல் அறவே ஒழிந்து விடவில்லை. அவர்களது கண் களைத் தப்பி அவர்கள் இயற்றிய நூல்களில் அது மறை வாய்ப் புகுந்து கொண்டது என்றுதான் ஊகிக்க வேண் டும். ஆகவே, சாதாரணமாக உலக வழக்கில் வழங்கி வந்த தமிழ் நடையைக் கையாளுவதற்கே அவர்களால் முடியாமல் போய்விட்டது. உலக வழக்கை இழிசன வழக்கு என்றுகூடக் கருதி விட்டார்கள். இந் நிலைக்கு நேர்மாருக, தற்காலத்தே கவிதை — உலக வாழ்க்கை யானது அறவே போய்விட்டது. நமது தினசரி வாழ்க்கை நூல்களில் பிரதி பலிக்கத் தொடங்கியிருக்கிறது. நமது தினசரிவாழ்க்கை எழுத்தில் சித்திரிக்கப்பட்டு வருகின்றது. நமது தினசரி வாழ்க்கை நூல்களாகப் பரிணமித்து வெளிப்படையாய் உலவி வருகிறது. இக்காரணத்தால் உலக வழக்கிலுள்ள தமிழ் நடையானது நமது நூல்களில் ஏறத்தொடங்கி விட்டது. தமிழ்மொழிக்கு ஒரு நூதன ஜீவசக்தி தோன்றியுள்ளது.

இந்த ஜீவசக்தியானது உரம்பெற்று வளர வொட்டாதபடி ஒரு சிலர் அங்கங்கே முயற்சிசெய்து வருகிறார்கள். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த நக்கீரரது உரைநடையைத் தற்காலத்துக்கு உரிய உரைநடையாக வழங்க வேண்டுமென்று ஒருசில தமிழ்ப் புலவர்களும் அவர்கள் சார்பினரான வேறு சிலரும் வற்புறுத்துகிறார்கள். தொல்காப்பிய முனிவரின் ஆணையைக் கடவாமல் சங்க நூல் வழக்கைப் பின்பற்றித் தற்காலத்தே நூல்கள் எழுதப் பெறவேண்டுமென்று பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆறு பெருக்கெடுத்துக் கரைபுண்டு வரும்போது அதன் போக்கை ஒரு சிறு மண் - அணையால் தடுக்க முடியாது. இதுபோலவேதான் இவர்களது முயற்சியும் பயனற்றது. தமிழ் மக்களது வாழ்வின் போக்கிற்குத் தக்கபடி மாறிச் செல்லவேண்டும் தமிழ் மொழியை அவ் வாழ்வினின்றும் பிரித்துத் தனிப்பட நிறுத்தி, தூர்ந்து போன ஒரு நெறியிலே செலுத்த முயல்வது இயற்கைக்கு மாறானதாகும். மொழியியல்பை உணராத இவர்களது செய்கை அன்னிய நாட்டினர் நகைப்பதற்கு ஏதுவாகும். மேலே குறிப்பிட்ட ஜீவசக்தியானது இவ் இடையூறுகளையெல்லாம் பொருட்படுத்தாது மக்கள் வாழ்விலிருந்து உரம்பெற்று வளம் மிகுந்து இனி வருங்காலத்திலே பல வகையாலும் சிறந்ததொரு மொழியாய்த் தமிழை ஆக்கும் என்பதில் தடையில்லை.

தற்கால வாழ்வானது என்ன வகையிலே நமது முன்னோர்களுடைய வாழ்வினின்றும் வேறுபட்டு விட்டது? இக்கேள்வி யெழுதல் முற்றும் இயல்பே. ஐரோப்பிய நாகரிகத்திற்கும் வாழ்விற்கும் அறிவுக்கும் நம்முடைய வாழ்வுக்கும் ஒரு தொடர்பு இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. இத்தொடர்பு தொடங்கிச் சுமார் 300 ஆண்டுகள் ஆகின்றன. வரவர இத்தொடர்பு வலுத்துக்கொண்டே

வருகிறது. இதனால் நமது வாழ்வு முற்றிலும் மாறிவிட்டதென்றுதான் சொல்லவேண்டும். நமது வளர்ப்புமுறை, கல்விமுறை, ஆசாரமுறை, தொழில்முறை, அரசியல் முறை, நியாய பரிபாலனமுறை, நமது லட்சியங்கள் முதலியன எல்லாம் மாறிவிட்டன. இதுபோன்ற மாறுபாடானது மக்களது வாழ்க்கைச் சரித்திரத்தில் முன் ஒரு காலத்திலும் நிகழ்ந்ததில்லையென்னலாம். இம் மாறுபாடு நமது தமிழ் மொழியைப் பாதிக்காமல் இருக்கமுடியுமா?

இத்தொடர்பு வரவர மிகுதியாய் வலிமை பெற்றுக் கொண்டிருக்கிறது என்று கூறினேன். நமது சகோதரர்களும் சகோதரிகளும் இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று கல்வி பயின்று திரும்புகிறார்கள். ஐரோப்பியர்கள் நமது நாட்டிற்கு வந்து நம்மிடையே வசித்து வருகிறார்கள். கிறிஸ்தவப் பாதிரிமார்கள் நமது மக்களிடையே உழைத்து வருகிறார்கள். நமது கல்வித் திட்டம் பல வகையிலே ஐரோப்பியர் கல்வித் திட்டத்தை ஒத்து அமைய முயலுகிறது. நமது கல்வியும் ஒரு சில ஆண்டுகட்கு முன்வரை ஆங்கில மொழியின் மூலமாய்ப் பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. இது வெட்கக் கேடான காரியமாயிருந்தாலும் ஒருவாறு நன்மைபுரிந்து வந்திருக்கிறதென்றே சொல்லவேண்டும். ஐரோப்பிய நூல்களை நம்மவர்கள் கற்று அவற்றின் மூலமாய்த் திருந்திய ஒரு மனப் பண்பைப்பெற்று வருகிறார்கள். இம் மனப் பண்பிற்குத் தக்கவாறு தமிழ்மொழியும் வேறுபட்டு வழங்கும் என்பதற்குத் தடையென்ன?

நமது அரசாங்கம் 1947 ஆகஸ்ட் மாதம் வரை ஆங்கிலேயர் கைவசத்தில் இருந்தது. இவ்வரசாங்கத்தின் முக்கிய கதி இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டு சபையாரால் தீர்மானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் நடைமுறைகளில் நம்மவர்கள் மேன்மேலும் பங்குகொண்டு வந்து இப்

பொழுதுதான் அந்நடை முறை முழுவதையும் தாமே கைக் கொண்டுள்ளார்கள். அரசியல்—தொடர்பு நம் மக்களுக்குப் பெருகிக்கொண்டு வருகிறது. இத் தொடர்பிற்கு இடங் கொடுத்து நமது தமிழ்மொழி மாறுபடாமல் இருக்க முடியுமா? தற்காலத்தில் வெளிவரும் பத்திரிகைகளை நமது முன்னோர்கள் கற்று உணர்ந்துகொள்ள மாட்டார் கள். தமிழ்மொழி மாறி வருகிறதென்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

நமது கல்வித் திட்டமும் முறையும் மாறி வருகின்றன என்றேன். இம் மாறுபாடு நமது இளைஞர்களைப் பெரிதும் பாதித்து விட்டது. நமது தேசத்தின் எதிர்கால வாழ்வு அவர்களைப் பொறுத்தது. அவர்களுடைய சந்ததியார் களின் வாழ்வு ஓரளவில் அவர்கள் வாழ்வைப் பொறுத் திருக்கிறது. தமிழின் பிற்காலவாழ்வு அவர் அம்மொழியை எவ்வாறு கையாளுகிறார்கள் என்பதைப் பொறுத்துள்ளது. அவர்கள் கையாளும் முறையும் அவர்களுடைய கல்வித் திட்டத்தைப் பொறுத்தது. கல்வித் திட்டத்திலே ஒரு பெரும் பகுதி ஐரோப்பிய விஞ்ஞான சாஸ்திரங்களாகும். இதனால் நமக்கு அளவற்ற நன்மைகள் விளையக்கூடும். இந்தச் சாஸ்திரங்களெல்லாம் மேன்மேலும் வளர்ந்து கொண்டே செல்லும் இயல்புடையன. இந்தச் சாஸ்திரங் களுக்கு இசைய, நமது அறிவியல் நெறிகளும், கருத்து நெறிகளும், உணர்ச்சி நெறிகளும் மாறுபடும் என்பது சொல்ல வேண்டாம். பரந்துபட்ட நாலுணர்ச்சி, அறிவின் உரம், கருத்துத் தெளிவு, ஆராய்ச்சி நெறியின் நேர்மை முதலிய சிறந்த இயல்புகள் விஞ்ஞான சாஸ்திரங்களால் நமது இளைஞர்களுக்கு உண்டாகத் தக்கன. இவ் இயல்பு களுக்குத் தக்கபடி நமது தமிழ் நடையும் மாறுபடும் என்பது கூறவேண்டுமா?

முற்காலத்தில் நாம் கிணற்றுத் தவளேபோல் இருந்தோம். தெரியவேண்டும் என்று நாம் அவாவிக் கற்றதெல்லாம் வடமொழி ஒன்றே. அக்கல்வியால் நேர்ந்த நன்மைகள் மிகப் பலவாய் இருந்தாலும், அக்கல்விக்கும் நமது வாழ்விற்கும் யாதொரு தொடர்பும் இல்லே. கிணற்றுத்தவளேகளாய் வாழ்ந்து வந்த நம்மை மீண்டும் பெருமிதத்தால் ஊதிப் பெருத்துவிட்ட கிணற்றுத் தவளேகளாக அவ்வட மொழிக் கல்வி ஆக்கிவிட்டது. இப்பொழுது ஆங்கிலக் கல்வியும், நீண்டகாலமாய் நிலேத்திருந்த ஆங்கில அரசாட்சியும் பாரத மக்களாகிய நம்மனேவர்க்குள்ளும் ஓர் ஒற்றுமையுணர்ச்சியை—ஐக்கியபாவத்தை—உண்டுபண்ணி விட்டது. நமது உலகமே விரிந்துவிட்டது என்று சொல்லவேண்டும். ஆப்பிரிக்கா தேசமும் மலேயா தேசமும் பர்மா தேசமும் நம்மவர்கள் வாழும் நாடுகளாய் விட்டன. இவ்விரிவிஞல் நமது தமிழ் மொழிக்கு ஒரு பெருநன்மை விளேந்து விட்டது. அன்னிய இலக்கியங்களும் அன்னிய மொழிகளும் அன்னிய கருத்துக்களும் நமது தமிழுக்கு ஒரு புதிய வேகத்தைக் கொடுத்துவிட்டன. இவ்வேகத்தால் நமது தமிழின் நெறி வேறுபட்டு விளங்கும் என்பது சொல்லவேண்டுமா?

தமிழ் மொழியின் நெறியை மாற்றவல்ல சில முக்கியமான விஷயங்களேக்குறித்து இதுவரை கூறினேன். இனி வருங்காலத்திலே தமிழ்மொழி, சாமானிய மக்கள் உள்பட, தமிழ்மக்கள் அனேவருக்கும் பொது உடைமையாய் அமையும். அவர்கள் வாழ்வோடு கலந்து புத்துயிர் பெற்று புதுவாழ்வு வாழும். உலகம் முழுவதையும் அப்போதைக் கப்போது தாக்கி வரும் நூதன சக்திகளுக்குத் தானும் இடம் கொடுத்து, தன் ஆற்றலேயும் வேகத்தையும் பலதிறப்படுத்தி மேன்மையுற்று வளரும். புதுக் கருத்துக்கள், புதுஉணர்ச்சி முதலியவற்ருல், புதுச்சொற்களும்

புதுத்தொடர்களும் புது வாக்கிய அமைதிகளும் பெற்று, தன் அடிப்படையான இயல்பு கெடாதபடி, வளம் பெருகி நிற்கும். விஞ்ஞான சாஸ்திரப் பயிற்சியால் கருத்துத் தெளிவும் கருத்து வரையறையும் ஏற்பட்டு, சொற்களுக் குப் பொருள் வரையறையும் உரைநடைக்குத் திட்பமும் ஆற்றலும் உண்டாகும்!

இவ் இயல்புகளெல்லாம் விரைவில் அமையுமாறு தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் முயல்வோமாக!

# இலக்கிய தீபம்

ஆசிரியர் : எஸ். வையாபுரிப் பிள்ளை

★

பேராசிரியர் அவர்களின் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பதினாறு கொண்டது இந்நூல். ஒவ்வொரு கட்டுரையிலும் இதுவரை பிறரால் அறியப்படாத புதிய முடிவுகள் பல ஆராய்ந்து நிறுவப்பட்டுள்ளன. தமது கொள்கைகளை நிறுவும் பொருட்டு ஆசிரியர் தரும் காரணங்கள் ஒன்றன்மேலொன்றாய் முறைப்பட அமைந்து கற்பார் மனத்தைக் கவர்கின்றன.

சங்க இலக்கியங்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களைக் குறித்தும் முத்தொள்ளாயிரத்தைக் குறித்தும் அமைந்தன பெரும்பான்மைக் கட்டுரைகள். இன்று மறைந்துவிட்ட பாடலிபுத்திரத்தின் சரியான இருப்பிடத்தை உறுதி செய்வதற்குக் குறுந்தொகையில் கிடைத்துள்ள சரிதச் சான்றை விளக்குகிறது ஒரு கட்டுரை. காவிரிப்பூம் பட்டினம், தொண்டி நகரம் என்னும் மறைந்த தமிழ் நாட்டு மாநகரங்களைப்பற்றிய செய்திகளை மிகவிரிவாக இரு கட்டுரைகளிலே காணலாம். எருமணம் என்ற கட்டுரை உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் அந்தச் சொல்லுக்குக் கொண்ட பொருள் சரியானதல்ல என்பதை விளக்குகிறது. இது போன்ற பல சரிதச் சான்றுகளும் சுவையான செய்திகளும் கொண்ட நூல்.

விலை ரூபாய் மூன்று

●


## பாரி நிலையம்

59, பிராட்வே சென்னை-1

# தமிழ்ச் சுடர்மணிகள்

ஆசிரியர்: எஸ். வையாபுரிப் பிள்ளை

●

தமிழ்-அன்னையின் திருக்கோவிலில் நந்தா விளக்காய் நின்றொளிரும் புலவர் பெருமக்கள் இருபத்து மூவரின் வாழ்க்கை வரலாறு இந்நூல். பண்டைப் பெரும்புலவர்களாகிய தொல்காப்பியர், வள்ளுவர், இளங்கோ, கம்பர் முதல் இன்றையப்புலவர் மணிகளாகிய கவிபாரதி, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைவரை தமிழுக்கு ஒளி செய்து விளங்கும் புலமை வித்தகர்களின் வாழ்க்கை வரலாறு, அவர்கள் இயற்றிய நூல்கள், அந்நூல்களில் காணும் நயங்கள் அனைத்தையும் எடுத்துக்காட்டி, பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் இதனை எழுதியுள்ளார்கள். கவிஞர், உரைகாரர், ஆராய்ச்சியாளர், பதிப்பாசிரியர். இசைப் புலவர், நாடகக் கவிஞர் என்று இவ்வாறு பல துறைகளிலும் சிறந்து விளங்கிய பெரியார்கள் பலர் இத் தொகுதியில் இடம் பெற்றுள்ளனர். தொல்காப்பியர், திருவள்ளுவர், கம்பர் முதலிய சில தமிழ்ப் பெரியார்கள் வாழ்ந்த காலம் பற்றிய ஆராய்ச்சி படித்து மகிழ்தற் குரியது. தமிழ்ச் சுவையறிந்த பெருமக்களுக்கு இது ஒரு தெவிட்டாத தீங்கனி.

விலை ரூபாய் ஐந்தரை

●

பாரி நிலையம்,

59, பிராட்வே சென்னை-1.

# எமது சிறந்த வெளியீடுகள்

★

## எஸ். வையாபுரிப் பிள்ளை

| | | | |
|---|---|---|---|
| தமிழ்ச்சுடர் மணிகள் | 5 | 8 | 0 |
| இலக்கிய தீபம் | 3 | 0 | 0 |
| தமிழின் மறுமலர்ச்சி | 2 | 8 | 0 |
| இலக்கணச் சிந்தனைகள் | (அச்சில்) | | |
| சொற்கலை விருந்து | ( ,, ) | | |

## கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

| | | | |
|---|---|---|---|
| மலரும் மாலையும் | 5 | 0 | 0 |
| மருமக்கள் வழி மான்மியம் | 2 | 0 | 0 |
| ஆசிய ஜோதி | 1 | 8 | 0 |
| உமார்கய்யாம் பாடல்கள் | 1 | 4 | 0 |
| கவிமணியின் உரைமணிகள் | 2 | 8 | 0 |
| தே. வி. யின் கீர்த்தனங்கள் | 1 | 12 | 0 |
| குழந்தைச் செல்வம் | 0 | 12 | 0 |

★

**பாரி நிலையம்**
59. பிராட்வே · சென்னை 1.


JACKET PRINTED AT SHANTI PRESS, MADRAS-1